# நகரத்தார் கணக்கியல் முறை




பழ. அண்ணாமலை

# நகரத்தார் கணக்கியல் முறை

பழ. அண்ணாமலை
பள்ளத்தூர்

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை - 600 001.

டாக்டர் சுப. அ[illegible]

முதல்வர் ஆசி[illegible]

தியாக[illegible]

மது[illegible]

விலை : ரூ. 18-00

சென்னை மு.மு. முத்தையா
ஆய்வுத்தளத்தின் வெளியீடு.


கிடைக்குமிடம்

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம்-608001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001
3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641001
20, நந்திக்கோயில் தெரு, திருச்சி-620002

சென்னை போன் : 512996, சிதம்பரம் போன் : 2799



அச்சிட்டோர் : நாகப்பா ஏஜன்ஸி, சென்னை-64.

இவர் நூலின் ... கண...
முறையும், ... இன்...
ஆதாரங்களா...

இன்றை... நகரத்தார்களுடை
கணக்கி... தோன்றும். எனினும்
... கொள்ளக்கூடியதாக அமைந்த
ஓ... ங்காட்ட முயல்வதே இந்த
நூ...

இந்... வதற்கு எனக்குத் துணை
... மு. முத்தையா ஆய்வுத்
... க திரு. மு. மு. முருகப்பன்
... வக்கமும் என்றும் மறக்க
... கள்.

... பெற்றுள்ள பழைய உண்டியல்
... டுகள், போன்ற எல்லா ஆவணங்
... தவியவர்கள் கோட்டையூர் திரு. ரோஜா
... அவர்கள். அவர்களுக்கு மிக்க நன்றி. இந்த
நூலில் கையாளப்பெற்றுள்ள கடைகளின் விலாசங்கள், பெயர்கள் அனைத்தும் என் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

அணிந்துரையும், வாழ்த்துரையும் எழுதிப் பெருமை சேர்த்த இரு அறிஞர்கட்கும், உடன் இருந்து படி எடுத்துப் பிழை திருத்தி உதவி செய்த என் உடன்பிறவா இளவல் தேவகோட்டை முல்லை காந்தி ராமசாமிக்கும், மிக குறைவான நேரத்தில் அழகுற அச்சிட்ட அச்சகத்தாருக்கும் நன்றி.

என் நீண்ட நாளைய அவாவில் உருவான இந்த நூலை என் பெற்றோர்களின் அடிக் கமலங்களில் காணிக்கையாக்கி உங்கள் கரங்களில் தவழ விட்டிருக்கிறேன்.

பழ. அண்ணாமலை

... PUBLIC LIB...
... 1992
... 600 008.

V. PICHAKUTTY, B. Com; F.
Charted Accountant
Phon
Dhana
10, Vidyodaya First Cross Road,
Behind Vidyodaya School
T. Nagar, Madras-600 017.

# அணிந்துரை

நூலாசிரியர் நகரத்தாருடைய சரித்திரத்தையும், நூல் ஆதாரங்களையும் ஆய்ந்து அவர்களுடைய அன்றைய முதல் இன்றைய வரையான வாழ்க்கைகளையும், நடைமுறைகளையும் எளிய நடையில் எல்லோர்க்கும் விளங்கும் வகையில் சொல்லியிருக்கிறார். நகரத்தார்களுடைய வெளிநாட்டுத் தொடர்புகளையும் கடல்கடந்து அவர்கள் தங்களுடைய தெய்வ வழிபாட்டைப் பரப்பிய வகையையும், தொன்று தொட்டுவரும் நகரத்தாருடைய குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும், வழிபாட்டுப் பிரிவு களையும், அவர்களின் பிரிவு வகைகளையும் விரிவாகச் சொல்லி யிருக்கிறார். அவர்களின் கல்யாண முறைகளையும், கி.மு. 3000 முதல் சமீபத்திய காலம் வரை, நகரத்தாருடைய மூலத்தையும், வளர்ச்சியையும் விரிவாகவும் தெளிவாகவும் கையாண்டிருக்கிறார்.

தமிழில் கணக்கு வழக்குகளை எவ்விதம் கையாண்டு வந்தனர் என்பதற்கும், தமிழில் வாணிபக் கணக்கை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கும் இந்த நூல் ஒரு சிறந்த முன்னோடி ஆகும். நகரத்தாருக்கு வெளிநாடுகளில் எங்கெல்லாம் வணிகத்தொடர்பு இருந்தது என்பதையும், அங்கே நகரத்தார் செய்த தொண்டுகளையும், ஏற்படுத்திய கோயில்களையும் லேவா தேவி நடத்தும் முறைகளையும் விரிவாகக் கூறியிருக்கிறார். இலாபகரமாக வட்டித்தொழில் எவ்வாறு நடத்துவது என்பதற்கு இந்த நூல் ஒரு சிறந்த முன்னோடியாகும்.

பிற்கால நகரத்தார் சந்ததியினருக்கு தமது முன்னோர் களுடைய சரித்திரம், அவர்கள் கையாண்டு வந்த வியாபாரயுத்தி கள், கணக்கு வைத்துக் கொண்ட முறை, வட்டித்தொழில் நடத்த

வேண்டிய விதிமுறைகள் ஆய்ந்து அறிந்து சொல்லப்பட்டிருக்கிறது. தமிழில் கணக்கு எவ்விதம் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு இந்த நூல் ஒரு அதிகார பூர்வமான நூலாகும். தமிழில் கணக்கு நடைமுறைகளையும், கொடுக்கல்—வாங்கல் எவ்விதம் கணக்கில் வரவு—செலவு செய்துகொள்ள வேண்டும் என்கிற முறையையும், வைத்துக்கொள்ள வேண்டிய கணக்குப் புத்தகங்கள் எழுத வேண்டிய முறைகளையும், புத்தகங்களிலிருந்து ஐந்துவகை இலாப நட்டக்கணக்குகள், கணக்கு முடித்து ஐந்துகை எடுக்கவேண்டிய முறையையும், கணக்குக்குச் சான்றாக வைத்துக் கொள்ளவேண்டிய வவுச்சர்களையும், குறிப்பு எழுதவேண்டிய முறைகளையும், பேரேட்டில் என்னென்ன கணக்குகள் ஏற்படுத்த வேண்டும் என்கிற விபரத்தையும், கொடுக்கவேண்டிய வரவேண்டிய தொகைகளுக்கு வட்டி எவ்விதம் கணக்கு செய்ய வேண்டும் என்கிற விபரத்தையும் விளக்கமான முறையில் விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

செட்டிநாட்டிலும், தமிழ் நாட்டிலும் வங்கிகளுடைய மூலத்தை ஆராய்ந்து அவற்றிற்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார் களுக்கும் மேற்படியாரின் கணக்குப் பதிவியல் முறைக்கும் என்ன தொடர்பு என்பதைச் சீரிய முறையில் சொல்லி இருக்கிறார். இந்த ஆராய்ச்சிக்காக உபயோகப்படுத்தியுள்ள பட்டையம், உண்டியல் கள், புரோநோட்டுகள், அண்டிமேன்கள், இரசீதுகள், டிபாசிட்டு ரசீதுகள், பிற்காலச் சந்ததியினருக்கு ஒரு சிறந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த முன்னோடியாக விளங்கும்.

நகரத்தார் வியாபார சம்பந்தமாக முதலாளி, கூட்டாளி, எவ்விதம் கடிதப்போக்குவரத்து செய்வர் என்றும், கடிதங்களில் தங்களுடைய கட்டளைகளையும், குறிப்புகளையும் எவ்விதம் தெரிவித்துக்கொள்வர் என்பதையும், கடையினுடைய மேலாள் முதலாளிக்குக் கடையினுடைய அன்றாட நடப்புகளை எவ்விதம் தெரிவித்து முதலாளியினுடைய ஒப்புதல்களைப்பெறுவர் என்கிற முறையையும், கணக்கிலுள்ள குறைபாடுகளை எவ்விதம் கண்டு பிடித்துச் சரிசெய்வது என்பதையும் விளக்கியிருக்கிறார்.

புத்தகத்தின் முடிவில் ஒரு மாதிரிக்குறிப்பு, பேரேடு, ஐந்துகை, கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி எல்லோருக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும். தமிழ், வாய்ப்பாடுகள் தற்போது

நடைமுறையில் இல்லாது போனாலும், பின் சந்ததியினருக்கு, தமிழில் கணக்கு வைத்துக்கொள்ளும் எண்ணம் உள்ளவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். கணக்குப் பதிவியலில் ஆர்வம் உள்ள எல்லாருக்கும் நகரத்தார் தமிழில் கணக்குப் பதிவியலை எவ்வாறு கையாண்டு வந்தனர் என்பதற்கும், நகரத்தார் கணக்கியல் முறைக்கு இந்த நூல் ஒரு நல்லஆராய்ச்சி நூலாகும். இந்த நூல் மூலமாக திரு. அண்ணாமலை நகரத்தார் சமூகத்துக்கும், கணக்குப் பதிவியல் துறைக்கும் ஒரு சிறந்த சேவை செய்தவராகிறார்.

(ஒப்பம்) **V. பிச்சக்குட்டி**

# ஒன்று

உலகமெல்லாம் தன் ஆளுகைக்குள் வரவேண்டும் என்ற எண்ணத்தில் ஆங்கில ஏகாதிபத்தியம் வர்த்தகம் என்ற பெயரால் முதல்முதலில் இந்தியத் தீபகற்பத்தில் கல்கத்தாவில் கி.பி. 1600 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி என்ற நிறுவனத்தைத் தொடங்கிற்று. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி தென்னிந்தியாவில் பரவிய காலம் கி.பி.1800. இந்தக்காலகட்டத்திற்கு ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்பே* நகரத்தார்கள் சோழநாட்டை விட்டுப் பாண்டிய நாட்டின் செட்டிநாட்டுப் பகுதியில் குடியேறி வாழத் தொடங்கினர்.

தொடக்க காலத்தில் நாக நாட்டிலுள்ள சந்தியாபுரி என்ற நகரத்தில் மரகதவிநாயகருக்கு வழிபாடும், சிவபூஜை முதலான தெய்வ வழிபாடுகளும் செய்து கொண்டு எல்லாச் செல்வங்களும் நிரம்பப்பெற்றவர்களாய், சிவச் சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் முதலியன அணிந்துகொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். பின்னர் கலியுகம் 204 ஆம் ஆண்டிலிருந்து தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்திலும், கலியுகம் 2312** முதல் சோழநாட்டில் காவிரிப்பூம்பட்டின நகரிலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களே அந்த நாட்டின் முக்கியமான குடிமக்களாகத் திகழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் தங்கக் கலசங்கள் வைத்துள்ள மாளிகை போன்ற இல்லங்களை உருவாக்கிக்கொண்டு, தங்களுக்கான சிங்கக்கொடியையும் அமைத்துக் கொண்டு, வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பூங்கொன்றை நாட்டு வேலங்குடிக் கல்வெட்டுக்குறிப்பால் இன்றைக்குச் சுமார் 1280

* கலி 3815ல் (கி.பி. 714)

** (கி.மு. 789) கலி 2312

ஆண்டுகட்கு முன்னர் (கலியுகம் 3808) பாண்டி நாட்டரசன்,
நாட்டு ராஜபூஷணச் சோழ மன்னனிடம், தன் நாட்டிற்கு
களும், வாணிப வைசியர்களும் வேண்டும் எனக் கேட்டுக்கெ
தற்கிணங்க, நடுநிலையும், நாணயமும், நலம்பலவும் நிை
இரத்தின மகுட வைசியர்களாகிய நகரத்தார்களை பாண்
சென்று வாழும்படி வேண்டிக்கொண்டான். நகரத்தார்கள
வாறே முதல் முதலில் பாண்டி நாட்டுக்கு வந்து குடி
இங்ஙனம் அந்த நகரத்தார்கள் தாங்கள் வாழ்ந்து வ
எல்லையை

''வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும்—ஒள்ளியசீர்
எட்டிக் கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டி நாட் டெல்லையெனச் செப்பு''

என்று மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் கவி
யில் கண்டபடி வகுத்துக்கொண்டு, பலர் முத்துராமலி
மாவட்டத்திலும்(அன்றைய இராமநாதபுரமாவட்டம்),சிலர்பு
கோட்டை சமஸ்தான எல்லையிலும் (இன்றைய புதுக்கோட்
மாவட்டம்) குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாண
செழிப்பில் சிறந்து விளங்கினர். காவிரிப்பூம்பட்டினத்திலிரு
இவர்கள் பாண்டிய நாட்டிற்கு வந்த வரலாறு A General Hist
of the Pudukottai State என்ற நூலிலும் காணப்பெறுகிறது.

*** The Nattukottai Chetties are said to have come over to these parts from Kaveripoompattinam, a village at the mouth of river Kaveri. They are said to have been patronised by the Chola Kings and to have enjoyed the honour of placing the crown on the head of every Chola King at the time of his installation. The story that is given to account for their emigration is that a Chola King wanted to commit an outrage on a Chetti woman and the Chetties therefore left the Chola land in a body and settled to the South of river Vellar, the Southern boundary of the Chola Kingdom, vowing never to permit their women to cross the Vellar and get into the Chola land again. A different account is given however by Mr. EDGAR THURSTON according to whom, a Pandiya King named SOUNDARAPANDIYAN is said to have asked the Chola King to induce some of the vaisyas in his land to settle down in the Pandiya territory and allowed them to settle in the back of country North of Vaigai East of Piranmalai and South of Vellar.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் காவிரி நதியின் முகத் ர்த்திலிருக்கும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் சோழமன்னர் ஆதரிக்கப்பெற்று வந்ததாகவும், சோழ மன்னர்கள் பட்டத் ரும்போது, மணிமுடி சூட்டும் பெருமையும், உரிமையும் தார்கள் என்றும் கூறப்படுகிறது. சோழமன்னன் ஒருவன் தார் குலத்துப் பெண் ஒருத்தியைச் சிறை செய்ய விரும்பிய அவர்கள் அனைவரும் சோழநாட்டைவிட்டு, இனி தங்கள் களை வெள்ளாறு தாண்டி சோழ நாட்டிற்கு விடுவதில்லை உறுதிப்பாட்டுடன் வெள்ளாற்றுக்குத் தெற்கே ஒரு கூட்ட வந்து குடியேறியிருக்கின்றனர்'' என்றும் இந்த ஆய்வாளர் ப்பிட்டிருப்பதைக் காண்கிறோம்.

இன்று வாழ்கின்ற மக்களுக்கு ''நாட்டுக்கோட்டை நகரத் ர்கள்'' என்றால் செட்டியார் என்றுதான் தெரியும். இவர் க்கு 'பிரதான வைசியர்', மகுட வைசியர், தன வைசியர், ரத்தின வைசியர்' 'உபயகுல பூபால வைசியர்' 'சந்திர கங்காகுல சியர்', 'சிவகோத்திர வைசியர்', 'இளையாற்றங்குடி நகர சியர்'' 'நாட்டுக்கோட்டை நகர வைசியர்' என்னும் ஒன்பது ரணப் பெயர்களால் அழைக்கப்பெற்றனர். இதற்கு ட.சொ. ஆண்டியப்பன் அவர்கள் எழுதிய ''சிவகோத்திர வைசிய விருத்தி''—பாகம் 1 என்ற நூலில் ''மேதக்க சோழவளநாடு சோறுடைத்து, என நமது ஒளவைப் பிராட்டியார் புகழ்ந்து கூறப் பெற்ற, எந்நாட்டிலுஞ் சிறந்த நன்னாடாகிய சோழநாட்டுக்குத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்து, பலவகை வைசி யரினும் பெருந்தன்மையும் பேரறச் செய்கையுமுடையராய், பூரணமாக நிறைந்த செல்வப் பேருடையராய், பலவகை நல்லொழுக்கங்களிலும் சிறந்தோராய் விளங்கினாராகலின் பிரதான வைசியர் என்றும், சோழமன்னர் மக்கட்கு முடிசூட்டுங் கௌரவமுடையராய் அக்காலம் வாழ்ந்து வந்தராகலின் வைசியர் என்றும், இந்தக்காலத்தும் நிறைந்த செல்வபேறு உடையராகலின் தனவைசியர் என்றும் இஃதோடு இரத்தின வியாபாரச் செய்கை யுடையராகலின், இரத்தின தனவைசியர் என்றும், 'உழவர் மேழியர் காராளிளங்கோ புகழ் பூபாலர் பூவைசியர்' பெயரே என்பது பிங்கலந்தைச் சூத்திரமாகலின் பூவைசியராகிய கெங்கா குல வேளாளப் பெண்களை திருமணம் செய்து கொண்டாகர் களாகலின் உபயகுல பூபால வைசியர் என்றும், நமது கோத்திராதி

யளவை கட்கு இலக்காகவும், அடிப்பீடமாகவும் நிற்பன சிவாலய மாகலின் சிவகோத்திர வைசியர் என்றும், ஒருபோது நமது மரபார் யாவரும் ஒருங்கே இளையாற்றங்குடி நகரத்தில் மட்டும் வாசஞ்செய்து கொண்டிருந்தராகலின் இளையாற்றங்குடி நகர வைசியர் என்றும், பாண்டிவள நாட்டின்கண் இளையாற்றக்குடி நகரம், நாட்டுக்குள் கோட்டைபோல், நடு மண்டலமாக அமைந்து இருந்தமையால், அங்கே இருந்தவர்களுக்கு நாட்டுக்கோட்டை வைசியர் என்னும் காரணச் சிறப்புப் பெயரும் தோன்றலாயின''.

நகரத்தார்கள் இப்போது பாண்டிவளநாட்டின் பசும்பொன் முத்து ராமலிங்க மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தி லும் தங்கி வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தங்கி வாழும் பகுதியை "செட்டிநாடு'' என்னும் பெயரால் அழைக்கிறார்கள். இவர்கள் முன்னர் தங்கி வாழ்ந்த ஊர்கள் இந்த இரு மாவட்டங் களிலும் சிறு சிறு கிராமங்களாக இருந்ததால், நாகரீகத்தின் வளர்ச்சியாலும், தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற அவாவினாலும், இந்த மாவட்டங்களுக் குள்ளேயே 96 ஊர்களை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தனர். காலத்தின் வளர்ச்சியில் தங்கள்வாணிபம் கருதி வேற்றூர்களுக்குச் செல்ல வேண்டிய காரணம் ஏற்பட்டதால், இவர்கள் இப்போது 74 ஊர்களில் மட்டுமே வாழ்ந்து வருகின்றார்கள். இவை பற்றிய விளக்கங்களும், ஊர்ப் பெயர்க்காரணங்களும் இந்நூலாசிரியரது "செட்டிநாடு ஊரும் பேரும்'' என்ற மற்றொரு நூலில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

தற்போதைய தமிழகத்தில் சிறுபான்மைப் பிரிவினராக வாழ்ந்து வருகின்ற நகரத்தார் சமூகத்தினர் தங்களுக்கு ஒன்பது வகுப்பும், 23 உட்பிரிவுகளும் உடையவர்களாயிருக்கின்றனர். இந்த 9 வகுப்பாரும் இன்றும் ஒன்பது கோயிலார் என்ற பெயருடன் வாழ்ந்து வருகிறார்கள்.

வணிகர்களைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களில் மிகுதியும் காணப்பெறுகின்றன. அவர்களின் அழியாத புகழைச் சொல் வதற்கு அந்த நூல்களே சான்றாகக் கிடக்கின்றன. முற்கால வணிகர்களின் உயர்வினை உணர்வதற்கு இரண்டொரு சான்றுகள் காட்டுவது மிகவும் பொருத்தம். வணிகர்கள் நம்பிக்கைக்கு உரியர்கள் என்பதை மணிமேகலை நன்கு எடுத்தியம்புகின்றது. நாகநாட்டு அரசன் மகள் பீலிவளை என்பவள் நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழ அரசனுக்குத் தான் பெற்றெடுத்த குழந்தையோடு

மணிபல்லவத்தீவிற்கு வந்தபோது, கப்பல் வாணிபம் செய்யும் கம்பள செட்டி என்பவனது கப்பல் அங்கே தங்கி இருப்பதைக் கண்டாள். பீலிவளை, கம்பளச் செட்டியிடம் சென்று, குழந்தையைக் காட்டி "இவன் சோழ மன்னனின் புதல்வன். இவனை இவன் தந்தையிடம் சேர்த்துவிடவேண்டும்" என்று கேட்டதும், பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட கம்பளத்துச் செட்டி, குழந்தையை மன்னனிடம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே கப்பல் ஏறினான் என்று, ஆபுத்திரனோடு மணி பல்லவம் அடைந்த காதையில் அறிய முடிகிறது.

இந்த வணிகர்கள் கருணை உள்ளம் படைத்தவர்கள் என்பதை சீவக சிந்தாமணி மூலம் அறிய முடியும். கந்துக்கடன் என்ற வணிகன், தன்னுடைய இறந்துபோன குழந்தையை எரிப் பதற்காக மயானத்திற்கு மிகத் துன்பத்துடன் வந்தான். அதற்கு முன்பே கச்சந்தன் மனைவியாகிய விசயை என்பவள் அரசன் உத்தரவுப்படி மயில் மீது ஏறிவந்து, மயானத்தில் சீவகன் என்ற குழந்தையைப் பெற்றாள். அந்த மயானத்துத் தெய்வம் ஒன்றின் ஆணைப்படி தனியே கிடத்திச் சென்றாள். கந்துக்கடன் தன் குழந்தையை எரியூட்ட வந்த போது, தனியே கிடந்த சீவகனைக் கண்டு மகிழ்ந்து, அந்தக் குழந்தை கைவிரலில் இருந்த மோதிரத் தால் இது அரசனது குழந்தையே என அறிந்து அன்போடு எடுத்து ராசமாபுரத்தில் உள்ள தன் வீட்டுக்குச் சென்றான். புத்திரனை இழந்த சோகத்தால் புலம்பிக் கொண்டிருக்கும் தன் துணைவி யிடம் "இறந்த குழந்தை பிழைத்து எழுந்தது" என்று கூறித் தங்கள் இல்லத்திலே வைத்து இனிதே வளர்த்து வந்தார்கள், என்று சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் செய்யுள் 285—302 மூலம் அறிய முடிகிறது.

வணிகர்கள் நல்ல நட்புக்கு இலக்கணமானவர்கள் என்பதை யும் நண்பனுக்காக எந்தக் காரியத்தையும் செய்யக்கூடிய இயல் பினர்கள் என்பதையும் இதே சீவக சிந்தாமணியில் வரும் காந்தருவதத்தையின் மணம் ஸ்ரீதத்தன் என்னும் வணிகனால் நடைபெற்றது என்பதை காந்தர்வதத்தையர் இலம்பகம் செய்யுள் களால் காணமுடிகிறது.

இந்தத் தனவணிகர் குலத்தில் கடவுள் பெருமையும், கடவுள் அறமும், கடவுள் பேறும் பெற்றுயர்ந்த தெய்வ மனிதர்கள் பலர் தோன்றியுள்ளனர். இவர்களுடைய செயல்களைப் பழைய தமிழ்

நூல்களிலும், புராணங்களிலும் மிகுதியும் காணலாம். நல்ல சிவ நெறியில் நின்று, அறப்பணி செய்த அப்பர், வள்ளலார், தாயுமானவர், சேக்கிழார், சாத்தனார் போன்ற அறவோர்களைப் போல சிறந்தவர்கள் பலர் இருந்து இருக்கின்றனர். அவர்கள் எல்லாம் மனித இனம் உய்யும் வழிக்கு வழி காட்டும் ஒழுக்க சீலர்களாய் விளங்கினர். இங்ஙனம் ஆண்டவன் அடியார்க்கு அன்பு செலுத்தி மனிதத் தன்மையடைந்த பலர் வாழ்ந்திருந்த போதும், இங்கு குறிப்பாக சிலரைமட்டும் குறிப்பிடுவதும் பொருத்தமாகும். கப்பல் கப்பலாய்ப் பொருள் சேர்த்துப் பெருஞ் செல்வந்தராய் விளங்கிய பட்டினத்தார், வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து இல்லறத்தின் முழுநிலை எய்தி, துறவு பூண்டவர். உலக மக்கள் அருள் ஒளி அறிந்து, இறைநெறி உணரச் சிவனடி சேர்ந்தவர்.

''பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்,
சிவனுக் குள்ளே சிவமணம் பூத்தது''

என்பார் திருமூலர். அதுபோல பட்டினத்தடிகளின் உள்ளத்தில் மெய்யறிவு வேரூன்றி, ஞானமலர் அரும்பி மலர்ந்து, சிவமணம் கமழ்ந்து பரவியது. எண்ணமெல்லாம் இறைவன்பால் அமைந்து விட்டதால், தலைசிறந்த சிவனடியரராகத் திகழ்ந்தனர்.

''முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதும் கண்டும் பின்னுமந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்று அறிவாரில்லையே''

என்று நெஞ்சுருகப் பாடி, ஆண்டவனின் அடிசேர வேண்டுமென்று அகில உலகிற்கும் அறிவுறுத்திய சிவநேசச் செல்வர்—நாட்டுக் கோட்டை செட்டியார்களில் ஒருவர் என்பதைத் தமிழுலகு நன்கு அறியும்.

சீலம் நிறைந்த செல்வம் என்னும் இறைவர்க்குரிய பூர்ண நிலையடைந்து—அன்பு, சமயவழி முதலியவற்றால் உள்ளத்திலே இறைவனைக் கண்டு தெய்வ உருவாய் விளங்கியவர் இயற்பகை நாயனார், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர்கள் தனவணிக மரபில் தோன்றியவர்கள். எவர் வந்து எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பது என்ற விரதத்தை மேற்கொண்டவர்கள். இவர்களுடைய மன

நிலையைச் சோதனை செய்ய எண்ணிய இறைவன், ஒருநாள் தொண்டர் உருவில் அவரிடம் சென்றார். இயற்பகையார் அவ்வடி யாரைத் தொழுது வரவேற்று தன்னால் ஆகவேண்டியது எதுவு மிருப்பின் கூறுமாறு வேண்டினர். அடியவரும் அவரிடம் ஒன்றை விரும்பி வந்ததாகக்கூற, அவரும் தன்னிடம் உள்ளதாய் இருப்பின் தயங்காது தருவதாகவும் கூறினர். சிவனடியார் உருவில் வந்த இறைவன் தனக்கு இயற்பகையாரின் மனைவியைத் தரும்படி கூறினர். இயற்பகையார் கொஞ்சங்கூட மனங்கோணாமல் தம் மனைவியை வழங்கி அவர் அடி பணிந்து நின்றார். தாம் ஏற்ற விரதத்திற்கு எந்த நிலையிலும் கேடு நிகழாத முறையில், தான் எடுத்துக்கொண்ட உறுதியையும், உண்மை நிலையையும் காப்பதற்கு எவருக்கும் அஞ்சாத மனத்திண்மையையும் பெற்ற தனாலேயே இந்தச் செய்கையைச் செய்ய முடிந்தது. இப்பெரு மகனாரது பெருமையைக் கண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளே,

"இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்"
என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

இத்தகைய இனிய இயல்புடைய செயற்கரிய செய்த 'தெய்வப் பெரியார் இயற்பகை நாயனார்' தனவணிக குலச் சிவ மணிகளில் ஒருவர் என்பதை இந்தத் தமிழுலகம் நன்கு அறியும். இவர்கள் அருளாளரைப் போற்றும் இயல்பினர். அந்தண்மையாளரை ஆதரிக்கும் தன்மையினர். எதுவும் அழியும் தன்மை வாய்ந்த இவ் வுலகில், என்றும் அழியாது நிற்பது தர்மம் ஒன்றேயாகும் என்று அறிந்த நகரத்தார் மரபினர், தர்மநெறி நின்று தாம் ஈட்டிய பொருட்செல்வத்தை ஈந்து நுகர்வதே இன்பம் என்றெண்ணும் இயல்பினர். நகரத்தார்களுடைய முற்காலத்தின் சமயப்பற்றின் தன்மை இத்தகையதாய் இருந்தது என்று சொன்னால், இன்றைய நாகரீகப்போக்குடைய பலருக்கும் அது வியப்பாய் இருக்கும். எனினும், அவர்களைப்பற்றிச் சிறிதாவது கூறாது விடுப்பின், பயனுள்ளதாக அமையாது. சிவதர்ம சீலர்களாக நகரத்தார்கள் வாழ்கின்ற காரணத்தால், அவர்கள் ஒவ்வொருவருடைய நெற்றி யிலும், மேனியிலும் திருநீறு பொலிந்திருக்கும். அதற்குமேல், சந்தனப்பொட்டு இனிதாக இலங்கிக் கொண்டிருக்கும். தலையில் முடி இருக்காது. கழுத்தில் உருத்திராக்கம் அணிந்திருப்பார்கள். ஏறத்தாழ முழுநீறு பூசிய முனிவர்கள் போல, அறுபத்து மூவர் கோலந்தான். சிவாகம புராணச் சீலர்களாய், சிவஞானச் செல்வர் களாய், சைவப்பழமாக விளங்கி மலர்ந்து கனிந்தார்கள் என்று

சொல்லலாம். அந்தக் காலத்து நகரத்தார்கள் எல்லாம் எப்பொழுதும் சிவபக்தியும், சிவசிந்தனையும் பெரிதும் உடையவர்களாய் இருந்ததால், இவர்கள் எது எழுத எழுதுகோல் எடுத்தாலும், முன்னதாக பிள்ளையார் சுழி சிவமயம் எழுதிய பிறகுதான், எடுத்துக்கொண்ட செய்தியை எழுதத் துணிவார்கள். இன்றைய நாளில் இந்தப் பழக்கம் இன்னும் ஒரு சிலரிடமாவது இருந்து வருவதை நம்மில் காண முடிகிறது.

சுண்டைக்காடு வேலங்குடி கல்வெட்டுக்களில் இருந்து நகரத்தார்களின் சரித்திரத்தை ஆராயும்போது, அவர்களுடைய பூர்வீக இருப்பிடம், பின்னர் தொண்டை மண்டலம் வந்தது, அங்கிருந்து காவிரிப்பூம்பட்டினம் வந்தது, அதன் பின்னர், பாண்டிய நாட்டிற்கு வந்து ஒன்பது கோயில்களை அமைத்துக்கொண்டு வாழத் தொடங்கிய விபரங்களைக் கீழ்க்கண்ட இந்த அத்தியாயத்தின் முடிவில் கண்டுள்ள பட்டியல் மூலம் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் "The Ancient History Of Nagarathars"[1] என்ற கட்டுரையிலிருந்து அறிய முடிகிறது.

தனவணிகரைச் செட்டிகள் என்பர், வடநாட்டில் சேட்டுகள் என்பர். சிரேஷ்டி என்ற பதமே இவ்வாறு மருவி வழங்குகிறது. சிலர் சிக்கனம் என்ற சொல்லிலிருந்து வந்ததுதான் 'செட்டி' என்று கூறுகின்றனர். முன்னாள் நடுவண் அரசு அமைச்சரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான டாக்டர் எஸ். சந்திரசேகரன் அவர்கள் 'செட்டி' என்ற சொல்லுக்கு[2] கூறும் விளக்கம் :

"The term Is derived from the Sanskrit word Shresti. The root of the Sanskrit term Shresta means important or superior, and it has even come down to this day as a proper surname as Mr. Kula Shreshta (meaning prominent family or one belonging to such a family). Jawaharlal Nehru - writing in a different context, points out, "The chettys of Madras have also been leaders in business and banking, especially from

1. An article 'The Ancient History of Nagarathars' by Dr.V.SP. Maneickam - Collected Papers - Published by him in 1978.
2. "The Nagarathars of south india" Dr S. Chandrasekaran published by Macmillan company of India Ltd., in 1980.

ancient times. The word 'Chetty' is derived from the Sanskrit 'shresty', leader of merchant guild. The common appelation, 'seth' is also derived from 'shreshti'. The Madras chettys have not only played an important part in south India, but they have spread out all over Burma, even in the remote villages" (Discovery of India by Pantit Jawaharlal Nehru - page 351). Thus Chetty in the south and seth (or sethji, a common denominator for rich merchants) in North India are popularly held to be derived from the sanskrit 'shreshta', meaning great or prominent."

இத்தகைய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தமிழ்நாட்டில் சிறுபான்மைப் பிரிவினராகத் தங்களுக்குள் ஒன்பது கோயில் களையும் 23 உட்பிரிவுகளையும் அமைத்துக்கொண்டு, திருமண உறவுமுறைகளை நடத்திக்கொண்டு வருகின்றனர். இந்த ஒன்பது நகரக்கோயில்கள் பாண்டிய மன்னர் ஒருவரால் இவர்களுக்கு வழங்கப்பட்டதென நகரத்தார் சரித்திரம் கூறுகிறது.

தன வணிகர்கள் வணங்கி வழிபடுகின்ற தெய்வங்களில் தலையாய தெய்வம் முருகக் கடவுளே. குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன் இடத்தில் பேரன்பு பூண்டவர்கள், பெரும்பக்தியுடை யவர்கள். குன்றுதோறாடும் குரமனைக் குலதெய்வமாகக் கொண் டாடும் தன்மை தனவணிகர்களுக்கு இன்றும் உரியது என்பதை இடையறாது நினைந்து நினைந்து உருகி உருகி வழிபடும் பேறு பெற்றவர்கள். விண்ணிலே எழுந்த முழுமதிபோல், என்றும் அருள் ஒளிகாட்ட வேல் பிடித்து விளங்கும் செந்தமிழ் முருகனை இவர்கள் சிந்தையில் வைத்ததில் வியப்பே இல்லை.

எத்தகைய சிவபக்தியும் மனத்திண்மையும் உடையவர் களாக இருந்தாலும், விதிவசத்தால் சிற்சில நேரங்களில் இவர்களிடையே சிறுசிறு பிணக்குகள் கொண்டதாலும்—ஒரு சந்தர்ப்பத்தில் இவர் களிடையே ஏதோ ஒரு மனக்கசப்புத் தோன்றியதன் காரணமாக, ஒரே கூட்டுக்குழுவாக இருந்தவர்கள் பாண்டிய நாட்டின் தென் பகுதியில் தொண்ணூற்றாறு ஊர்களை ஏற்படுத்திக் கொண்டு, குடியேறி வாழ்ந்தனர். இவர்கள் சைவசமயப் பற்றில் மட்டும் சிறந்தவர்களல்ல, சிறந்த வணிகர்களாகவும் விளங்கினார்கள் என்பதை இனிவரும் பகுதியில் காண்போம்.

| (1) சாலி வாகன ஆண்டு | (2) கலி ஆண்டு | (3) தமிழ் ஆண்டு | (4) கிறித்தவ ஆண்டு | (5) அரசர்கள் | (6) நாடுகள் |
|---|---|---|---|---|---|
| 203 வரை | 203 வரை | — | கி.மு. 2898 | — | நாகநாடு சந்தியாபுரி |
| 204 | 204 | — | கி.மு. 2897 | பிரதா ராசன் | தொண்டை மண்டலம் காஞ்சீபுரம் |
| — | 2312 | விரோதி | கி.மு. 789 | மனுநீதிச் சோழன் | சோழநாடு காவிரிபூம் பட்டினம் |
| 596 | 3775 | — | கி.பி. 674 | பூவந்திச் சோழன் | மேற்படி |
| 605 | 3784 | — | கி.பி. 683 | இராஜ பூஷணச் சோழன் | மேற்படி |
| 622 | 3799 | — | கி.பி. 700 | மேற்படி | மேற்படி |
| 629 | 3808 | பிலவங்க வைகாசி வெள்ளிக் கிழமை | கி.பி. 707 | செளந்தர பாண்டியன் | பாண்டிய நாடு ஓங் காரக்குடி |

| (7) நிகழ்ச்சிகள் | (8) குருஸ்தானம் | (9) வணங்கிய இறைவன் பெயர் | (10) ஏனைய பிற குறிப்புகள் |
|---|---|---|---|
| பூர்வீகக் குடியிருப்பு | சதாசிவ குருபீடம் | கோமதீஸ்வரர் | மரகதவினாயகர் வழிபாடு. சைவ சித்தாந்த வாழ்க்கை முறை நவரத்தின வியாபாரம். |
| நாகநாட்டு அரசனின் கொடுமையில் முதல் குடியேற்றம் | அருணகிரி சிவசங்கராச்சாரியார் | சத்தியபுரீஸ்வரர் | மண்ணினை மரியாதை மேற்கண்ட வாழ்க்கை முறைகளுடன் புஷ்கரணி நதியில் தீர்த்தம் ஆடுதலும் |
| காஞ்சி அரசனின் கொடுமைகளால் இரண்டாவது குடியேற்றம் | சிதம்பரம் ஈசானிய சிவாச்சாரியார் | ருத்திரபுரீஸ்வரர் | காவேரியில் நீராடுதல். எண்ணாயிரம் குடும்பங்கள் மூன்று தெருக்களில் சிங்கக் கொடியுடன் தங்கக்கலசங்களை அமைத்து அரசர்க்கு முடிசூட்டும் தகுதி பெற்று இரத்தின மகுட வைசியர்களாக மரகத வினாயகரை வழிபட்டு வாழ்ந்தனர் |
| மூன்று வகுப்பாரின் ஆயிரத்தி ஐநூற்றி இரண்டு ஆண் குழந்தைகள் நீங்கலாக மற்ற அனைவரும் உயிர் நீத்தல் | திருவாரூர் கும்பகோணம் ஸ்ரீவாஞ்சியம் மூன்று ஊர்களில் வெள்ளாளப் பெண்களுக்கு மூன்று குருமார்கள் | | மரகத வினாயநர் வழிபாடு ஆத்மநாத உபாத்தியாயர் 1502 ஆண் குழந்தைகளையும் அழைத்து வருதல். வைசியர்களுக்கும் வெள்ளாளர்களுக்கும் உடன்படிக்கை. 1502 ஆண் குழந்களும் வெள்ளாளப் பெண்களை மணத்தல் |
| முடி சூட்டுதல் | பெண்களுக்கு உபய குருக்கள் | — | உபயகுல பூபால வைசியர் இரத்தினதன மகுடபூபால வைசியர், சந்திராங்கா குல வைசியர் |
| — | வைசியப் பெண்களுக்கு உபய குரு ஏற்படுத்துதல் | — | குருக்களின் மூத்த புதல்வர்களைக் குரு ஸ்தானமாக ஏற்படுத்துதல் |
| பாண்டிய மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கி தற்போதுவாழகின்ற பகுதிகளில் மூன்றாவது குடியேற் | பாண்டிய நாட்டு ஆச்சாரியார் | | கீர்த்திபூஷணப் பாண்டியனும் 18 அரசர்களும், கிராமங்களும கோயில்களும் பிரித்துக் கொள்ளல்,மூனறு வகுப்பாரிடையே ஒற்றுமைக் குறைவு. சாதி முறை நியாயங்கள் தீர்மானித்தல் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 634 | 3813 | — | கி.பி. 712 | — | மேற்படி |
| 636 | 3815 | — | கி.பி. 714 | — | மேற்படி |
| 640 | 3819 | — | கி.பி. 718 | — | மேற்படி |
| 1083 | 4262 | — | கி.பி. 1161 | காருண்ய பாண்டியர் | — |
| 1220 | 4389 | சர்வதாரி | கி.பி. 1288 | — | சேரநாடு |
| 1463 | 4644 | — | கி.பி. | — | பாண்டியநாடு |
| — | 4665 | — | 1464 | — | — |
| 1487 | 4666 | அட்சய ஐப்பசி முதல் தேதி திங்கள் கிழமை | | — | — |

| (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|
| ஒன்பது கோயில் நிர்மாணித்தல் | — | — | இளையாற்றக்குடி நகரத்தார்களிடம் மன வேறுபாடு. அதிவீரபாண்டிய புரம் திருவுனசக்கரவர்த்தி நியமராஜன் போன்றசரித்திரப் பெயர்கள் |
| இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமங்கோயில், இலுப்பைக்குடிக்கோயில்கள் தோற்றம் | — | — | — |
| சூரைக்குடி, வேலங்குடிக் கோயில்கள் தோற்றம் | | | |
| முத்துமீனாளை விடுவிப்பதற்கு ஒக்கூருடையார் ஒரு தலைவேனாகத் தந்தது. | — | — | ஒக்கூருடையாருக்கு முதல் மரியாதை, அரசன் தண்டனையைக் கட்டாயப்படுத்தவில்லை. |
| அரியூர்ப்பட்டிணத்தில் 64 வைசியர்கள் கேரளாவில் குடியேற்றம் | — | — | சேரநாட்டிலுள்ள கொட்டாரக்கரையில் வைசியர்கள் வசம் மரகதவிநாயகர் |
| நாட்டரசன் கோட்டையில் இடர்ப்பாடுகள் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் | வைசியர்களின் ஒரு பதிக்கு திருப்புனவாயில் குருவும், மற்றவர்களுக்கு நிரம்ப அழகிய குருவும் | | குருஸ்தானங்களின்வேண்டுகோளையும் மீறிப் பெண்கள் தண்டிக்கப்பட்டனர் 2 குருக்கள்கங்கையில்குளித்து முக்கி அடையச் செல்லல் |
| 21 ஆண்டுகளுக்குப்பிறகு பாண்டியர்குருக்கள் திரும்புதல் | — | — | பாண்டியநாட்டு திருப்புனவாசல் குருஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளுதல் |
| இளஞ்சேரிப் பட்டணத்தில் குருஸ்தானம் தோற்றுவித்தல் | திருப்புனவாயில் இராமநாத சுவாமி | — | ஆண்களுக்கு கலாமடம், பாதரக்குடியிலும் பெண்களுக்கு துளாவூரிலும்மடங்கள் தோற்றுவித்தல் |

# இரண்டு

நகரத்தார்களைப்பற்றி மாநிலக் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுவதை உற்றுநோக்கினால் நகரத்தார் சிறந்த வணிகர்களே என்பது புலனாகும் (1)

> "நகர மாந்தர் நணிபடைத் தலைவர்
> கனகச் சுற்றம் கடைகாப் பாளர்
> இவுளி மிறவர் யானை வீரர்
> கரணத் தியலவர் கரவிதி மாக்கள்"

ஆவர். இவர் தம்முள் 'நகர மாந்தர்' என்பார் யாவர் என்பது ஆராய்தற்குரியது.

நகர மாந்தர் என்பார் 'குடிமக்கள்' என்று வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தமது 'பாண்டியப் பேரரசு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அக் கூற்றுப் பொருந்துமாறில்லை. 'நகரமாந்தர்' என்பது நகரத்தாரையே குறித்தல் வேண்டும் என்பது கீழ்வரும் சான்றுகளால் புலனாகும்.

1. எண் பேராயத்தில் உறுப்பினராய் இருக்கும் எண்மரும் அரசனாலேயே அப்பதவியில் அமர்த்தப்படுவோர் ஆவர். இவ் வுறுப்பினர் பதவிக்குத் தேர்தல் இல்லை.
2. வணிகர் போர்க்காலத்தில் அரசனுக்குப் பொருள் கொடுத்து உதவுவோர் ஆவர்.

---

1. நகரத்தார் மாநில மாநாட்டு மலர் சென்னை 1965— பக்கம் 225.

3. வணிகத்தின் தலைமை இவர்களிடத்தில்தான் இருந்தது.
4. நீர் வணிகத்திற்கு உரியோராய்த் திகழ்ந்தனர். இன்ன பிற சான்றுகளால், நகரமாந்தர் என்பது நகரத்தாரையே குறித்து வழங்குவதாயிற்று."

கொள்வதும் பகை கொளாது கொடுப்பதும் குறைகொடாது, பல்பண்டம் பகர்ந்து வீசுவர், என்று காவிரிப்பூம்பட்டினத்து மக்களைப் பற்றிச் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. இந்த உலக மக்களெல்லாம் திரண்டு வந்தாலும் அவர்கள் அத்தனை பேருக்கும் வேண்டிய அரும்பொருளை வழங்கத்தக்க வளஞ் சிறந்த ஊர் காவிரிப்பூம்பட்டினம். இவ்வூரை வளமிக்க பூமியாக இன்புறச் செய்தவர்கள், இரண்டு தனவணிகப் பெருமக்கள். ஒருவர் மாநாய்க்கன், மற்றெருவர் மாசாத்துவான். 'நாய்க்கன்' என்றால் செட்டியார். 'சாத்து என்றால் வணிகர் கூட்டம். மாசாத்துவான் என்றால் வணிகர் கூட்டத் தலைவன் என்று பொருள். மாசாத்துவான் வழிவந்தவர்கள் தான் நகரத்தார்கள். மாசாத்துவான் பெருநிலம் முழுதும் ஆளும் ஒப்பற்ற தலைவனாக தன் குடிகளுடன் உயர்ந் தோங்கும் செல்வச் சீமானாய் இருந்தான். கப்பல் வாணிபத் தாலும், தரை வாணிபத்தாலும் பெரும்பொருள் ஈட்டியவன். கப்பல் வாணிபத்திற்கு முன்னர், தரை வாணிபத்தில் நகரத் தார்கள் நீண்ட நெடுநாட்களுக்கு முன்பே உப்பு வியாபாரம் செய்துவந்தார்கள் என்று தெரிகிறது.

குமரப்ப செட்டியார் அவர்கள் வசமுள்ள ஓலைச் சுவடியைச் சரிபார்த்துச் செப்பனிட்டு டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் வெளியிடப்பெற்ற "அறப்பட்டயங்கள்" என்ற நூலிலிருந்து, முதன் முதலில் நகரத்தார்கள் உப்பு வியாபாரம் செய்த செய்தி நமக்குக் கிடைக்கிறது.

அது மட்டுமல்லாமல் நெல், வரகு, திணை, சாமை, இருங்கு முதலிய பதினெட்டு வகை கூலமும் விற்று வாணிபம் செய்துவந்த செய்தியை,

"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணருஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையம்
தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூல" மும்

என்ற பாடல் மூலம் விளக்கிக் கூறியதாலும் நகரத்தார்களின் வாணிகச் சிறப்பு விளக்கமாகத் தெரிகிறது. நகரத்தார்கள் அக் காலத்தில் கடல் வழியாகவும், தரை வழியாகவும் சென்று பண்ட மாற்றம் செய்தனர் என்பது சரித்திர உண்மையாகும். மரக்கலத் தால் கடல் கடந்து தூரதேசம் சென்று வாணிகம் செய்யும் பழக்கம் மிகப்பழைய காலத்திலேயே நிலைபெற்றிருந்தது என்பது

"கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட
குலத்திற் குன்றா கொழுங்குடிச் செல்வர்"

எனக் குறிப்பதனால் நன்கு விளங்குகிறது.

காவிரிப்பூம்பட்டினம் வணிகர் செழித்த மாநகர் ஆகும். பரதர், கடலோடிகள், பின்னவர், இளங்கோக்கள், தருமக் கிழவர், ஆள்காவலர், உழவர், வணிகர், முத்தொழிலாளர், செட்டியார்' சிரேட்டிகள் என்று வைசியர் பெயர் பெறுவர். இவர்கள் அரசனும் விரும்பும் திருவினைப்பெற்றவர்கள். இவர்களது வாணிபத்தை வளர்க்கப் பலதேச வர்த்தகர்களும் புகாரில் வந்து குடியேறி யிருந்தனர்

"நீரின் வந்த நிமிர்பரிப் பரவியும்
காலின் வந்த கருங்கறி (1) மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் (2)
கங்கை வாரியும் (3) காவிரி பயனும்
ஈழத்(4) துணவும் காழகத் (5) தாக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி"

என்ற பட்டினப்பாலைச் செய்யுள் மூலம் அறிய முடிகிறது.

தமிழகத்திலிருந்து அதிலும், குறிப்பாக காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்து ரோமாபுர நாட்டுக்குச் சென்ற ஒவ்வொரு கப்பலிலும் பாதிக்கு மேற்பட்ட சரக்கு மிளகாகவே இருந்தது. ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெல்லம், நல்லெண்ணெய் முதலியனவும், உறையூரில் செய்யப்பட்ட மிக உயர்ந்த மெல்லிய ஆடை வகை களும் தேக்கு, அகில், சந்தனம், முதலிய மரத்துண்டங்களும், தேங்காய், நெய், சோளம், கம்பு, வாழை, அரிசி முதலிய

1. கறி - மிளகு 2. துகிர் - பவளம் 3. வாரி - பொருள்
4. ஈழம் - இலங்கை 5. காழகம் - பர்மா

தானியங்கள், புளி, வெற்றிலை, பாக்கு முதலியனவும் ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பெற்றன. இந்தப் பொருள் களைப் பெற்றுக் கொண்ட உரோமர்கள், இவற்றிற்குப் பதிலாக பொன், வெள்ளி, நாணயங்கள் உயர்ந்த மதுவகைகள், பவளம், ஈயம், தகரம், எந்திரப்பொருள்கள் அனுப்பி வைத்தனர்.

பெரிபுளூஸ் என்னும் நூலை கி.பி. 60ல் எழுதிய ஆசிரியர் இந்தியத் துறைமுகங்களில் சேரநாட்டு தொண்டி, முசிறி, குமரி என்ற துறைகளும் பாண்டிய நாட்டில் கொற்கையையும் சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுக நகரங்களில் யவனர் முதலிய அயல்நாட்டு வணிகர்கள் தங்கியிருந்தனர் என்பதைப் பட்டினப் பாலையால் பின்வருமாறு அறிய முடிகிறது.

''மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந்த தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்''

'யவனர்' கைத்தொழில் திறம் தமிழரால் பாராட்டப்பெற்றது. காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்துள் அமைக்கப் பட்ட ஒரு மண்டபத்தை

''மகத வினைஞரும் மராட்ட கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி''

அமைத்தனர் என்றும் (மணிமேகலை காதை 19-வரி 107-109ல்) அறிய முடிகிறது. நம்முடைய தமிழ்நாடு முற்காலத்தில் வியாபாரத்திலும், பிறவற்றிலும் உயர்நிலையை அடைந்திருந்தது என்றும், பழைய தமிழ் நூல்களால் நாம் அறிய முடிகிறது. தொழில்களில் சிறந்தனவாகச் சொல்லப்படுவன உழவும், வாணிபமுமேயாகும். வேளாண்மையினால் விளைவிக்கப்படும் பொருள்களும், கைத்தொழில்களால் உண்டாக்கப்படும் பொருட் களும், பலநாட்டாரும் பெறுமாறு செய்வித்ததில் வாணிகம் பெரிதும் உதவுகின்றது. வணிகத்தைப் பரம்பரையாய்ச் செய்து வரும் மரபினர் இவர்தான். இப்பிரிவினர்தான் கொண்ட பொருள் அளவால் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தால், பிரிக்கப்பட்ட கூலவாணிகர், பொன் வணிகர், அறுவை வாணிகர், மணிவணிகர் போன்ற பிரிவினர்களுமுண்டு.

தமக்குரிய நூல்களை ஓதுதல், தமக்குரிய யாகங்களைச் செய்தல், தாம் பெற்ற பொருள்களை நல்வழியில் ஈதல், உழவு செய்வித்தல், பசுக்களைக் காத்தல் என்ற ஐந்தும், வணிகருக்குரிய தொழில்கள் என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் இந்திரவிழா ஊரெடுத்த காதையில் ''அரச குமாரரும், வணிக குமாரரும் குதிரைகளின் மேலும், கலத்தின் மேலும் ஏறி ஒருங்கே சென்றனர்'' (வரி 158- 60) என்று சொல்லப் பட்ட பகுதியால் அரசருக்கும் வணிகருக்கும் இருந்த நட்பு நன்கு விளங்கும். வணிகர்கள் அரசர்களால் பலவகைகயிலும் சிறப்பு களைப் பெற்றார்கள். 'எட்டி' என்ற பட்டமும், அதற்குறிய பொற்பூவும் அவர்களுக்கு அளிக்கப்பெற்றன என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து இத்தகைய எட்டிகளே பிற்காலத்தில் செட்டிகள் என மாறி, மரியாதை விகுதியான 'ஆர்' சேர்ந்து செட்டியார் என ஆயிற்று என்று கூறுவது மிகவும் பொருத்தம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர்கள் மிகுதியாக இருந்தனர் என்பதற்கு அங்குள்ள நாளங்காடி என்ற காலைக் கடைத்தெரு வும், 'அல்லங்காடி' என்ற மாலைக் கடைத்தெருவும் தக்க சான்றாக அமையும். அங்கு பட்டினப்பாக்கம் என்றும் மருவூர்ப் பாக்கம் என இருபிரிவுகள் இருந்தன. பட்டினப்பாக்கம் என்பது கடற்கரையைச் சார்ந்த இடமாக இருந்தது. இங்கு கப்பல் வியாபாரம் மலிந்திருந்தது. உள்நாட்டில் கூட்டமாகத்தான் செல்வார்கள். அத்தகைய கூட்டத்திற்கு 'சாத்து' என்று பெயர். ஒவ்வொரு சாத்துக்கும் ஒவ்வொரு தலைவர் இருப்பார். அந்தத் தலைவனை சாத்தன் என்று அழைப்பார்கள். நகரத்தார்களில் சிலருக்குச் சாத்தப்பன், சாத்தம்மை என்ற பெயர்கள் வழங்கி வருவதும் இதன் அடிப்படையில்தான் என்பது உற்று நோக்கத் தக்கது.

இன்றைக்கு சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் கள் உலகிலுள்ள எல்லா நாடுகளுடனும் வியாபாரம் செய்ததாக இந்திய சரித்திரம் மட்டுமில்லாமல் எல்லா நாட்டுச் சரித்திரங் களும் கூறுகின்றன. தமிழகம் இயற்கை விளைபொருள்களின் பெருக்கத்தால் மேம்பட்டு, விலைமிக்க பொருள்களுக்கும் பெயர் போனதாக இருந்திருக்கிறது. வெகுகாலமாக உலக வியாபாரத் திற்கு இருப்பிடமாக இருந்தது என்று சேம்பர்ஸ் என்பவருடைய ''Encycleopedia Britanica - Vol. XI - Page 446ல் கூறப் பட்டிருக்கிறது.

ரிக்வேதம் (1 - 25-7-56ம் 2ம்) என்ற அத்தியாயங்களிலும் வருணன் என்பவர் மாலுமித் தொழிலில் கைதேர்ந்தவன் என்றும், வியாபாரத்தை உத்தேசித்து இந்தியர்கள் ஏராளமாக கடல் யாத்திரை செய்த செய்தி பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

ரோமர்கள் ராஜ்யமே தமிழகச் சரக்குகளால் நிரப்பப் பட்டிருக்கிறது என்று ''இந்தியக் கப்பல் வியாபாரம்'' என்ற நூலில் முகர்ஜி அவர்கள் எழுதுகிறார்கள். Imperial Gazetteer - New Edition Volume 2 - 825) என்ற நூலும் இதை உறுதிப் படுத்துகிறது.

1901ம் ஆண்டு வெளியான Royal Asiatic Society Journalல் வெளிவந்த செய்தியிலிருந்து காசி, பாடலிபுத்திரத்திலிருந்து கிழக்கு முகமாகவும், மேற்கு முகமாகவும் எருதுகள் கட்டி ஐந்நூறு வண்டிகள் ஒன்று சேர்ந்து பிறப்பிட்டுக் கடற்கரைகளை அடைந்து, அங்கிருந்து கப்பலில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு அரேபியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளுடன் வாணிபம் செய்து வந்த விபரங்களை அறிய முடிகிறது.

கி.பி. 10ம் நூற்றாண்டிற்கு முன்பே இஸ்ரேல் நாட்டவரும் இந்தியாவிற்குக் கப்பல்களை அனுப்பி தந்தம், சந்தனக்கட்டை, ரத்தினம், மயில்தோகை முதலிய சாமான்களை வாங்கிச் சென்ற தாக அறிகிறோம்.

மகா அலெக்சாண்டருக்குப் பிறகுதான் மயில்தோகை இந்தியாவிலிருந்து கிரீசுக்கு அனுப்பப்பட்டது என்பதை நாம் மயிலின் இறகுக்கு உபயோகப்படுத்திய தோகை என்ற தமிழ்ச் சொல்லே அங்கு தோக்ரிக் என்று கையாளப்படுவதிலிருந்து அறிய முடிகிறது. இங்கிருந்து எகிப்துக்கு பட்டு, நல்முத்துக்கள், இரத்தினக் கற்கள், முதலியன அனுப்பப்பட்டு அதற்கு மாறாக சாம்பிராணி, மட்டிப்பால், போன்ற பொருள்கள் பெறப்பட்டன என்பதை Encycleopedia Britanica - Vol.II (Page 446-459 என்ற நூலிலிருந்து அறிய முடிகிறது.

நகரத்தார்கள் அயல்நாடுகளுக்குச் சென்று வியாபாரத்தில் ஏராளமான பொருள்களை ஈட்டி, தாங்கள் ஈட்டிய பொருள் முழுமையும் சில தற்கால வியாபாரிகளைப்போல, மோசடியான சொத்துக்களுக்கு அலைவதுபோல அல்லாமல், தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் தங்களுடைய சந்ததியாரும் அவர்களுடைய

அடிச்சுவடைப் பின்பற்றி அதே தரும வழிகளில் நடக்குமாறு ஆங்காங்கு கோயில்களையும், பிற தருமஸ்தாபனங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். இத்தகைய கோயில்களும், தர்ம ஸ்தாபனங்களுமே தற்காலத்தில் அவர்களைப் பற்றிய சரித்திரங்கள் எழுதுவதற்கு ஆதாரங்களைத் தந்துகொண்டிருக்கின்றன.

இங்ஙனம் நகரத்தார்கள் வாணிபம் செய்யச் சென்ற இடங்களிலெல்லாம்

1. பிறருடைய வியாபாரத்தைக் கெடுக்காமலும்,
2. தன்னுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டும்,
3. எந்த ஈன வழியிலும் பொருள் சேர்க்காமலும்,
4. எந்த புதிய தேசத்திற்கும் நினைத்த மாத்திரத்திலேயே சென்று வரவும்,
5. அந்தந்த நாடுகளில் குடியேற வழிவகை செய்து கொண்டும்,
6. அங்கு ஒருவரை ஒருவர் கெடுத்துக்கொள்ளாமலும் போட்டி போட்டுக் கொள்ளாமலும்,

நடந்து கொண்ட விதமே அவர்களுக்கு அவர்களாகவே ஏற்படுத்திக்கொண்ட கொள்கைகளாக இருந்திருக்கின்றன.

நகரத்தார்கள் கப்பல்கள், ஆகாயவிமானங்கள் போன்ற போக்குவரத்து வசதிகள் இல்லாத நாள்களிலேயே பாய்மரக் கப்பல் துணைக் கொண்டு கடற்கரை ஓரமாகவே பலமைல்கள் பொறுமை இழக்காமல் காற்றை மட்டுமே நம்பி உறுதியான எண்ணத்துடன் தண்டாயுதபாணிக் கடவுளின் துணைக் கொண்டு 1805ம் ஆண்டு இலங்கையில் உள்ள கண்டிக்கும், 1824ம் ஆண்டு சிங்கப்பூர் பினாங்கு முதலிய ஊர்களுக்கும் 1852ம் ஆண்டு பர்மாவில் உள்ள மோல்மேன் என்ற ஊருக்கும் 1854ல் ரங்கூனுக்கும், 1885ம் ஆண்டில் மாந்தளை நகரத்திற்கும் சென்று வாணிபம் செய்துவந்த செய்தி அறிய முடிகிறது. இங்ஙனம் இவர்கள் கடல் கடந்து செல்லும் போது, காற்றை நம்பியே கட்டுமரக் கப்பலில் செல்வதால், தாங்கள் உயிரோடு சென்று திரும்ப முடியுமோ என்ற ஐயப்பாட்டினால் இவர்கள் புறப்படும் போதே, தாய்நாட்டில் மனைவி மக்களிடமும் உற்றார் உறவினர்களிடமும் 'வாய்க்கரிசி' வாங்கிச் சென்ற பழக்கம் கூட இருந்து வந்திருப்பதாக அந்த நாள்களில் சென்று வந்தவர்களிடமிருந்து

செவிவழிச் செய்தியாக அறிய முடிகிறது. இதிலிருந்து நகரத்தார் எத்தகைய மன உறுதியோடும், கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது தெளிவாகப் புலனாகிறது.

நகரத்தார்கள் இங்ஙனம் மனஉறுதியும் கட்டுப்பாடும் உடையவர்கள் மட்டுமல்ல, இவர்கள் சாதிக்கட்டுப்பாட்டுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றனர். இத்தகைய சாதிக் கட்டுப்பாட்டிற்கு இணங்க, மனைவி, மக்களைக் கடல் கடந்த தொலை தூரங்களுக்குக் கூட்டிச் செல்வது இல்லை. நகரத்தார்கள் வாணிபம் நடத்திவந்த இடங்களில் கணக்குகள் வைத்திருந்த விபரங்களைப் பிறிதொரு பகுதியில் பார்க்கக்கூடும் என்றாலும் இவர்கள் சென்று தொழில் செய்துவந்த பல நாடு களைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் பொருத்தம்,

கடாரம் என்று வழங்குகின்ற பர்மா எப்படி அந்தப் பெயர் பெற்றது என்பதை ஆராய்ந்த ஆசிரியர்கள் கண்ட முடிவு—பர்மா என்ற சொல் படைப்புக் கடவுளாகிய பிர்மா என்ற சொல்லின் திரிபே என்பதாகும்.

டோகாங் என்று சொல்லப்பட்ட ஊரின் சுற்றுப்பிரதேசத் திற்குப் பிரம்மதேசம் என்றும், தென்பர்மா முழுதும் இராமன்ன தேசம் என்றும், இதில் அடங்கிய பாசின், பெகு, முர்டபன் என்ற மூன்று இடங்களுக்கும் முறையே குசும மண்டலம், ஹம்சவதி மண்டலம், முக்கி மண்டலம் என்றும் பெயர்கள் உண்டு. இவை தவிர தனி ஊர்களின் பெயர்கள் கூட

புரோம்—விஷ்ணுபுரம்
பகாங் —அரிமர்த்தனபுரம்
பைகாங்—ஜெயபுரம்
மோல்மீன்—இராமபுரம்

என்று தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டு வந்திருக் கின்றன. வானசோதிட சாத்திர நூலில் பர்மாவை 'இந்திரத் தீபம்' என்றே கையாளப்பட்டிருக்கிறது.

பர்மாவைப் பொறுத்தவரை அந்த நாட்டிற்கும் நகரத்தார் களுக்கும் நீண்ட நெடுநாள் தொடர்பும், அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு இவர்களுடைய பங்கும் மிக அதிகமாக உண்டு. தென்பர்மா, வட பர்மாவைவிட மேலாகி முன்னேற்றம் அடைந்

திருந்தது. தென்பர்மாவில் கலிங்கரும், தெலுங்கரும் நகரத்தார்களைப் போன்ற தென்னிந்தியர்களே மிகுதியும் வாழ்ந்து வந்தனர். தெலுங்கர்களை 'தலைங்' என்றும் கலிங்கர்களை 'கிளிங்' என்றும் தமிழர்களைக் 'குல' என்றும் அழைத்து வந்ததிலிருந்தே பர்மா நாட்டிற்கும் தென்னிந்தியர்களுக்கும் உள்ள நீண்டநாள் உறவுகள் தெளிவாகின்றன. தென்னிந்திய சோதிட வல்லுனர்கள் பர்மாவிற்குச் சென்று நாள், நட்சத்திரம், ஜாதகம் போன்ற பஞ்சாங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழகத்தில் வழங்கி வருகின்ற அந்த முறையே பர்மாவிலும் வழங்கி வருகிறது. தமிழர்களின் கணக்கு முறை, சோதிடம், வைத்தியம், ராஜநீதி, மனுதர்ம சாஸ்திரம் முதலியவை கற்றுக்கொள்ளப்பட்டன. பர்மிய மொழி ஒரு இலக்கிய மொழியாக ஆனதற்கு, பாலி, சமஸ்கிரும், தமிழ் மொழிகளின் வாயிலாக ஏராளமான சொற்கள் பர்மிய மொழிக்குள் புகுந்து அதை வளர்த்தன என்பதே சரியான காரணம்.

உள்நாட்டு வாணிபம் கருதி முதன் முதலில் நகரத்தார்கள் 1821ம் ஆண்டு கல்கத்தா சென்று தொழில் நடத்தத் தொடங்கினர். கல்கத்தாவில் பெரும்பாலும் அரிசி வியாபாரமே நடத்தி வந்திருக்கின்றனர். இங்கிருந்துதான் பர்மாவில் உள்ள மோல்மீனுக்கு 1852ல் சென்று பின்னர் நாளடைவில் பர்மாவில் உள்ள சின்னஞ்சிறிய ஊர்களில் கூடத் தங்கள் தொழிலைச் செய்து வந்தனர். குறிப்பாக 1854ல் ரெங்கூனிலும் 1885ல் மாந்தளை என்னும் ஊரிலும், பசுமந்தான், கீமந்தான், லேவு, மோவி, பாக்கலை, சைப்பீ, சோசான், மூப்பின், எவுண்டம், அவுக்கான் தோஞ்சை, லேப்பட்டான், மீன்லா, அவுப்போ, சூப்பிங்கான், பாரப்பின், பக்கோ, நத்தலீன், தன்னப்பின், பௌண்டை, சைக்கோ, புரோம், ஈனஞ்சான், ஈந்தட்டான், நௌலியப்பன் டாங்கோ, மியாங்மியாங், பியாப்பம், அடாரியா போன்ற பல இடங்களிலும் தங்கள் கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் செய்துவந்தனர். பர்மா, நாட்டில் உள்ள தொண்ணூறு சதவிதநிலங்கள் நகரத்தார்களின் உதவியாலேயே வேளாண்மைக்குக் கொண்டுவரப்பெற்றன என்றால் அது மிகையில்லை.

தொழில் காரணமாக அந்தந்தப் பகுதிகளில் லேவாதேவிக் கடைகளைத் தோற்றுவித்தாலும், ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்கே உரிய தெய்வமான அருள்மிகு தெண்டாயுதபாணிக்குக்

கோயில் கட்டுவதையும், தான தர்மங்களுக்காகப் பெருந்தொகை களைச் செலவழிப்பதிலும் தயங்கியதே இல்லை.

மேற்கூறிய பகுதிகளில் பல கோயில்களை உருவாக்கியிருந்த போதிலும், இரங்கூனில் உள்ள முகல் தெரு (Mogul Street) 112ம் இலக்கத்தில் உள்ள ஆறரையில் அமைந்துள்ள தெண்டாயுதபாணி கோயிலே முதன்மையான கோயிலாகும். எந்த நகரத்தாரும், பர்மா மண்ணில் காலடி வைத்ததும் இந்த ஆறரைக் கோவிலுக்கு வந்து வழிபடுவதும், தாய் நாட்டிற்குத் திரும்புவதற்கு முன்பும் இங்கு வந்து வழிபட்டுத்தான் கப்பல் ஏறுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பர்மா மட்டுமில்லாமல் நகரத்தார்கள் வேறு பல நாடுகளுக்கும் சென்று தொழில் செய்யவேண்டும் என்ற எண்ணம் முதன்முதலில் இவர்களுக்கு வந்தபோது இலங்கைதான் இவர்கள் கருத்திற்கு வந்தது. 1805ம் ஆண்டு முதன் முதலாக நகரத்தார்கள் இலங்கை யில் உள்ள கண்டி என்ற ஊரில் தங்கள் கடைகளைத் தோற்றுவித்து அரிசி விற்பனை, நகை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் ஆகிய தொழில்களைத் தொடங்கியிருக்கின்றனர். பின்னர் நாளாக ஆக அங்குள்ள கதிர்காமம், திருக்கேத்தீஸ்வரம், காலி, கம்பளை, இரத்தினபுரி, நாவல்பட்டி, குருநாக்கல், மாதம்பை, முன்னீச்சுரம், பூசவார், யாழ்ப்பாணம், திருகோண மலை, சிவனடிபாதம் முதலிய ஊர்களில் எல்லாம் தங்கள் கடை களைத் தோற்றுவித்திருக்கின்றனர். நாள்கள் செல்லச் செல்ல, வட்டித் தொழிலில் மட்டுமே கவனத்தைச் செலுத்தாமல் ரப்பர் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், காப்பித் தோட்டங்கள் முதலியவைகளை வாங்கி, அவைகளை அபிவிருத்தி செய்து, இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நகரத்தார்களே அச்சாணியாக விளங்கி வந்திருக்கின்றனர்.

சைவப்பற்றும், இறைப்பற்றும் இவர்களுடன் இரண்டறக் கலந்திருப்பதினால் இலங்கையில் இவர்கள் கடை வைத்திருந்த ஊர்களில் எல்லாம் முருகனுக்கும் விநாயகருக்கும், மாரியம்மனுக்கும், ஆலயங்கள் அமைத்து விழாக்களும் கொண்டாடி வர மறந்ததேயில்லை. இலங்கையில் உள்ள கண்டி, கதிர்காமம், கம்பளை முருகன் கோயில்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

இலங்கையிலிருந்து படிப்படியாக வியாபாரத்தையும் தொழிலையும் அபிவிருத்தி செய்வதை முன்னிட்டு கடல் கடந்து வெளிநாடு செல்வதற்கு இவர்கள் தேர்ந்தெடுத்தது சிங்கப்பூரும், பினாங்குமே.

நகரத்தார்கள் 1824-25ல் சிங்கப்பூருக்கும், பினாங்கிற்கும் சென்று வர்த்தகம் செய்யத் தொடங்கியதாகத் தெரிகிறது. எந்த ஒரு நகரத்தாரும் எங்கு சென்று தங்கள் தொழிலைத் தொடங்கிய போதும் அங்கு தெண்டாயுதபாணிக்குக் கோயில் எழுப்ப மறந்ததேயில்லை. நகரத்தார்கள் கடல் கடந்து செல்லுமுன்னர் தங்கள் குலகுருவாகிய சிவாச்சாரியாரிடம், தாங்கள் கடல் கடந்து சென்று அந்த நாடுகளில் எந்த தெய்வத்தை வழிபடவேண்டும் என்று கேட்டபோது சிவாச்சாரியாரும், அந்தக் கால விதிமுறைப் படியும், வேத சாஸ்திரங்களின் படியும் அந்தணர்கள் யாரும் கடல் கடந்து செல்லக்கூடாது என்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையே தங்கள் தெய்வமாய்க் கொண்டுள்ள நகரத்தார்கள் கடல்கடந்த நாட்டில் சிவன் கோயில்களை ஸ்தாபித்து, ஆகமவிதிப்படி பூசை செய்வதற்கு சிவாச்சாரியார் களை அனுப்ப முடியாது என்றும் அதேபோல வள்ளி தெய்வானை சமேதராயுள்ள முருகப்பெருமானை பிரதிட்டை செய்தாலும் சிவாச்சாரியார்தான் ஆகம விதிமுறைப்படி பூசை செய்யவேண்டும் என்றும் முதன் முதலில் உப்பு வியாபாரம் செய்வதற்காகப் பழநிக்குக் கால்நடையாகச் சென்ற நகரத்தார்கள்பழனியாண்டவ ராகிய தண்டாயுதபாணிக்குப் பண்டாரங்களே பூசை செய்து வந்ததைக் கண்டவர்கள் என்றும் எனவே கடல்கடந்த நாடுகளில் தெண்டாயுதபாணிக்குக் கோயில் எழுப்பி, இங்கிருந்து பண்டாரங் களை அழைத்துச் சென்று பூசை செய்து வரலாம் என்று கூறினார் கள். அதுபோலவே கடல்கடந்துள்ள ஊர்களில் நகரத்தார்கள் தெண்டாயுதபாணி கோயிலை உருவாக்கி நிறைந்த செல்வத்தை யும் நீங்காத புகழையும் பெற்றனர். நகரத்தார்கள் வெளிநாடு களில் தெண்டாயுதபாணிக்கு கோயில்கள் எழுப்பியதற்கு வேறு ஒரு காரணமும் கூறுகிறார்கள். சாதிமுறை நியாயப்படி கடல் கடந்து செல்லும் எந்த ஒரு நகரத்தாரும் தன் மனைவியை அழைத்துச் செல்வது கூடாது. கடல்கடந்த நாடுகளில் இவர்கள் தனி மனிதர்களாய் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் போது கல்யாணக் கோலத்தில் உள்ள வள்ளி தெய்வானை சமேதராயுள்ள முருகப்பெருமானை பிரதிட்டை செய்து வழிபட்டு

வந்தால் எங்கே தங்களுக்கும் குடும்பம், மனைவி, மக்கள் என்ற நினைப்பு வந்து விடுமோ என்றும் அதனால் தொழிலுக்கும் பாதகம் ஏற்பட்டு விடுமோ என்ற காரணத்தினாலேயே ஆண்டியாய் உள்ள தெண்டாயுதபாணிக்கே கோயில் அமைத்தனர். இந்தக் காரணம் நகைச்சுவை கருத்தாக கூறியபோதிலும் ஆகம விதிப்படி பூசை செய்வதில் நகரத்தார் என்றுமே தவறு செய்ய மாட்டார்கள் என்பதனையே எடுத்துக்காட்டுகிறது.

நகரத்தார்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா, மூவார், அலோர்ஸ்டார், சிரம்பான், கிள்ளான், தெலுக்கன்சான், ஈப்போ, தைப்பிங், பத்துபஹாட், சுங்குரும்பை போன்ற பல ஊர்களிலும் தங்கள் தொழில் ஸ்தாபனங்களைத் தொடங்கி முதன் முதலில் லேவாதேவி தொழிலைச் செய்து வந்தாலும், காலப்போக்கில் அந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதியும் தங்கள் தொழிலின் வளத்தைக் கருத்தில் கொண்டும் ரப்பர் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், ஈயச்சுரங்கம் போன்ற வற்றின் மூலம் செய்யத் தொடங்கினர்.

பர்மாவின் எல்லையில் உள்ள பங்களா—தேஷ் நாட்டில் ஆக்கியாப் என்று சொல்லுகின்ற அரிக்கேன் என்ற ஊரிலும் நகரத்தார்களின் அரிசி வியாபாரமும், கொடுக்கல் வாங்கல் தொழிலும் புகழ் பெற்றிருந்தன. தஞ்சாவூர் அரிசி, பர்மா அரிசி முதலியவைகளை மூட்டை மூட்டையாக வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபட்டிருந்த ஒரு நகரத்தாருடைய கடையிலிருந்து நாள்தோறும் பல தந்திகள் கொடுத்துப் பல தந்திகளும் பெற்று நடந்து வந்ததை நகைச்சுவையாக

''அரிக்கன் பழநியப்பா
அலறுதடா உன் தந்தி''

என்று வேடிக்கையாகச் சொல்லுமளவிற்கு அவர்களுடைய தொழில் பரந்து விரிந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது. நகரத்தார்கள் இங்கு ஏறத்தாழ முப்பது கடைகள் வைத்துத் தொழில் நடத்தி வந்திருக்கின்றனர்.

பர்மா, பங்களாதேஷ், இலங்கை, மலேசியா முதலான நாடு களுக்குச் சென்று தொழில் செய்வதைப் போலவே தாய்லாந்து நாட்டிற்கும் 1860லேயே சென்று தொழில் தொடங்கி நடத்தி வந்திருக்கின்றனர். தாய்லாந்தின் தலைநகரமான பாங்காக்கிலும்

அதன் சுற்றுப்புறங்களில் உள்ள பல ஊர்களிலும் நகரத்தார்கள் சுமார் முப்பது நாற்பது கடைகளை ஏற்படுத்தி தொழில் செய்து வந்து இருக்கின்றனர். நகரத்தார்கள் கடல்கடந்து சென்று வாழ்ந்து வந்திருக்கின்ற நாடுகளில் எல்லாம் வழக்கமாக பிரதிட்டை செய்துவரும் முருகன் கோயிலுக்கு மாறாக பாங்காக்கின் நடுப்பகுதியான சீலம் ரோட்டில், 1890ல் அந்த நாட்டு மன்னர் சௌலிங்கான உதவியோடு ஒரு பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயிலை ஸ்தாபிதம் செய்து, தமிழகத்திலிருந்து குருக்கள் ஒருவரை அனுப்பி நித்திய பூசை செய்து வருகின்றனர். ஆயினும் பாங்காக்கில் உள்ள முப்பது நாற்பது கடைகளும் சேர்ந்து அவர்கள் கிட்டங்கிலேயே ஒரு தனி அறையில் தெண்டாயுத பாணியை பிரதிட்டை செய்து வணங்கி வருவதையும் மறக்க வில்லை,

பிரெஞ்சு ஆட்சியில் சில நூறு ஆண்டுகள் இருந்த இந்தோ சீனா நாட்டின் ஒரு பகுதிதான் இப்போது தெற்கு வியட்நாம் என்ற பெயரில் தனி நாடாக இருக்கிறது. இதன் தலைநகரம் செய்கோன். 1880ல் நகரத்தார்கள் இங்கு வந்து செய்கோனிலும், அதன் சுற்றுப்பகுதியில் உள்ள பல ஊர்களிலும் தங்கள் தொழில் களைத் தொடங்கினர்.

இந்தோனிசியத் தீவிலும், சுமித்திரா தீவிலும் இதன் தலைநகரமான மயிடான் டில்லியிலும் அதைச் சுற்றியுள்ள கேந்தான், திப்பன்தங்கி, தஞ்சம்பாகை ஆகிய பல ஊர்களிலும் நகரத்தார்கள் தங்கள் தொழிலைத் தொடங்கி நடத்தி வந்துள்ளனர்.

இங்கு கிடைக்காத கருங்கற்களை இந்தியாவிலிருந்து கொண்டு சென்று மிகப் பெரிய அளவில் தெண்டாயுதபாணி கோயில் நிறுவி ஆகமவிதிப்படி பூசைகள் செய்து வருகின்ற பெருமை நகரத்தார் களுக்கே உரியது. இங்குள்ள சீனர்களும் பிற மதத்தினர்களும் இக் கோயிலுக்கும் வந்து வழிபடுகின்றனர். இவ்வூரில் நடைபெறும் தைப்பூச விழா மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் தென்கோடிக்கு அருகே உள்ள மொரீசியஸ் தீவையும் நகரத்தார்கள் விட்டுவைக்கவில்லை. இந்த தீவின் தலை நகரான போர்ட்லூயி என்னும் ஊரில் நகரத்தார்கள் சென்று தங்கள் தொழிலைத் தொடங்கியது 19ம் நூற்றாண்டிற்கு முன்னரே என்று தெரிகிறது. இங்கும் வழக்கமாகத் தோற்றுவிக்கும் முருகன்

கோவிலுடன் அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோவிலையும் உருவாக்கி வழிபட்டு வந்திருக்கின்றனர்.

கடல்கடந்த நாடுகளில் எல்லாம் இலங்கை,பர்மா, மலேசியா, பங்களாதேஷ், தாய்லாந்து, தெற்கு வியட்நாம், இந்தோனேசியா, மொரிசீயல், முதலான நாடுகளில் வாணிபமும் கொடுக்கல் வாங்கல் தொழில்களையும் செய்து வந்த நகரத்தார்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற மிகப்பெரிய நாடுகளுடன் வணிகத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பெரிய பெரிய தொழில்களை இந்தியாவிலும் குறிப்பாகத் தென்னகத்திலும் உருயாக்கியிருக் கிறார்கள். இன்றையச் சூழ்நிலையில் பலவிதமான தொழில்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தபோதிலும், குறிப்பாக மேலே சொல்லப்பட்ட நாடுகளில் வட்டித் தொழிலையும் கொடுக்கல் வாங்கல் தொழிலையும் பெரிய அளவில் செய்துவரத்தவறவில்லை

இவர்கள் பர்மா, இலங்கை, சிங்கப்பூர் முதலான, நாடுகளில் தங்கள் லேவாதேவித் தொழிலை எங்ஙனம் தோற்றுவித்து, எந்தெந்த ஆட்களைக் கொண்டு எவ்வாறு கணக்குமுறைகளை வைத்துக் கொண்டு செயல்பட்டனர் என்ற விபரங்களை இனிவரும் பகுதிகளில் காண்போம்.

# மூன்று

நகரத்தார்கள் பொதுவாகக் கடல் கடந்து சென்று தொழில் செய்து வருவதைக் கொண்டுவிற்றல் என்று கூறுவார்கள். கொண்டு விற்றல் என்ற இந்தச் சொற்றொடர், இந்தச் சமூகத்தார் காலங் காலமாகக் கையாண்டுவரும் ஒரு பழைய சொற்றொடர் ஆகும். இதன் பொருள் மிகவும் எண்ணிப் பார்க்கத்தக்கது. இவ்வழக்குச் சொற்களால் இவர்களின் பண்டைத் தொழிலை அறிந்து கொள்ளவும் ஏதுவாக அமைகிறது. கொண்டுவிற்றல் என்ற சொற்றொடர், கொண்டு-விற்றல் என்ற இரண்டு சொற்களைக் கொண்டு இருக்கிறது. இந்த இரண்டு சொற்களும் உரை விரித்துச் சொல்லக்கூடிய அருஞ்சொற்கள் அல்ல. எல்லோருக்கும் பொருள் விளங்கக்கூடிய எளிய சொற்கள் தாம். நம் நாட்டிலிருந்து பொருள் களைக் கொண்டுபோய் வெளிநாட்டில் இவர்கள் விற்று வந்தனர் என்று இச் சொற்றொடர் மூலம் அறிய முடிகிறது. இன்றும் இவர்கள் வெளிநாடு செல்லும்போது கொண்டு விற்கப் போகிறோம் என்றேதான் கூறப்படுகிறது என்றாலும் எதையும் விற்பதற்காக அவர்கள் இப்போது கொண்டு செல்வதில்லை. பழைய வழக்கத்தை விடாமல், சொல்லுவது மட்டும் அப்படியே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நகரத்தார் சமூகத்தில் செயலுக்குப் பொருத்தமில்லாத பலவற்றை பழைய கால வழக்கப் படியே சொல்லிக்கொண்டு வருவதைக் காண முடிகிறது. ‘இசைகுடிமானம்’ அல்லது ‘இசைபிடிமானம்’ என்பதை இன்றும் திருமண வீடுகளில் எழுதிவருவதை வழக்கமாகக் கொண்டிருக் கிறார்கள். இந்த ஏட்டில் எழுதப்படும் பொருள்கள் எதுவும் இன்றைய நடைமுறையில் செய்வதில்லை. இதற்கு மாறாக வேறு எவை எவையேனும் செய்தாலும், அல்லது கொடுத்து வாங்கித்

கொண்டாலும் எழுதுவது மட்டும் இன்னும் மாறவில்லை. இது போல இவர்களுடைய சமூக மாநாட்டை முன்னர் தொண்ணூற்றாரூர்க் கூட்டம் என்று கூறினார்கள். அப்பொழுது நகரத்தார்கள் தொண்ணூற்றாறு ஊர்களிலும் இருந்து வந்தனர். இப்பொழுது தொண்ணூற்றாரூர்களிலும் நகரத்தார்கள் இல்லை யெனினும், கோயிலூரில் கூடுகின்ற நகரத்தார் கூட்டத்திற்கு தொண்ணூற்றாருக்கூட்டம் என்றே பழைய வழக்குப்படி கூறுவார் கள். இதுபோலவே பல செயல்களும் காலத்தின் வளர்ச்சியில் மாறு பட்டு இருந்தாலும், அந்தச் செயலுக்கு வைத்த பெயர் மட்டும் பழைய பெயராகவே இருந்து வருவதைக் காணலாம்.

''கொண்டுவிற்றல்'' என்று நகரத்தார்களால் வழங்குகின்ற வழக்கினால், இவர்கள் தொடக்கத்தில் வட்டித்தொழில் செய்ய வெளிநாடு செல்லவில்லை என்றும், பண்டங்களைக் கொண்டு சென்று விற்பனை செய்து வரவே சென்றுவந்தனர் என்றும் அறிய முடிகிறது. நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களையும், விளைகின்ற பொருள்களையும் கடல்தாண்டிப் பிறநாடுகள் சென்று, விற்றுப் பொருளீட்டி வந்திருக்கின்றனர் என்றேதான் இந்தச் சொற்றொடரால் அறியமுடிகிறது.

எந்திர இயக்கத்தால் கடலைப் பிளந்து கொண்டு விசையாக ஓடும் கப்பல்களும், வானஊர்திகளும் இல்லாத அந்த நாட்களில் பாய்மரக் கப்பல் என்று கூறுகின்ற, காற்று ஒன்றையே பெருந் துணையாகக் கொண்டு செல்கின்ற தோணி மூலம் பெருங்கடலைக் கடந்து வியாபாரம் செய்வதற்காக பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு சென்றனர் என்றும் தெரிகிறது. கப்பலில் ஏறி விட்டால், அதுபோய்த் துறை சேர்ந்த பிறகுதான் பிழைப்பது நிச்சயம். கப்பலில் ஏறும்போது திரும்பி ஊர் போய்ச் சேர்வோ மென்று நிச்சயத்தோடு செல்வதில்லை. உயிர் நீத்த பிறகு செய்யப் பெறுகின்ற ஈமச்சடங்குகளில் ஒன்றான வாய்க்கரிசி போடுதல் என்ற நிகழ்ச்சியைக் கூடச் செய்துவிட்டுத்தான் இந்தப் பாய்மரக் கப்பலில் ஏறுவார்கள் என்று கர்ணபரம்பரையாகச் சொல்லுகின்ற கதைகள் மூலம் அறிய முடிகிறது. இது எந்த அளவுக்கு உண்மை யென்று நிச்சயிக்கக்கூட முடியவில்லை. ஆயினும் உயிரையும் பொருட்படுத்தாமல் பொருள் தேடுவதற்கு எவ்வளவு துன்பப் பட்டு அந்த நாட்களில் சென்று வந்திருக்கின்றனர் என்று அறிய முடிகிறது. தங்களுக்கு எத்தனை துன்பம் வந்தபோதிலும் வர்த்தகம் செய்து நாட்டை வளப்படுத்துகின்ற வணிகத்

தொழிலை விட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தால்தான், அன்றே இத்தகைய துன்பங்களையும் ஏற்று செயல்பட்டு வந்திருக்கின்றனர்.

இவர்கள் வட்டித் தொழில்கள் செய்து வந்தார்கள் என்று அறியத்தக்க சான்றுகளோ அல்லது கர்ணபரம்பரைக் கதைகளோ எதுவும் இல்லை. மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் பாடல்களின் மூலமும் சில கல்வெட்டுக்களின் வாயிலாகவும் இவர்கள் வியாபாரம் செய்த குறிப்புக்களைத் தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர, வட்டித்தொழில் செய்ததற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. ஆனாலும் காலஞ் செல்லச் செல்ல கொண்டுவிற்கச் சென்ற இடங்களிளெல்லாம் தங்கள் தங்கள் தொழிலுக்கும், குறிப்பாக விவசாயத்திற்கும் போதுமான நிதிவசதி இல்லாத நிலையை அறிந்து கொண்ட காரணத்தால்தான், அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் கொடுக்கல், வாங்கல் தொழிலைக் கட்டாயச் சூழ்நிலையில் செய்யத் தொடங்கினர்.

நகரத்தார்கள் 'லேவாதேவி' செய்வதற்கு ஏனைய பிற இடங்களைக் காட்டிலும் அதிகமாய் விரும்பிச் சென்றது ''பர்மா தேசம்'' ஒன்றே! இங்கு விளைநிலங்கள் அதிகம். உழைப்பவர்களும் மிகுதி. ஆனால், பொருளாதாரம் பற்றாக்குறை. எனவேதான், நகரத்தார்கள் அவர்களுக்குப் பணம் கொடுத்து நிலங்களைப் பயிர் செய்யப் பெரும் உதவியாய் இருந்திருக்கிறார்கள். பர்மாவில் வியாபாரம் விருத்தியாவதற்கும் காடுகளை அழித்து நிலங்களை உருவாக்குவதற்கும், அந்த நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து பயிர் செய்வதற்கும் உதவியது நகரத்தார்கள் என்றால் அது மிகையே இல்லை. பர்மாவில் மோல்மேனில் முதன் முதலில் குடியேறிய பிறகு, காலப்போக்கில் பர்மா நாடெங்கும் சின்னஞ்சிறு ஊர்களிலும்கூடத் தங்கள் கடைகளைத் தொடங்கி தங்களுடைய கொடுக்கல்-வாங்கல் தொழிலை நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் செய்து வந்தனர். பர்மா நாட்டின் பெரும்பாலான நிலங்கள் நகரத்தார்களின் மூலதனத்தின் உதவி கொண்டே, வேளாண்மைக்குக் கொண்டுவரப்பட்டமை— உலகம் அறிந்த செய்தி. பர்மாவின் முன்னாள் கவர்னர் சர் ஹார்கோர்ட் பட்லர் (Sir Harcourt Butler) போன்ற பல பெரியவர்களும் இதைப்பற்றி வியந்து கூறியிருக்கின்றார்கள். ஒரு காலத்தில் இவர்களின் தொழில் பெருக்கம் சுமார் எழுபது கோடி

ரூபாய் வரை இருந்ததாக மதிப்பிடப்பெற்றிருக்கிறது. பர்மாவில் மட்டும் ஏறத்தாழ நூற்றைம்பது ஊர்களில் 1300 கடைகள் இருந்து வந்ததாக பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார் சங்க அறிக்கையில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

லேவாதேவி செய்வதற்கென எந்தவொரு இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் அந்த ஊர் பற்றிய நிலவரங்களையும், கொடுக்கல்-வாங்கலுக்குள்ள சாதக பாதகமான சூழ்நிலைகளையும் அங்கு தொழில் செய்து வருகின்ற மற்ற நகரத்தார்களிடம் கலந்து பேசிக்கொண்டுதான் முடிவெடுப்பார்கள். இங்ஙனம் முடிவெடுத்த பின்னர் தங்கள் தொழிலை மேற்பார்த்து வருவதற்கு ஒரு மேலாளையும் (Agent) ஏற்பாடு செய்துகொண்டு, தங்கள் ஊரிலுள்ள பஞ்சாங்கக்காரரிடம் கடை தொடங்குவதற்கான நாள் பார்த்துத் தரும்படி கேட்டுக் கொள்வார்கள். அவரும், கடையின் விலாசம் தொடங்குகின்றவரின் பெயர், நாள், நட்சத்திரம் முதலியவைகளை ஆய்ந்து பின்வருமாறு ஒரு காகிதத்தில் எழுதிக்கொடுப்பார்.

> பவ ஹு ஐப்பசி மீ யகஉ ஞாயிற்றுக்கிழமை
> அஸ்த நஷ்த்திரமும் அமிருதயோகமும் கூடிய
> சுபதினத்தில் உதயாதி நாழிகை யஇ, மேல்
> யஉஇ நாழிகைக்குள் தனுசு லெக்கினமும்
> ஜெயவேளையும் நிஷ் பஞ்சகமும், லெக்கின
> பெலமும், தனாதிபதி லாபாதிபதி பெலமும்
> தொழில் ஸ்தானாதிபதி பெலமும், பாக்கியாதிபதி
> பெலமும் கூடிய சுபதினத்தில்————————
> விலாசத்துக்கு புதுக்கணக்கு எழுத உத்தமம்
> க்ஷேமம்.
>
> ஷண்முகநாதன் துணை.

இதன் அசல் பிரதி ஒன்றும் பின்னிணைப்பு ஒன்றில் காணலாம்.

இங்ஙனம் நாள் பார்த்து வாங்கிக் கொண்ட பின்னர் தங்கள் கடையை மேற்பார்த்து வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்ற மேலாள் ஒருவரிடம் சம்பளச்சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு, ஒரு மாதம் முன்பே தான் தொழில் செய்யவேண்டிய ஊருக்குப் புறப்பட்டுவிடுவார்கள். இந்தக் காலத்தில் வேலைக்குச் சேர்பவர்களுக்கு முதலாளிதான் Appointment Order கொடுப்பது வழக்கம். ஆனால், அந்தக் காலங்களில் வேலைக்கு வருபவரிட

மிருந்து தான் சம்பளச்சீட்டு எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எழுதி வாங்குகின்ற சாம்பளச்சீட்டின் நகல் ஒன்றும் இதன் கீழே தரப்பட்டிருந்த போதிலும் இதைப்போல மற்றொரு அசல் பிரதியைப் பின்னிணைப்பு இரண்டில் காணலாம்.

## சம்பளச் சீட்டு

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

பவ இ அற்பிசி மீ யகஉ கானாடுகாத்தான் பழ. சொ. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களுக்கு கல்லுப்பட்டி சீனிவாசஞ் செட்டியார் மகன் சேதுராமன் எழுதிக் கொடுத்த சம்பளச் சீட்டு. நான் பர்மாவில் உள்ள தங்கள் மாந்தளைக் கடைக்கு மேலாளாக வேலைபார்த்துக் கடை காரியங்கள் அவ்வளவும் குறைவறச் செய்து, எனக்குக் குறிப்பிட்டவேலையாட்களையும் நிர்வகித்துத் தங்கள் கடைக்கு லாபம் சம்பாதித்துக் கொடுத்து இருந்து வருவதற்குச் சம்மதித்து மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தமாக அற்பிசி மீ 1வ முதல் தங்கள் உத்திரவுப்படி கொண்டு விற்கப் போவதற்குச் சம்மதிக்கிறேன். அதற்கு நான் புறப்படும் தேதி முதல் வருடம் மூன்றுக்கு பூவிராகன் 2001ஆக தாங்கள் சம்பளமாகத் தருவதாகச் சொன்னதற்கு ஒப்புக் கொள்கிறேன். அங்கு போய்ச்சேர்ந்த மூன்றாவது மாதம், மூன்றாண்டுச் சம்பளத்தில் பாதியைத் தங்கள் உத்திரவுப்படி எடுத்துக்கொள்ளச் சம்மதிக்கிறேன். பாக்கி ரூபாயையும் மூன்று ஆண்டுகள் நாணயத்துடன் தங்கள் கடையை நிர்வகித்து ஊர் வந்து சேர்ந்ததும், கணக்கு, காரியம் கச்சாத்துக்களை எல்லாம் ஒப்படைத்து ரொக்கமாகப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். எனக்கு சாமானுக்காக தங்கள் உசிதப்படி சன்மானம் அளிக்கும் தொகையையும் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். ஊர் வந்து சேர்ந்த சில மாதங்களில் தாங்கள் மறுபடி கோரினால் வந்து வேலையை ஒப்புக்கொண்டு நிர்வகிக்கவும் சம்மதிக்கிறேன்.

இப்படிக்கு,
ரெவினியூ ஸ்டாம்ப்
ஒட்டிக் கையெழுத்துச்
செய்யவேண்டும்.

இந்த மேலாள் முதலாளியுடன் கடை திறக்கப்படுகின்ற குறிப்பிட்ட ஊருக்கு சில நாட்கள் முன்னதாகவே வந்து, அந்த ஊரில் ஏற்கனவே வசித்து வருகின்ற நகரத்தார்களையும், அந்த ஊரில் உள்ள கடைகளின் ஏஜெண்டுகளையும், தாங்கள் தொடங்க இருக்கின்ற புதுக்கடைக்கு வரவேண்டுமென்று அழைத்துச் செல்வார்கள்.

குறிப்பிட்ட நல்ல நாளில் எல்லோரும் வந்தவுடன் முறைப்படி பூஜைக் காரியங்களை முடித்துக்கொண்டு, புதுக் கணக்கு எழுத ஆரம்பிப்பார்கள். வந்திருக்கின்ற மற்ற கடை ஏஜெண்டுகளெல்லாம், ஒரு குறிப்பிட்ட தொகையைப் புதுக் கடையில் வரவு வைத்துச் செல்வதுண்டு. அன்றே ஒரு நல்ல பார்ட்டியாகப் பார்த்துக் கணிசமான தொகை ஒன்றை நிலத்தின் பெயரிலோ அல்லது நகை ஈட்டிலோ கொடுத்து குறிப்பிட்ட பார்ட்டியின் பெயரால் பற்று எழுதிக் கொள்வார்கள்.

இந்த ஏஜெண்ட், முதலாளியினுடைய யோசனைப்படி தனக்குக் கீழ் வேலை பார்க்கும் அடுத்தாட்களிடமும், அவர் களுக்குண்டான சம்பளங்களை முடிவு செய்து இதுபோல சம்பளச் சீட்டு எழுதி வாங்கிக்கொள்வது வழக்கம். இந்த ஏஜெண்டு மூன்று ஆண்டுகள் சகலப் பவர்களும் (General Powers) முதலாளியால் பெற்று, கொண்டு விற்று முதலாளியிடமோ அல்லது தனக்குப் பதிலாக வருகின்ற இன்னொரு மேலாளிடமோ கணக்குக் காரியம் கச்சாத்துக்களை ஒப்புவித்து ஊருக்கு வந்து செல்வார். மூன்றாண்டு காலம் கடைக்கு மேலாளாக இருப்பவர்க்குக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முழுப்பொறுப்பும் உண்டு. அதற்காக முதலாளியால் ஜெனரல் பவர் ஒன்று கொடுக்கப் பட்டிருக்கும். தனக்குக் கீழே உள்ளவர்களுக்கும் இந்த ஏஜெண்ட் அஸிஸ்டெண்ட் பொறுப்புக் கொடுத்து வேலை வாங்குவார். கோர்ட் நடவடிக்கை, சொத்துக்கள் வாங்குவது, விற்பது அல்லது கடையையே மூடுவதானாலும் அந்தப் பவரில் விரிவாக குறிக்கப் பட்டிருக்கும். அவர் கடையின் விரிவையும், வளர்ச்சியையும், வசூல் பொறுப்புகளையும், தினசரி கணக்குப்பிள்ளை எழுதும் கணக்குகளையும், காசுகளையும் சரிபார்க்கும் பொறுப்புடையவர். பாங்கிலும், மற்ற பிற ஸ்தாபனத்திலும் கடன் வாங்கவும், சேமிப்பு வைக்கவும் அதிகாரம் உண்டு. எழுத்து வேலை இவர்க்குக் கீழே உள்ள பணியாட்களுக்கு பகிர்ந்து கொடுத்து இருப்பதால்,

நேரே, அதைச் செய்யமாட்டாரென்றாலும், இவர் அறியாத எந்தப்பொறுப்பும் பணியும் இருக்காது. மூன்று வருடத்திற்கு சம்பளம் பேசி வருவது வழக்கம். இந்தச் சம்பளம் பழங்காலத்து வழக்கப்படி 'வராகன்' என்ற நாணயப்படி இருக்கும். ஒரு பூவராகன் என்பது ரூபாய் மூன்றரைக்குச் சமம். அவர்கள் பேசிக் கொண்ட சம்பளம் மூன்று வருடங்களுக்கு ஒரே மாதிரியான தொகையாக இருக்கும். அவருக்கு ஊரிலிருந்து வரப்போகப் பிரயாணச் செலவு, பிறதேசத்தில் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற வரை சாப்பாடு, வைத்தியச் செலவு, உடை இன்னும் என்னென்ன தேவையோ அத்தனையும் அந்தக்கடையிலிருந்து பெற, அவருக்கு உரிமை உண்டு. அவர் தனித்து எந்த விதத்திலும் சம்பாதிக்க இயலாது. அப்படி நேர்ந்தால், அது முதலாளியின் ஒரு பகுதியாகப் பாவிக்கப்பெற்றுக் கடையில் சேர்ந்துவிடும். பரிசுச் சீட்டுத் தனக்காக வாங்கி அதில் பரிசு விழுந்தாலும், அதுகூட முதலாளி யின் பணத்தில் ஒரு பகுதியாகவே பாவிக்கப் பெற்றுக் கடையில் வரவு வைத்துவிடவேண்டும். அந்தக் காலத்தில் புதையல் கிடைத்தாலும், அது கடைக்கே சொந்தமாகிவிடும். கணக்கு முடித்து ஊர்வரும்போது, மிச்சங்கட்டி இதற்கு சாமான் என்ற பெயரில் அன்பளிப்பு வழங்கப்படும். அது நிகர லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரை கூட இருக்கலாம். அத்துடன் தங்க நகைகள் கூடப் பரிசு கொடுப்பது உண்டு. மூன்று வருடப் பணியில் தகுந்த காரணம் இல்லாமல் சொந்த ஊருக்கு வர விரும்புவது மிகவும் கடினம். தினசரி வரவு செலவுத் திட்டம் பார்த்து பெட்டி. பெட்டகங்களைப் பூட்டி சாவியைப் பெற்றுக்கொண்டு, மறுநாள் காலை சாவியைக் கொடுத்து நிர்வகித்து வரவேண்டும். இவருக்குக் கீழே பல வேலையாட்கள் இருப்பதுண்டு. அவர்களை பொதுப் படையாக அடுத்தாள்கள் என்று சொன்னாலும் குறிப்பாக பிரதம அடுத்தாள் ஒருவர் இருப்பார். இவர் ஏஜெண்டிடம் சகல நிர்வாகப் பொறுப்புக்களுக்கும் ஜெனரல் பவர் பெற்றுக்கொண்டு அவர்க்குக் கீழே வேலை பார்த்து வருவார்.

இவர் மேலாளுக்குத்தான் பதில் சொல்லியாக வேண்டும். இவருக்குக் கீழே பல அடுத்தாள்கள் இருப்பதுண்டு. கோர்ட் வேலைக்காக ஒருவர் உண்டு. சொத்து சுகங்களைப் பராமரித்து வாடகை முதலிய வரும்படிகளை வசூல் செய்யும் வல்லமை யுடையவர். நிலத்தின் பேரில் கடன் கொடுத்து நெல்லை வசூலிப்பதானாலும், அல்லது சொந்தநிலத்தில், நெல் வசூலிக்கவும்

காட்டாள் என்னும் ஒருவர் இருப்பார். இவர்களை வைத்துக் கொண்டும் இவர்களுடன், ரொக்க வரவு செலவு, தங்க, வைர நகைகளை ஈடுபிடித்து முக்கியமான அறைகளில் வைத்துக் காப்பாற்றும் கேஷியருடனும், கடையை நிர்வகித்து வருவார். இவர்களுக்கெல்லாம் ஏஜெண்டைப் போலவே, மூன்று வருட ஒப்பந்தத்தில் சம்பளச்சீட்டை எழுதிக்கொடுத்து வரவேண்டும்.* அவர்களுக்கும் ஏஜெண்டைப்போலவே சகல செலவுகளையும் கடைதான் ஏற்கும். இவர்களைத் தவிர தொழில் பழகும் சில இளைஞர்களையும், முதலாளி நியமனம் செய்து அனுப்பினால் அவர்களுக்கும் உணவு, உடை, முதலிய செலவுகளைக் கடையே ஏற்கும். ஆனால், சம்பளமாக அவர்களுக்கு எதுவும் கொடுப்ப தில்லை. சுருக்கமாகச் சொன்னால் இவர்களைப் பெட்டியடிப் பையன் என்று சொல்வது உண்டு. அவர்களது பணிக்காலம் முடிந்து தாய்நாட்டிற்குச் சென்றதும், முதலாளி அவருக்குச் சாமானுக்காகச் சிறுதொகை பரிசளிப்பது உண்டு. இவர்கள் தாய்நாட்டிற்கு நேரே முதலாளி வீட்டுக்குச் சென்று தான், பிறகு சொந்த ஊருக்குச் செல்லவேண்டும் என்ற வழக்கம் உண்டு. அவர்களுக்கு இனாம் வந்த தொகையிலிருந்து தனக்கு சொந்த மாக விலை கொடுத்து வாங்கி எடுத்துச் செல்லும் பொருள்களை முதலாளியும் அவர் மனைவியும் பார்த்த பிறகுதான் எடுத்துச் செல்ல அனுமதிப்பார்கள்.

கடையில் உள்ள மேலாள் முதல், அடுத்தாட்கள், கேஷியர், பெட்டியடிப் பையன் எல்லோருக்கும் சாப்பாட்டுக்காக முதலாளி செலவிலேயே சமையல் ஆட்களையும் நியமித்து சம்பளம் பேசி அனுப்புவார்கள். அவர்களுக்கு ரூபாய் கணக்கில் தான் சம்பளம். அதிலும் பெரிய சமைல்காரன், பொடியன்கள் என்ற பாகுபாடும் உண்டு. பெரிய சமையல்காரன் அநேகமாகக் கடைகளின் தன்மையைப் பொறுத்து மேப்புச்சாப்பான வேலைகளில்தான் ஈடுபடுவான். அவன் ஏஜெண்டினுடைய சுகசௌகரியத்தைத்தான் பெரும்பாலும் கவனிப்பான், தினசரி அவருக்கு குளிக்க வெந்நீர் காயவைத்தல், பாய்-படுக்கை விரித்தல், கால்-கை அமுக்கி விடுதல் காய்கறி, பலசரக்குச் சாமான்கள் வாங்குதல் முதலியன அவனுடைய வேலை. எந்தச் சமையல் ஆளும் மூன்று வருடங்கள்

---

* இப்படி அடுத்தாள்கள் எழுதிக் கொடுக்கும் சம்பளச் சீட்டின் மாதிரி ஒன்றும் பின்னிணைப்பு மூன்றில் தரப் பட்டுள்ளது.

தொடர்ந்து வேலை செய்யவேண்டும் அல்லது அவனே பதிலாள் நியமித்து வைத்து, ஏஜெண்டு அனுமதியுடன் ஊர் போகலாம். இவர்களுக்கும் மாதச் சம்பளத்துடன் வேட்டி, துணிமணி, சாப்பாட்டுச் செலவுகளையும் கடை ஏற்றுக்கொள்ளும். மேலே குறித்த ஏஜெண்டு, அடுத்தாள், காட்டாள், சமையலாள் முதலியவர்கள், முதலாளியிடம் மூன்றாண்டுகள் வேலை பார்த்து வந்தாலும், அவர்களைத் தங்கள் சொந்தக்காரர்கள் போலவே, கவனித்து வருவதில் கடமை உள்ளவர்கள். ஏஜெண்டுக்கும், அடுத்தாளுக்கும் ஊரிலிருந்து கடைக்கு வந்த மூன்றாவது மாதம் மூன்று வருடச் சம்பளத்தில் பாதியைப் பெற்றுக்கொள்ள அருகதை உண்டு. அவர்கள் எந்த அலட்சியத்திற்கும் உட்படுத்தப் படாத நிலையில், சொந்தக் குடும்பத்தாரைப் போலவே, நடத்தப்படுவார்கள். ஏஜெண்டோ, அடுத்தாளோ அல்லது சமையலாளோ தங்கள் மனைவி மக்களை அந்த நாடுகளுக்கு கூட்டிச் செல்ல அனுமதியில்லை. இதை மனதில் எண்ணியேதான் நகரத்தார்களும் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் கப்பலில் ஏற்றித் தொலைதூர தேசங்களுக்குக் கூட்டிச் செல்வதில்லையென்று, சாதிமுறை நியாயப்படி ஏற்பாடு செய்திருந்தனர்.

நகரத்தார்கள் கடன் கொடுத்து வாங்கும் வட்டித் தொழிலிலும், ஈடுபிடித்த நிலங்களை வேளாண்மை செய்வதிலும், அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் மிக்க நாணயஸ்தர்களாக இருக்கவேண்டும் என்று நினைத்தது போலத் தங்கள் வேலையாட்களையும் நூறு சதவீதம் நம்பிக்கையுள்ளவர்களாகவே பார்த்து நியமிப்பார்கள். அதனால் அவர்கள் கணக்குகளையும், சகல வரவு செலவுகளையும் சரியானபடி கணக்கு வைத்துப் பார்ப்பதில் நேர்மையானவர்கள். ஒருவருக்கு ஒரு சிறு தொகை கொடுத்தாலும், கல்லாப்பெட்டிக்கு மேலேயுள்ள ஒரு கைச்சிட்டையில் குறித்துக்கொண்ட பிறகுதான் மறு வேலையைப் பார்ப்பார்கள். அதற்குப் பெயர் பெட்டிச்சிட்டை. அன்று மாலை பெட்டியை மூடும்போது அந்தச் சிட்டையைச் சரிபார்த்துக் குறிப்புச் சிட்டையில் எழுதி, வரவு செலவுகளை எழுதித் திட்டம் பார்த்து அன்றைய இருப்பைக் கட்டுவார்கள். அப்படித் திட்டம் பார்க்கும்போது அரை வீசம் காசு குறைந்தாலும் (அரைவீசம் என்பது மூன்று நயாபைசா. இந்த வீசம் அரை வீசம் முதலான தமிழ் எண்கள் பற்றி விரிவாகப் பின்வரும் பகுதி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது) கூடினாலும் கரண்டுச் செலவைப்

(Electricity charges) பாராமல் வெகுநேரம் இருந்தாவது கண்டு பிடிக்க முயலுவார்கள். கண்டுபிடித்த பிறகுதான், பெட்டியை எடுத்துவைப்பார்கள். மறுநாள் விடிந்ததும், குறிப்புச்சிட்டை யிலிருந்து, குறிப்பு(Day Book) எழுதிஅதைப் பேரேட்டில்(Ledger) பதிவார்கள். இப்படி ஒவ்வொரு தின வாரியாகவோ, மற்ற தலைப்புகளிலோ வரும் பெயர்களைக்கொண்டு ஐந்தொகை எடுப்பார்கள். அதில் வட்டி செலுத்த வேண்டியவர்களுக்கு வட்டிச் சிட்டை போட்டு, அந்த இனங்களுக்குச் சமர்ப்பித்து, வட்டியை வசூல் செய்து கொள்வார்கள். அதுபோல, அந்தக் கடையிலிருந்து பிறருக்கும், கடைக்காக வாங்கிய தொகைகளுக்குக் கொடுக்கவேண்டிய வட்டிகளுக்காக வரும் வட்டிச்சிட்டைகளையும் சரிபார்த்து வட்டி கொடுப்பதுண்டு. இந்த வட்டிச்சிட்டைத் தொகைக்கும் நாளுக்கும் பெருக்கி வருவது ராசி என்று சொல்லப் படுகிறது. ஒரு நாள் மட்டும் உபயோகிக்கும் தொகைக்குத் தினராசி என்றும், ஒரு மாதம் உபயோகப்படுத்தும் தொகைக்கு மாதராசி என்றும் சொல்வதுண்டு.

ஆயிரம் ரூபாய் ஐந்து நாட்கள் ஒருவரிடம் இருந்தால் அது ஐயாயிரம் ராசியாகிறது. அதுபோல, ஒரு மாதம் இருந்தால் முப்பதாயிரம் ராசியாகிறது. இந்த ஆயிரம் ரூபாய்க்கு நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் என்று கணக்கிட வேண்டுமானால், மூவாயிரம் ராசிக்கு வட்டி 10 ரூபாயாகும். இப்படியே நூறு ரூபாய்க்குள்ள வட்டி வீதத்திற்குத் தொகையை ராசியாக்கி எவ்வளவு பெரிய தொகைக்கும் வட்டிச் சிட்டை போட்டு வட்டியைக் கணக்கிட்டு விடலாம். வட்டிச் சிட்டை போடுவதில் ஏற்படும் சுணக்கத்திற்காக "வட்டி ஐம்புலி" (Ready Reckoner) என்ற ராசிகளைப் பெருக்கி வட்டித் தொகைகளைக் கணக்கிட சுலபமான புத்தகங்கள் விற்கப்படுகின்றன என்றாலும், நகரத்தார் களிடம் கணக்கு வேலை பார்க்கும் எந்தப் பணியாளும், ஒரு காகிதம் பென்சில்கூட இல்லாமல் வாய் வழியாகவே பெருக்கி ஞாபகசக்தியுடன் கணக்கிடுவதில் வல்லமை பெற்றவர்கள். கணிப் பொறி (Computer) மலிந்துள்ள இந்த நாட்களில், இவர்கள் எல்லோருமே, கம்ப்யூட்டர்களைவிட வல்லமை பெற்றவர்கள் என்று கூறலாம். "Brain is the First Computer of the Universe" என்ற ஆங்கிலக் கூற்றுக்கு நிகராக அத்தகைய வல்லமை பெற்ற மூளையை உடையவர்கள். இவர்களுக்கு இது கைவந்த கலை ஆனதற்குக் காரணம், இவர்கள் இளமையிலேயே

எண் சுவடி, கீழ்வாய் இலக்கம், பெருக்கல் வாய்ப்பாடு முதலியவை களை மனனம் செய்து, மூளை என்ற கம்ப்யூட்டரில் சேர்த்து வைத்து விட்டதால், அவர்கள் விரும்பி எந்த நேரத்தில் எந்த வாய்ப்பாட்டைக் கேட்டாலும் திருப்பித்தரக்கூடிய சக்தி பெற்றவர்கள் என்பதே! இதனால் தூக்கத்தில் கூட, அன்றாடம் செய்த கொடுக்கல், வாங்கலை நினைவு செய்து இருப்புப்பார்க்கும் போது ஏற்படுகின்ற திட்டக் குறைச்சலைக்கூட, நினைவு செய்யும் நிலை அவர்களுக்கு இயற்கையாகவே உண்டு. இந்த எண்சுவடி, கீழ்வாய் இலக்கம் முதலிய வாய்ப்பாடுகளைப் பிறிதொரு பகுதியில் விரிவாகக் காண்போம்.

இன்றுபோல பெரிய அலுவலகங்களில் இருநூறு முந்நூறு ஆட்களை வைத்து வரவு செலவு செய்து, இலாபம் சம்பாதித்த தொகையைவிடப் பலமடங்கு இலாபம் தந்த கடைகளை, நகரத்தார்கள் மூன்று நான்கு ஆட்களை மட்டுமே வைத்துக் கொண்டு சம்பாதித்தார்கள் என்றால், அதற்கு அவர்கள் கையாண்ட கணக்கு முறைகளே காரணமாகும். இவர்கள் வைத்திருந்த கணக்கு முறைகளைப் பற்றியும், கையாண்ட முறைகளைப் பற்றியும் விரிவாகத் தருவதற்கு முன்னர், பொது வாகச் சில பகுதிகளை இங்கே பார்ப்போம்.

# நான்கு

நகரத்தார் தொழில் நடத்துகின்ற நிறுவனங்களில் வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்வதில் பலவிதமான நன்மைகள் இருக்கின்றன.

1. அவர்களால் இந்தந்த வகையில் இவ்வளவு இவ்வளவு சம்பாதிக்கப் பெற்றுள்ளன என்பது நன்கு தெரியும்.

2. அவர்களுடைய செலவுகள் இன்னின்ன வகைகளில் இவ்வளவு இவ்வளவு ஆகியிருக்கின்றன என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடியும். அதிலிருந்து கூட்டியோ குறைத்தோ செய்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

3. பிறரிடத்தில் அவர்களால் வாங்கப்பெற்றுள்ள கடன்கள், எந்தெந்தத் தேதிக்கு என்னென்ன வட்டிக்கு, எவ்வளவு தொகை என்றும், அவைகளில் எவ்வளவு கொடு பட்டிருக்கின்றன என்ற விபரமும், பாக்கி எவ்வளவு என்பதையும் அறிந்து கொள்ளமுடியும்.

4. பிறருக்கு இவர்கள் கொடுத்துள்ள கடன்கள், வட்டி விப்ரம், வசூலான தொகை, பாக்கி முதலிய விபரங்களையும் தெரிந்து கொள்ளமுடியும்.

5. இவர்களால் இந்தெந்த சர்வே நம்பரில் எவ்வளவு நிலங்கள் கொள்முதலாகியுள்ளன என்றும், அவைகளில் வேளாண்மைச் செலவு விபரங்களும், நெல் கொண்டுமுதல் விபரங்களும் அறிந்து கொள்ளமுடியும்.

6. இதேபோல வாங்கியுள்ள கட்டிடங்கள், குதாம்புகள் (நெல் ஸ்டாக் செய்யும் இடம்) அவைகளின் மராமத்துச் செலவு, வாடகை வசூலான விபரங்களும் தெரிந்து கொள்ள முடியும்.

இதனால்தான் இவர்கள் ஒரு ஸ்தாபனத்தின் வரவு செலவு கணக்கை சரியாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர்களும் நகரத்தார்களும் கணக்கு வைக்கும் விஷயத்தில் மிகவும் அக்கறையுடையவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த ஒரு காரணத்தை மட்டும் வைத்தே மற்றவர்கள் இவர்களிடம் கடிதம் மூலமாகவே தொடர்பு கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்வதற்குக் கவலைப்படுவதில்லை.

வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்வதில் ஆங்கிலேயர்களின் வழி ஒருவிதமும் நகரத்தார்களின் வழி ஒரு விதமுமாய் இருக்கின்றன. இவை இரண்டுமே சரியான வழிகளாக இருந்தபோதிலும் நகரத்தார்களின் வழியிலேயே கணக்கு வைத்துக் கொள்வது சுலபமானதாகவும் மேன்மையுள்ளதாகவும் இருக்கிறது. இவர்களின் வழிகள் என்னென்ன விதம் என்பதைச் சற்று விளக்கமாகக் காணலாம்.

1. கணக்கு எழுதுவது சுலபமான வழியாக இருக்கும்.
2. யாரிடம் அல்லது எந்தக் கணக்கில் எவ்வளவு பாக்கி என்று கேட்டால் உடனே தாமதியாமல் கண்டுபிடிக்கக் கூடியவையாக இருக்கும்.
3. எத்தனை ஆண்டுக் கணக்கை வருமான வரியினர் பரிசோதித்தாலும், அது அப்போதைக் அப்போது எழுதியதாக இருக்குமே தவிர பின்னிட்டு ஜோடித்து எழுதப்பட்டதாக இருக்காது.
4. மேலாளும், அடுத்தாள்களும் வைத்துக் கணக்குகள் எழுதப்பட்டாலும் அதை முதலாளி எளிதில் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கும்.

இப்படிச் சுலபமான முறையில் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் வரவு செலவு கணக்குகளில் உபயோகப்படுத்தி வருகின்ற கணக்குப் புத்தங்களைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

1. **சிட்டைக்குறிப்பு.** இதற்குப் படுகுறிப்பு என்றும் சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் இதற்கு வேஸ்ட் புக் (Waste Book) என்று பெயர்.

2. அசல் குறிப்பு - இதை ஆங்கிலத்தில் ஜர்னல் (Journal) என்று குறிப்பிடுவார்கள்.
3. பேரேடு (Ledger)
4. அயன் தொகைப் புத்தகம் (Balance Sheet)
5. லாப நஷ்டக் கணக்கு (Profit And Loss A/c)
6. உண்டியல் அனுப்பு வரவு புத்தகம் (Hundi Book)
7. கச்சாத்து புத்தகம் (Voucher File)

இனி இந்தப் புத்தகங்கள் இருக்க வேண்டிய விதமும் அவைகளில் எழுத வேண்டிய விபரங்களையும் விரிவாகக் காண்போம்:

1. சிட்டைக் குறிப்பு: ஒவ்வொரு பக்கங்களிலும் தலை வரிசையில்ஒரு கோடுபோட்டு, ஒவ்வொரு பக்கத்திலும் 4 கலங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி தலைவரிசைக் கோட்டில் இன்ன வருஷம் இன்ன மாதம் இன்ன தேதி முதல் சிட்டைக் குறிப்பு என்று எழுத வேண்டும்.

முதலாவது கலம் வருஷம், மாதம், தேதி இந்தக் கலத்தில் கணக்கு எழுதப்படும் வருஷம் மாதம் தேதி இவைகளை எழுத வேண்டும். இரண்டாவது கலம் விபரம். இதில் இன்னின்ன வகையில் இன்னார் பெயரால் இன்ன காரணத்திற்காக என்ற விபரம் எழுத வேண்டும். மூன்றாவது கலம் வரவு. இந்தக் கலத்தில் இரண்டாவது கலத்தில் கண்ட கணக்கு வரவு அயிட்டமானால் இதில் அந்த தொகையை எழுதவேண்டும். நான்காவது கலம் பற்று. இக்கலத்தில் இரண்டாவது அயிட்டத்தில் கண்ட கணக்கு பற்றானால் இதில் அந்த தொகையை எழுத வேண்டும். ஆக இந்த நான்கு கலங்களில் மூன்று கலங்கள்தான் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும். வரவு கலமாவது பற்றுக் கலமாவது விடுபட்டிருக்கும்.

2. அசல் குறிப்பு: இந்தப் புத்தகமும் தலைவரிசை எழுத ஒரு கோடும், நான்கு கலங்கள் உள்ளதாயும் இருக்கும். இன்ன வருஷம், மாதம், தேதி முதல் குறிப்பு என்று தலைவரிசையில் எழுத வேண்டும். முதல் கலத்தில் சிட்டைக் குறிப்பில் கண்ட வருஷம், மாதம், தேதி, எழுதி இரண்டாவது கலத்தில் மேற்படி தேதியில் உள்ள கணக்கு விபரங்களை எழுத வேண்டும். மூன்றாவது நான்காவது கலங்கள் முறையே வரவு பற்றுக் கலங்கள், விபரத்தில் கண்ட அயிட்டம் வரவானால்

வரவு கலத்திலும், பற்றானால் பற்றுக் கலத்திலும் எழுத வேண்டும். சிட்டைக் குறிப்பில் விபரங்கள் அல்லது மைற்ற கலங்கள் எழுதும்போது அடித்தல் திருத்தல்கள் இருந்தாலும் பாதகமில்லை. ஆனால் அசல் குறிப்பு எழுதும்போது அடித்தல் திருத்தல் இருக்கக்கூடாது.

3. பேரேடு : இந்தப் புத்தகத்திலும் மேலே கண்டபடி தலை வரிசைக் கோடு ஒன்றும் நான்கு கலங்களும்தான் போட வேண்டும். தலைவரிசைக் கோட்டில் இன்ன கணக்கு அல்லது இன்னார் பற்று வரவு என்று எழுத வேண்டும். வழக்கம்போல முதல் கலத்தில் வருஷம் மாதம் தேதி எழுதி இரண்டாவது கலம் விபரத்தில், அசல் குறிப்பில் முதலாவது தேதியில் உள்ள தலைவரிசையில் உள்ள பெயரால் உள்ள கணக்கு விபரங் களை எழுதவேண்டும். ஒவ்வொரு தேதியிலும் இந்தக் குறிப்பிட்ட தலைவரிசையில் வருகின்ற கணக்கு விபரங்களை தேதிவாரியாக ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதவேண்டும். மூன்றாவது நான்காவது கலங்கள் வரவு, பற்று. இந்த விபரங்களில் காணுகின்ற அயிட்டங்கள் வரவானால் வரவு கலத்திலும், பற்றுனால் பற்றுக் கலத்திலும் எழுதவேண்டும்.

4. அயன் தொகை : இதை நகரத்தார்களின் வழக்குச் சொல்லில் ஐந்துகை என்று சொல்லப்படுகிறது. இதுவும் தலைவரிசைக் கோடு ஒன்றும், நான்கு கலங்களும் போட்டதாக இருக்கும். தலைவரிசையில் இன்ன வருஷம், மாதம், தேதிவரை அயன்துகை என்று எழுத வேண்டும். முதலாவது கலம் பேரேட்டுப்பக்கம். இதில் பேரேட்டில் எந்தப் பக்கத்தில் குறிப்பிட்ட தேதியில் கடைசி மொத்த தொகை கட்டப்பட் டிருக்கிறதோ அந்தப் பக்கத்தின் நம்பரைக் குறிக்கவேண்டும். இரண்டாவது கலம் முதலாவது கலத்தின் பக்கத்தில் கண்ட கணக்கின் பேரை எழுதவேண்டும். மூன்றாவது நான்காவது கலங்கள் முறையே வரவு பற்றுக் கலங்கள்.

5. லாப நஷ்ட கணக்கு : இந்தக் கணக்கு வருடத்திற்கு ஒரு முறைதான் எடுக்கப்படும். ஒவ்வொரு வருஷமும் பங்குனி மாதம் முடியவோ அல்லது மார்கழி மாதம் முடியவோ எடுப்பார்கள். இந்தக் கணக்கின் தலைவரிசைக் கோட்டில் இன்ன வருஷம் இன்ன மாதம் முதல் தேதி முதல் அடுத்த வருஷம் இன்ன மாதம் கடைசி தேதி முடிய லாப நஷ்டக்

கணக்கு என்று எழுதவேண்டும். இதற்கும் நான்கு கலங்கள் உண்டு. முதல் கலத்தில் பேரேட்டின் பக்க நம்பர் போட வேண்டும். இரண்டாவது கலம் விபரம். இதில் முதல் கலத்தில் கண்ட பக்கத்தின் தலைவரிசைக் கணக்கு விபரம் எழுத வேண்டும். மூன்று நான்காவது கலங்கள் முறையே வரவு பற்றுக் கலங்கள். அதில் அந்தந்தக் கணக்குகளின் வரவு பற்றுத்தொகையைக் குறிப்பிடவேண்டும்.

உண்டியல் அனுப்பு வரவுப் புஸ்தகம் : இதில் ஓவ்வொரு கடைகளுக்கும் எழுதிக்கொடுக்கும் உண்டியல்களையும், அவர்கள் வாங்கியனுப்பும் உண்டியல்களையும் வெளியூரிலிருந்து எழுதிவரும் உண்டியல்களையும் பதிய வேண்டும். இந்த புத்தகம் நான்கு பாகங்கள் கொண்டதாக இருக்கும். முதல் பாகம் நாம் எழுதிக்கொடுக்கும் உண்டியல்களின் விபரங்களான நம்பர், எழுதப்பட்ட தேதி, இன்ன ஊருக்கு, பணம் கொடுப்பவர் பெயர், இன்னார் பெயருக்கு தரிசனையா அல்லது ஆர்டரா என்ற விபரம், வட்டி விபரம், தொகை முதலிய விபரங்கள் குறிப்பதற்கான கலங்கள் போட்டிருக்கும். இரண்டாவது பாகத்தில் தலைவரிசையில் கோட்டில் இன்ன தேதிமுதல் நாம் இங்கிருந்து வாங்கியனுப்பிய உண்டியல்களின் விபரம் என்று எழுதி, உண்டியல் கொண்டுவந்தவர் பெயர், நம்பர், உண்டியல் பிறந்த தேதி, கையெழுத்துப் போட்டவரின் பெயரும் ஊரும், பணம் கொடுபட வேண்டிய ஊரும் கொடுப்பவர் பெயரும், இன்னார் பெயருக்கு உண்டியல், தரிசனையா அல்லது ஆர்டரா, வட்டி விபரம் தொகை, உண்டியல் அனுப்பப்பட்ட ஊரும் பெயரும் எழுதுவதற்கான கலங்கள் போடப்பட்டிருக்கும். மூன்றாவது பாகம் இன்ன தேதி முதல் இதர கடைகளிலிருந்தும் பற்று வரவுக் காரர்களிடமிருந்தும் நாம் பணம் கொடுக்கும்படி வந்த உண்டியல்கள் விபரம் என்று தலைவரிசைக் கோட்டில், எழுதி, உண்டியல் நம்பர், உண்டியல் தேதி, எழுதிக் கொடுத்தவர்களின் பெயரும் ஊரும், இன்னார் பெயருக்கு தரிசனையா அல்லது ஆர்டரா, வட்டி விபரம், தொகை பணம் கொடுத்த தேதி முதலியவைகளைக் குறிப்பிட்ட கலங்களில் குறித்துக் கொள்ளவேண்டும். நான்காவது பாகத்தில் தலைவரிசையில் இதர கடைகளிலிருந்தும் பற்று வரவுக்காரர்களிடமிருந்தும் நமக்கு வந்த உண்டியல்களின்

விபரம் என்று எழுதி உண்டியல் அனுப்பியவரின் ஊர், பெயர், நம்பர், உண்டியல் தேதி, கையெழுத்துப்போட்டவரின் பெயர், ஊர், பணம் கொடுப்பவரின் பெயரும் ஊரும், இன்னார் பெயருக்கு தரிசனையா அல்லது ஆர்டரா, வட்டி விபரம், தொகை,வரவு தேதி, வரவு தொகை, வேறு ஊருக்கு அனுப்பட்ட ஊரும் பெயரும், என்ற விபரங்கள் அந்தந்தக் கலங்களில் எழுதுவதற்குத் தோதாக கலங்கள் போட்டுக் கொள்ள வேண்டும்.

7. கச்சாத்துப் புஸ்தகம் : இதில் வவுச்சர்களையும் கடிதங் களையும் தேதி வாரியாக ஒட்டிவைக்கப்படும்.

மேலே கண்ட கணக்குப் புத்தகங்களின் உபயோகங்களை இனி விளக்கமாக காணவேண்டியது அவசியம். கணக்கு எழுதும் முறை களைத் தெரிந்துகொள்ள இது பயனுடையதாக இருக்கும்.

**சிட்டைக் குறிப்பு விளக்கம் :**

இந்தச் சிட்டைக் குறிப்பில், ஒரு பதிவு கணக்குகளையும், ஒவ்வொரு மாத முடிவிலும் அதுவரையுள்ள அவசியமான இரு பதிவு கணக்குகளையும் தேதிவாரியாக எழுத வேண்டும். இதர கடைகளில் இருந்தும், பற்றுவரவுக் காரர்களிடமிருந்தும் கணக்கு முடித்து அனுப்பப்பட்டு வருவனவற்றில் இருபதிவு செய்யப்பட வேண்டியவைகளாக இருந்தாலும் இச்சிட்டைக் குறிப்பில் அவசியம் பதிய வேண்டும் என்பதில்லை. அசல் குறிப்பில் தாக்கல் செய்தால் போதுமானது. ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல், தேதி வாரியாக சகல கொடுக்கல் வாங்கல் வரவு செலவுகளை எழுத வேண்டும். தேதிவாரியாக எழுத விட்டுப்போன கணக்குகள் ஏதாவது ஏற்பட்டால், தேதி கலத்தில் கணக்கு எழுதப்பட்ட தேதியைப் போட்டு, விபரத்தில் இன்ன தேதியில் என்று எழுத வேண்டும். ஒருவருக்கு ஒரு தொகையைக் கொடுத்து அல்லது ஒருவரிடமிருந்து ஒரு தொகையை வாங்கி, பிற்பாடு கணக்கு எழுதுவோம் என்று விட்டுவிடுவது முற்றிலும் தவறு. கணக்கு எழுதாமல் பெட்டியில் பணத்தைப் போடவாவது, எடுக்கவாவது செய்யும் பழக்கம் எப்போதும் திட்டக்கசகலைக் கொண்டுவந்து விடும். ஆகையால் கணக்கு எழுதியே பணம் எடுக்கும், போடும் வழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு கணக்கும் தேதியுடனும் விபரத்துடனும் இருக்க வேண்டும். "ராமசாமி பற்று ரூ. 500/-" என்று எழுதப்படும்

கணக்குகள் ஒருபோதும் பயன்படாது. இதில் இன்ன வருஷம், மாதம், தேதி, ராமசாமி பற்று என்று வந்து, அல்லது இன்ன வட்டிக்குப் பிராமிசரி நோட்டு அல்லது நகையீட்டின் பேரில் என்றாவது எழுத வேண்டும். "சாப்பாட்டு செலவு ரூ. 60" என்று எழுதுவது கூடாது. "இன்ன மாதத்திற்கு இன்னாருக்கு சாப்பாட்டுக்காகக் கொடுத்தது என்று விபரமாக எழுதவேண்டும். எந்த ஒரு கணக்கு எழுதினாலும் விபரக்கலத்தில் கணக்கின் தன்மையை முழுவிபரங்களுடன் எழுதி காட்டவேண்டும். நம்மிடம் வீராசாமி என்பவர் பிராமிசரி நோட்டின் பேரில் ரூ. 500/-கடன் வாங்கியிருப்பதாக வைத்துக் கொள்வோம். மேற்படி கடன் பத்திரத்திற்கு வீராசாமி அசலுக்காக ரூ. 200/-ம் வட்டிக்காக ரூ 60/-ம் தருவதாக வைத்துக்கொண்டு, "வீராசாமி வரவு ரூ 260/- என்று எழுதக் கூடாது. இன்ன வருஷம், மாதம், தேதி, இனப்பற்று வரவுக் கணக்கு வரவு வீராசாமி வசம் பிராமிசரி நோட்டுக்கு அசலுக்காக ரூ. 200" என்றும் "வட்டிக்கணக்கு வரவு, வீராசாமி வசம் எழுதி வாங்கிய 500 ரூபாய் பிராமிசரி நோட்டுக்கு வட்டி வந்த வகையில் ரூ. 60/-" என்றும் எழுதுவதே சிறந்த வழி.

கைமாற்று என்பது ஒருவருக்கொருவர் வட்டியில்லாமல் பற்று வரவு செய்து கொள்வது. இப்படி பற்றுவரவு செய்து கொள்ளும் தொகை நாள்பட நின்றுவிட்டால் அதற்கு வட்டி உண்டு. இது பெரும்பாலும் பற்றுவரவுக் காரர்களுடைய எண்ணத்தைப் பொறுத்தது. இந்த கணக்குகளை அசல் குறிப்பில் எழுதுவதில்லை. எழுதினால் பேரேட்டில் பதியவேண்டும். பேரேட்டில் பதியப்பட்டால் அதற்கு வட்டி உண்டு. ஆகையால் இந்தக் கைமாற்றுக் கணக்குகளைச் சிட்டையிலேயே வைத்துவிட வேண்டும். ஒரு மாதக் கணக்கு முடிந்து அசல் குறிப்பு எழுதும் போது இந்த கைமாற்றுக் கணக்கு மறுமாதச் சிட்டையில் பதிந்து கொள்ள வேண்டும்.

சில கடைகளில் சிட்டைக் குறிப்பு எழுதிக்கொண்டே வந்து மாதமுடிவில் அசல் குறிப்பு எழுதி சிட்டையில் இருக்கும் பற்று வரவுகளை வேறு ஒரு துண்டு காகிதத்தில் எழுதிக்கொண்டு சிட்டையை கிழித்து எறிந்து விடுவதுண்டு. இது தவறு. பணம் கொடுத்து வாங்கும்போது ஏற்பட்ட சிட்டைக் குறிப்பு அவசியம் இருக்கவேண்டும். சிட்டையில் கைமாற்று வாங்கிக்கொண்டுவந்த விபரங்களை முதலாளியாவது பற்றுவரவுக் காரர்களாவது தெரிந்துகொள்ள வேண்டுமானால் அப்போது இந்த சிட்டைக் குறிப்பு பயன்படும்.

கா.அரு. வசம் ரூபாய். 500 கைமாற்று வாங்கினதாக வைத்துக் கொள்வோம். அதற்கு கைமாற்றுக் கணக்கு வரவு கா.அரு. வசம் கைமாற்று வாங்கியது ரூபாய் 500'' என்று எழுத வேண்டும். அதேபோல கைமாற்றுக் கணக்கு பற்று ''சா.சித. வசம் கைமாற்று கொடுத்தது ரூபாய் 250'' என்று நாம் கொடுத்திருந்தால் எழுதவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வேலையை, அது குதாம்பு ரிப்பேராகவோ அல்லது கட்டிட மராமத்தாகவோ இருந்து அதற்குச் சரியான நேரத்தில் சாமான்கள் கொண்டு வந்து தருவதற்கான அட்வான்ஸ் கொடுத்தால், அப்படிக்கொடுக்கும் தொகைளைக் கணக்கு எழுதும்போது விபரம் கண்டு எழுதவேண்டும்.

செங்கல் காளவாய் சிவராமன்பற்று கட்டிட மராமத்திற்காகச் செங்கல் 1000க்கு ரூபாய் 150 ஆகப்பேசி செங்கல் 80000ம் இரண்டு மாதத் தவ்ணையில் கொண்டுவந்து தருவதாக முடிவு செய்து கொண்டு நாளது தேதியில் அட்வான்ஸ் கொடுத்தது ரூபாய் 2000 என்று எழுதவேண்டுமே தவிர, கட்டிட மராமத்து பற்று என்றோ செங்கல் காளவாய் சிவராமன் பற்றோ எழுதக்கூடாது.

இருபதிவு வழக்கம் (Double Entry) என்பது ஆங்கிலேயர் களின் கொள்கையை பின்பற்றி நகரத்தார்களின் கணக்கியல் முறைகளில் கையாளப்பட்டு வருகிறது. அதாவது ஒருவரிடத்தில் ஒரு தொகையை வாங்கி அதை மற்றொருவருக்கு கொடுத்தால் அதை வரவு வைத்துப் பற்று எழுதுவதுதான். இப்போது முன் சொல்லிய செங்கல் காளவாய் சிவராமன் மறுபடி ரூபாய் 2000 கேட்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு இந்தியன் பாங்க் செக் கொடுத்தால் அதை அடியில் கண்டவாறு எழுதவேண்டும்.

நாளது தேதியில் இந்தியன் பாங்க் வரவு செங்கல் காளவாய் சிவராமன் பேரால் 023632 நம்பர் செக் 1, வரவு ரூ. 2000. செங்கல் காளவாய் சிவராமன் பற்று செங்கல் விலைக்கு அச்சாரமாக முன் கொடுத்த ரூ. 2000த்துடன் இப்போது கொடுத்தது இந்தியன் பாங்க செக் 023632 ஒன்றுக்கு ரூபாய் 2000, என்று எழுதவேண்டும். இந்த இடத்தில் இருபதிவு ஏற்படுகிறது. எப்படியெனில் செங்கல் காளவாய் சிவராமனுக்குக் கொடுத்த ரூ. 2000ம் ரொக்கமல்ல. இந்தியன் பாங்கில் வாங்கிக்கொள்ளும்படி செக் கொடுத்திருக்கிறது. இந்தியன் பாங்கியில் வாங்கி சிவராமனுக்கு கொடுத்ததாய் ஏற்படுகிறது. ஆகையால்

இந்தியன் பாங்கியின் பேரால் வரவு வைத்து சிவராமன் பேரால் பற்று எழுதப்பட்டிருக்கிறது. குறிப்பில் இருப்பு சரியாய் ஆகும் படிக்கும், சிவராமனுக்குக் கொடுத்த விபரத்தைக் காட்டியும், இந்தியன் பாங்கில் பணம்வாங்கிய விபரத்தைக் காட்டியும் இப்படி மூன்று விபரங்களைத் தெளிவாக்க இரண்டு கணக்குகள். இப்படி வரக்கூடிய கணக்கு களைச் சிட்டைக் குறிப்பில் எழுதித்தான் அசல் குறிப்பில் எழுத வேண்டும். ஒரு இடத்தில் வாங்கி மற்றொரு இடத்தில் கொடுப்பதை, கையிலிருந்து பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் ஏன் கணக்கில் எழுதவேண்டும் என்று விட்டுவிடக் கூடாது. ஒருவரிடத்தில் எப்பொழுது எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வரவேண்டியதைக் கடனுக்கு கொடுக்கும்படி சொல்லிவிட்டோமோ, அப்பொழுதே அந்தத் தொகை நமது கையில் வந்துவிட்டதாகத்தான் கொள்ள வேண்டும். ஆகையால் ஒருவர் கையில் ரொக்கம் வாங்கி மற்றொருவருக்குக் கொடுத்தாலும் அல்லது செக் மூலமாகக் கொடுத்தாலும் கிரமப்படி வரவு வைத்துப் பற்று எழுதவேண்டியது அவசியம்.

ஒரு வேலையைச் செய்துமுடிக்க அல்லது ஒரு பொருளை நமக்குக் கொண்டுவந்து தருவதற்கு அச்சாரமாக, அதாவது அட்வான்ஸாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அவைகளை வேலை முடிந்தவுடன், கணக்கை செட்டில்செய்து பாக்கியைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்த பிறகு அவர்கள் பெயரால் பற்றாயிருக்கும் தொகையை வரவு வைத்து அந்தந்தப் பேரேடுகளுக்குப் பற்று எழுதிக்கொள்ள வேண்டும். முன்பு செங்கல் சப்ளை செய்வதற்காக செங்கல் களவாய் சிவராமன் கணக்கை அடியில் கண்டவாறு தாக்கல் செய்யவேண்டும்.

துந்துபி வருடம் வைகாசி மாதம் 12௳ செங்கல் காளவாய் சிவராமன் பற்று செங்கல் 1000 ரூ. 150 ஆகப் பேசி 80000 செங்கல் விலையில் நாளது தேதியில் ரொக்கம் கொடுத்தது ரூ. 12,000. செங்கல் காளவாய் சிவராமன் வரவு முன் இருதடவைகளில் அட்வான்ஸ் கொடுத்தது ரூ. 4,000. கட்டிட மராமத்துச் செலவு குதாம்பு இரண்டையும், பிரித்துச் சரிசெய்து கட்டிய வகையில் செலவு ரூ. 12,000.

மேற்படி கணக்குத் தாக்கல் செய்யும்போது ஒரு சந்தேகம் வரக்கூடும். இந்த தொகைகளை சிவராமன் பேரால் பற்றெழுதிப்

பிறகு வரவு வைக்காமல் நேரே கட்டிடமராமத்துச் செலவு கணக்கு பற்று எழுதினால் என்ன என்பதே. இதற்காக இரண்டு முறை எழுதவேண்டுமா என்றால் அதன் காரணம் இதுதான். ஒரு பொருளை சப்ளை செய்ய அட்வான்ஸ் கொடுக்கப்பட்டால் மேற்படி வரவு செலவுகள் முற்றிலும் தீர்ந்தவுடன்தான் அந்தக் கணக்கு அந்தப் பேரேடுகளுக்குக் கொண்டுபோக வேண்டும். அப்படியில்லாமல் அப்போதைக்கப்போது பேரேடுக்குக் கொண்டு போய் விட்டால் அந்த நபர் பேரால் என்ன பாக்கி, என்ற விபரங் களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் பல கணக்குகள் அடங்கி யிருக்கும் பேரேடுகளைப் பரிசீலனை செய்து விபரம் எடுப்பது கஷ்டம். மேலும் சப்ளை செய்யாமல் விட்டுவிட்டால் அட்வான்ஸ் கொடுத்த தொகையை திரும்பவும் வசூல் செய்தால் அந்த தொகையை பேரேட்டில்தான் வரவுவைக்க வேண்டி வரும். அப்படி பற்றெழுதி வரவு வைத்துக் கொண்டுபோவது கணக்கிற்கு அழகல்ல. ஆகையால்தான் அட்வான்ஸ் கணக்குகளையும். ஈரட்டுக் கணக்குகளையும், பைசல் செய்துகொண்டு சிட்டைக் குறிப்பில் அந்தந்தக் கணக்குகளில் தாக்கல் செய்துகொள்ள வேண்டும் என்பது நகரத்தார்களிடையே உள்ள நல்ல வழக்கங் களில் ஒன்று.

வீட்டுச் செலவிற்காவது, சாப்பாட்டுச் செலவிற்காவது கடை களில் வாங்கிய சாமான்களுக்கு கச்சாத்துக்கள் வந்தால், அந்தக் கணக்குகளை உடனுக்குடன் சிட்டைக்குறிப்பில் தாக்கல் செய்ய வேண்டும். நேரே அசல் குறிப்பில் தாக்கல் செய்துகொள்ளலாம் என்று வைத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக கல்கத்தாவி லிருந்து ரூ. 300 ஜவுளி வாங்கி அனுப்பியிருப்பதாக ஒரு கச்சாத்து வந்தால் அதை துந்துபி வருஷம் ஐப்பசி மாதம் 1௳ கல்கத்தா கடை வரவு ஜவுளி வாங்கியனுப்பிய வகையில் ரூ. 300 என்றும் சில்லறைச் சிலவு சிப்பந்திகளுக்காகத் தீபாவளிக்கு வாங்கிய ஜவுளி வகையில் பற்று ரூ.300 என்றும் தாக்கல் செய்துகொள்ள வேண்டும்.

ஒருவர் பெயரால் ஒரு கணக்கு எழுதினால் அது பற்று வகையாக இருந்தால் அதே தேதியில் அதே கணக்கில் வேறு பற்று. வகை வந்தால் அதற்கு இன்னார் பற்று என்று எழுதத் தேவை யில்லை. "இதுவும் பற்று" என்று எழுதினால் போதுமானது. அதே கணக்கில் அடுத்து ஒரு துகை வரவு கணக்கில் வருமானால் இன்னார் வரவு என்று எழுதாமல் "உடன் வரவு" என்றும், ஏதேனும் அடுத்துப் பற்றுத் துகை வந்தால் "உடன் பற்று"

என்றும் இப்படியெல்லாம் கணக்கைச் சுருக்கியும் வாசக அழகைக் கூட்டியும் எழுதவேண்டும்.

சில சமயங்களில் நாம் கொடுத்திருக்கின்ற கடனுக்கு முன் வட்டி தாக்கல் செய்வதை கீழ்கண்ட உதாரணத்துடன் விளக்கப் பட்டிருக்கிறது.

| | வரவு ரூ. அ. பை. | பற்று ரூ. அ. பை |
|---|---|---|
| துந்துபி வருஷம் மாசிமீ 30உ | | |
| நா.கரு.நா. பற்று 1வட்டி/பிராமிசரி நோட்டு 1, பற்று ரூ | | 200. 0. 0 |
| இதுவும் பற்று நகையீட்டு சீட்டு நம்பர் 15க்கு வட்டி வசம் பற்று ரூ | | 50. 0. 0 |
| இதுவும் வரவு நகையீடு சீட்டு நம்பர் 15க்கு ரூ. 50க்கு மாதம் 1க்கு முன் வட்டி வாங்கியது ரூ | 5. 0. 0 | |
| உடன் வரவு மேற்படி கணக்கில் கைமாற்றாக பாக்கி வைத்துக் கொண்டது ரூ | 30. 0. 0 | |
| உடன்பற்று நகையீடு சீட்டு நம்பர் 15க்கு ரூ.50க்கு முன் வட்டிக்குப் பற்று ரூ | | 5. 0. 0 |
| வட்டி வரவு மேற்படி வசம் மேற்படி வகையில் ரூ | 5. 0. 0 | |
| ராம.சுப. வரவு கைமாற்றுக் கணக்கில் ரூ | 215. 0. 0 | |
| பழ.ப. பற்று 200 ரூபாய் பிராமிசரி நோட்டுக்கு மாதம் 10க்கு முன் வட்டியில் ரூ | | 20. 0. 0 |
| உடன் வரவுவட்டிக்காகவாங்கியதுரூ | 20. 0. 0 | |
| வட்டி வரவு மேற்படி வசம் ரூ | 20. 0. 0 | |
| ராம.சுப. பற்று கைமாற்று பாக்கி ரூ | | 30. 0. 0 |
| சு.தெ.ப. வரவு கைமாற்றுக் கணக்கில் ரூ | 225. 0. 0 | |
| ராம.சுப. பற்று கைமாற்று கணக்கில் ரூ | | 215 .0. 0 |
| ஆக ரூ. | 520. 0. 0 | 520. 0. 0 |

இந்தக் கணக்கில் பதின்மூன்று நடவடிக்கைகள் நடை பெற்றுள்ளன. 1வது நா.கரு.நா.க்கு 1வட்டி பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக்கொண்டு கொடுத்தது ரூ.200. 2வதாக ரூபாய் 50 பற்று மேற்படியாருக்கு நகை யீட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 3வதாக ரூபாய் 5 வரவு மேற்படியாரிடமிருந்து 50 ரூபாய் கணக்கிற்கு வட்டி வாங்கியிருக்கிறது. 4வதாக ரூபாய் 30 வரவு மேற்படியாரிடத்தில் கைமாற்றுப் பாக்கியாய் வரவு வைக்கப் பட்டிருக்கிறது. 5வது ரூபாய் 5 பற்று, வட்டிக்காக பற்று எழுதப் பட்டிருக்கிறது. 6வது. ரூ,5 வரவு, வட்டிக்காக வரவு வைக்கப்பட் டிருக்கிறது. 7வது ரூபாய் 215 வரவு. ராம.சுப. வசம் கைமாற்று வாங்கி வரவு வைக்கப்பட்டிருக்கிறது. 8வது ரூ.20 பற்று. பழ.ப. கணக்கு 200 ரூபாய் பிராமிசரி நோட்டுக்கு வட்டிக்காக பற்று எழுதியதை வரவு எழுதப்பட்டிருக்கிறது. 10வதாக ரூபாய் 20 வரவு, மேற்படி வட்டியை வட்டி வரவு வைக்கப்பட்டிருக்கிறது. 11வதாக ரூபாய் 30 பற்று. ராம.சுப. வசம் வாங்கியிருந்த கைமாற்றுக்காகக் கொடுத்து பற்று எழுதப்பட்டிருக்கிறது. 12வதாக ரூபாய் 225 வரவு. சு.தெ.ப. வசம் கைமாற்று வாங்கப் பட்டிருக்கிறது. 13 வதாக பற்று ரூ. 215 ராம. சுப. வசம் வாங்கி கைமாற்றுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி முன் வட்டி வாங்கிய கணக்குகளுக்கு மாதாமாதம் கிஸ்தியாகவாவது, ஒரே டயத்திலாவது தவணைக் கடைசியில் வசூல் செய்யப்படும்.

முதலில் பிராமிசரி நோட்டிலாவது, நகையீட்டின் பேரிலாவது கடன் கொடுத்து பின்னால் வட்டியும் அசலும் சேர்த்து வாங்குவதும் உண்டு. வட்டி மாத்திரம் பேசிய தவணையில் வாங்கி, அசலை பாக்கி வட்டியுடன் பேசிய தவணையில் வாங்கிக்கொள்வதும் உண்டு. இப்படி பின்னால் வட்டியை தாக்கல் செய்து கணக்கு எழுதுகின்ற விபரத்தை, பின்வரும் உதாரணத்துடன் விளக்கப்பட்டிருக்கிறது. சா.ராம. சிதம்பரம் செட்டியார் என்பவர் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து, 1901ம் வருடம் பிப்ரவரி மாதம் 28உ ரூ. 3000/- ஒரு வட்டிக்கு கடன் வாங்கினார். அவர் 1902ம் வருடம் மார்ச் மாதம் 1ம் தேதி வட்டியும் அசலுமாக ரூ. 3360/-கொண்டு வந்து கொடுத்தார்.

இதை பின்கண்டவாறு தாக்கல் செய்யவேண்டும்.

429858

| | வரவு ரூ. அ. பை. | பற்று ரூ. அ. பை. |
|---|---|---|
| 1901ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி சா.ராம. சிதம்பரம் செட்டியார் பற்று ஒரு வட்டி பிராமிசரி நோட்டு ஒன்றுக்குப் பற்று ரூ | | 3000. 0. 0 |
| 1902ம் வருடம் மார்ச் மாதம் 1ம் தேதி சா.ராம. சிதம்பரம் செட்டியார் வரவு வட்டியுடன் வாங்கியது ரூ | 3360. 0. 0 | |
| வட்டி வரவு ஷியார் வசம் ரூ | 360. 0. 0 | |
| பழ.ப. பழநியப்ப செட்டியார் பற்று நாளது தேதிவரை 3000 ரூ. கணக்கிற்கு மாதம் 12க்கு வட்டி ரூ | | 360. 0. 0 |
| ராம.சுப. பற்று கைமாற்றுக் கணக்கில் ரூ | | 360. 0. 0 |
| ஆக ரூ | 3720. 0. 0 | 3720. 0. 0 |

மேற்படி கணக்கில் 1901ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி சா.ராம, சிதம்பரம் செட்டியாருக்கு ரூ. 3000/-கொடுத்து பற்று எழுதப்பட்டிருக்கிறது. 1902ம் வருடம் மார்ச் மாதம் 1ம் தேதி ஷியாரிடம் ரூ. 360/-வட்டி சேர்த்து ரூ. 3360ம் வாங்கப்பட்டிருக்கிறது. ஷி ரூ.360/ம் வட்டி வரவு வைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரஞ் செட்டியாருடைய பேரேட்டில் ரூ.3000 மட்டும் பற்று இருக்க அதற்கு ரூ.360/-வரவானால், ரூ.360/-அதிக வரவு ஏற்படும். அந்த ஏடு பற்று-வரவு நேராவதற்காக, வட்டிக்காக ரூ.360 பற்று எழுதவேண்டியிருக்கிறது. வட்டிக்காக சிதம்பரஞ் செட்டியார் பற்று ரூ.360/-எழுதி வட்டி வரவு வைப்பதைவிட, ஷியாரிடம் வாங்கிய ரூ.3360/ல், ரூ.3000/-அசலுக்காகவும், ரூ.360/-வட்டிக்காகவும் வரவு வைத்து விட்டால், அவருடைய ஏடும் பற்று-வரவு நேராகிவிடும். வட்டித் துகையும், வட்டி ஏட்டிற்கு வந்துவிடும். வேலையும் இரட்டிப்பாக ஆகாது. மேற் கண்டபடி எழுதினால் பின்னொரு சமயத்தில் சிதம்பரம் செட்டியார் ஏட்டைப் பார்த்தால், வட்டி வரவு வந்ததாகவே

தெரியாது. ஆகையால்தான், ஆசாமிகளின் ஏடுகளில் வட்டி வரவு வைத்து பற்று எழுதும் பழக்கத்தை நகரத்தார்கள் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

நம் கடையிலிருந்து வேறொரு கடைக்கு உண்டியல் எழுதிக் கொடுத்து விட்டால் உடனே அதைக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். அப்படி வரவு வைத்ததும் இன்ன தேதி, இன்னார் பேரால் இன்ன தொகை என்பதும், இன்ன தொகைக்கு உண்டியல் என்பதும், தெரிசனையிலா அல்லது ஆர்டரிலா என்பதனையும் வட்டி விபரத்தையும் விபரமாகக் குறிப்பிட வேண்டும். 1911ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் தேதி கல்கத்தா கடை ஏஜெண்டை பணம் கொடுக்கும்படி, அரு.பழ. பெயருக்கு ரூ.2000/-க்கு ஒரு தெரிசனை உண்டியலும், அதே தேதியில் சென்னை கு.அரு. குப்பாஞ் செட்டியாரைப் பணம் கொடுக்கும்படி ரூ.5000/-க்கு வட்டி உண்டியல் ஒன்றும் எழுதிக்கொடுத்திருந்தால், ஷெ கணக்குகளை கீழ்க்கண்டவாறு தாக்கல் செய்துகொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| ''1911ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் தேதி கல்கத்தா கடை நடப்புக்கணக்கு வரவு இவ்விடம் பழ.அரு. பழ. பெயரால் ஷெயார் ஆர்டருக்கு அவ்விடம் தெரிசனையில் பணம் கொடுக்கும்படி எழுதிக்கொடுத்த 32ம் நம்பர் உண்டியல் 1க்கு வரவு | ரூ. | 2,000 |
| சென்னை கு.அரு. குப்பாஞ் செட்டியார் வரவு இவ்விடம் பழ.அரு.பழ. பெயரால் அவ்விடம் நடப்பு வட்டியுடன் பணம் கொடுக்கும்படி (Bearer) பேரர் உண்டியல் 33ம் நம்பர் 1க்கு வரவு | ரூ. | 5,000 |

இப்பொழுது 32ம் நிம்பர் உண்டியல் ரூ. 2000 நமது கல்கத்தா சொந்தக் கடைக்கு என்றும், அது நடப்புக்கணக்கு என்றும், அது ஆர்டர் உண்டியல் என்றும், அதாவது பழ. அரு. பழ. கையெழுத்துப் போட்டுத்தான் மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் ஏற்படுகிறது. அதுவுமில்லாமல் மேற்படி உண்டியலுக்கு வட்டியில்லாமல் காட்டிய தேதிக்கு பணம் கிடைக்கும் என்றும் ஏற்படுகிறது. ஆனால் 5000/- ரூபாய் உண்டியலோ நடப்பு வட்டி உண்டியல் வட்டியுடன் பணம் கிடைக்கும், கு. அரு. கடையில் பணம் வாங்கவேண்டியது என்றும், பணம் மாற்றிக்கொள்ள பழ. அரு. பழ. கையெழுத்து வேண்டியதில்லை என்றும் ஏற்படுகிறது.

நம்முடைய கடையிலிருக்கும் உண்டியலை மற்றொரு கடைக்கு அனுப்பவேண்டும் என்றால், அதைக் கணக்கில் பற்று எழுதும்போது, உண்டியல் தேதி, எழுதியவர் பெயர், இன்னாரிடம் இன்ன ஊரில் பணம் வாங்க வேண்டிய விவரம், தெரிசனையா நடப்பு வட்டியா என்ற விபரங்களுடன் பற்று எழுதவேண்டும். 1910ம் வருடம் மார்ச் மாதம் 10ம் தேதி சிவராமன் செட்டியார் 1000/- ரூ. உண்டியலுக்கு பணம் வாங்கிக் கொண்டு போனதாக வைத்துக்கொள்வோம். மேற்படி உண்டியல், பிறந்த தேதி அ. க. கருப்பஞ் செட்டியாரால் 1910ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்டது. சுப்பிரமணியன் செட்டியார் பெயருக்கு பணம் வாங்க வேண்டியது. சென்னை சு. நா. கடை வசம் உண்டியல், தரிசனை உண்டியல் இதை "1910ம் வருடம் மார்ச் மாதம் 15ம் தேதி சென்னை கடை பற்று நாளது மாதம் 1ம் தேதியாகி இவ்விடம் அ. க. கருப்பஞ் செட்டியார் பெயரால் அவ்விடம் சு. நா. கடை வசம் தெரிசனையில் பணம் வாங்கும்படி, சிவராமன் செட்டியார் வசம் வாங்கியனுப்பிய தெரிசனை பேரர் உண்டியல் நிம்பர் 21க்கு பற்று ரூ. 1000/- என்று எழுதவேண்டும்.

நகரத்தார்களைத் தவிரவேறு சில வகுப்பார்கள் சிலவு கணக்கு மாத்திரம் செம்மையாக வைத்துக் கொள்ளாமல், தங்களுக்கு ஏற்படும் எல்லா வகையான செலவுகளையும் ஒரே அயிட்டமாக எழுதி ஒரே பேரேட்டில் பதிந்து வைத்துக்கொள்கிறார்கள். அவைகளை இன்னின்ன விதத்தில் இவ்வளவு இவ்வளவு சிலவு என்று பார்க்கவேண்டுமானால் மிகவும் கஷ்டம். எனவே சாப்பாட்டுச் சிலவு, சில்லரைச் சிலவு, வட்டம், கமிஷன், வாடகைச் சிலவு, வட்டிச் சிலவு, ஸ்டாம்புச் சிலவு, ஸ்டேஷனரிச் சிலவு, சம்பளச் சிலவு முதலியவைகளைத் தனித்தனி அயிட்டமாக எழுதி அவைகளை வெவ்வேறு பேரேட்டில் பதியவேண்டும். மேற்கண்ட ஏற்பாடுகளை அனுசரித்து சிலவு எழுதக் கூடியவைகளைச் சிட்டைக் குறிப்பிலேயே விளக்கி எழுதவேண்டும். சிலவு கணக்கில் சில ஏடுகளில், பல அயிட்டங்களைச் சேர்த்து ஒன்றாய் கச்சாத்துப்படி என்று எழுதநேர்ந்தால், மேற்கண்டபடிக்குள்ள கச்சாத்து வவுச்சர் பைல் என்னும் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

பேரேடு ஏற்படாத கைமாற்றுக் கணக்குகளை அசல் குறிப்பில் எழுதவேண்டியதில்லை. ஒரு மாதச் சிட்டையில் பேர்த்து எழுதும்

போது, 1ம் தேதி முதல் எழுதுவதில் குறிப்பில் எழுதப்படும் கணக்குகளை ஏதாவது ஒரு அடையாளக்குறி செய்துகொண்டு போகவேண்டும். மாதம் முடிய எழுதியவுடன் அடையாளக்குறி இடாமல் இருக்கும் சிட்டைக்கணக்குகளை வேறொரு விதமாக அடையாளக்குறியிட்டு மறுமாதச் சிட்டையில் எழுதவேண்டும், முதலில் அசல் குறிப்பு எழுதி, முன் மாதக் கணக்குடன் சேர்த்து இருப்புக்கட்டிய பிறகு மேற்படி குறிப்பு இருப்பை சிட்டைக் குறிப்பின் தலைப்பில் "குறிப்பு இருப்பு" என்று கட்டி, மேற்படி துகையை வரவு கலத்தில் போடவேண்டும்.

இதன் பிறகு பழைய சிட்டைக்குறிப்பில் இருந்து பேர்த்து எழுதிய இரண்டாவது விதமான அடையாளம் செய்த கணக்கு களையும் சேர்த்து பற்று-வரவு போட்டுக் கூட்டுத்துகை கட்டி குறிப்பு இருப்புடன் சேர்த்துப் பார்த்து வரும் தொகையும் முந்திய மாதச் சிட்டையின் கடைசியில் கட்டியிருக்கும் தொகையும் சரியாக வரவேண்டும். அப்போதுதான் குறிப்புச் சிட்டையில் ஏற்படாத கணக்குகளை சரியானபடி அசல் குறிப்பில் பேர்த்து எழுதியதாகக் கொள்ளப்படும். அப்படிப் பேர்த்து எழுதுவதில் வரவு இன்னமாதச் சிட்டையில் என்றும், பற்று இன்னமாதச் சிட்டையில் என்றும் எழுதிக்கொண்டு போனால், எத்தனை மாதம் ஆனாலும் கூட சிட்டையில் இருக்கும் கணக்குகள் இன்னமாத சிட்டையைப் பார்த்துக் தெரிந்து கொள்ளலாம்.

பாங்கில் நம் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டிருக்கும் துகைகளுக்கு அநேகமாக வட்டி கிடைக்காது. சேவிங்ஸ் பாங் கணக்காக இருந்தால் சொற்பவட்டிதான் கிடைக்கும். ஆனால், நாம் டெபாசிட் செய்திருக்கும் தொகையில் எந்த சமயம் செக் அனுப்பினாலும், கொடுபடக்கூடியவைகள். செக் என்பது ஒருவருக்கு ஒரு தொகையைக் கொடுக்கும்படி ஒரு பாங்குக்கு நம்மால் கொடுக்கப்படும் ஆர்டர். பாங்கில் நாம் பணம் கட்டியிருந்தால்தான் இப்படி ஆர்டர் அனுப்ப முடியும். பாங்கில் நம்மால் கட்டப்படும் தொகைகளை அந்தந்த பாங்கின் பெயரால் பற்று எழுதவேண்டும். செக் கொடுக்கும் காலத்தில் இன்ன பாங்க் வரவு இத்தனாம் நம்பர் செக் ஒன்றுக்கு வரவு ரூபாய் இவ்வளவு என்று எழுதவேண்டும். இதுவரை சிட்டைக் குறிப்பின் உபயோகத்தை விளக்கமாக தெளிவு படுத்தப்பட்டது. இந்தச் சிட்டைக்குறிப்பில் கண்ட ஏற்பாட்டுகளின்படிக்கு ஒவ்வொரு கடைகளிலும் செய்யப்படும் கொடுக்கல், வாங்கல் காரியங்களும்

அந்தந்த தேதிகளிலேயே எழுதப்பட்டவைகள், ஆதலால் மற்ற அசல், குறிப்பு, பேரேடு, ஐந்துகை முதலியவைகள் எல்லாம் இந்தச் சிட்டைக் குறிப்பைப் பார்த்தே நகல் செய்யப்படுவதால், இந்தச் சிட்டைக்குறிப்பே மூதன்மையான தஸ்தாவேஜாக இருக்கிறது.

ஒரு கடையில் நடைபெறும் தொழிலுக்கு உள்ள கணக்குகளை இந்தச் சிட்டைக் குறிப்பில் எழுதிவந்து, அதைக் குறிப்பில் பெயர்த்து எழுதி, பேரேட்டுக்கு வரக்கூடாதக் கைமாற்றுக்கணக்கு களை வேறொரு சிட்டையில் எழுதிக்கொண்டு, மேற்படி பழைய சிட்டைகளைக் கிழித்தெறிந்துவிட்டால், கிழித்தெறிந்த சிட்டையில் என்னென்ன கணக்குகள் இருந்தன என்று முதலாளி களுக்கு அவர்கள் வேண்டும் காலத்தில் காட்டமுடியாது. அப்படி அவர்கள் கேட்டுக்காட்ட முடியாவிட்டால், மேற்கண்ட கிழிபட்டுப் போன சிட்டையில் வருமானங்கள் கிடைத்து அவைகளை அசற்குறிப்பிற்குக் கொண்டுவராமல், அதில் வருகின்ற இலாபத்தை முதலாளிகளுக்கு கிடைக்கவிடாமல் செய்து ஏஜெண்டுகள் எடுத்துக்கொண்டதாகக்கூட ஐயம் ஏற்படலாம். ஒரு இருப்பு திட்டத்திற்கு மேல் வைத்துக்கொள்வதும் கைமாற்றுப் பணங்களைச் சிட்டைக் குறிப்பிற்கு வராமல் வாங்குவதும் கூடாது. ஒரு கடையில் எழுதப்பட்ட சிட்டைக்குறிப்பு முதல் எந்தவொரு கணக்கும் கிழித்தெறிவதற்கு இலக்காகக் கூடாது. இனிவரும் பகுதிகளில் அசல் குறிப்பு, பேரேடு முதலியவைகளின் விளக்கங் களை விரிவாகக் காணலாம்.

# ஐந்து

நகரத்தார்களால் கையாளப்பெற்று வந்த கணக்குப் புத்தகங்களில் அசல் குறிப்பும் ஒன்று. ஒவ்வொரு மாதமும் 30ஆம் தேதி சிட்டைக்குறிப்பில் உள்ள கணக்குகளைப் பெயர்த்து அசல் குறிப்பில் பதிய வேண்டும் என்று முன்பு விளக்கிக் கூறப் பட்டிருந்தது. பேரேடு ஏற்படாமல் இருக்கும் கைமாற்றுக்கணக்கு களை இந்த அசல் குறிப்பில் எழுதக்கூடாது. அந்தக் கணக்குகளை பின்மாதச் சிட்டைக் குறிப்பில்தான் வைக்கவேண்டும் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சாதாரண கணக்குகளை அசல் குறிப்பில் எழுதும்போது அதிக விபரம் எழுதாமல் சிட்டைக்குறிப்பு விபரப்படி என்று எழுதினாலும், முக்கியமான கணக்குகளை எழுதும்போது அப்படி எழுதாமல், சிட்டைக்குறிப்பில் இருக்கும் விபரங்களை கண்டிப்பாக எழுதவேண்டும். சிட்டைக் குறிப்பிலும் அசல் குறிப்பிலும் உள்ள விபரங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருக்கக்கூடாது.

வெளியூர்க் கடைகளிலிருந்து முடித்துவரும் கணக்குகளை இரட்டைப் பதிவு முறையிலேயே எழுதுவது அவசியம். ஆகையால் இவைகளை சிட்டைக் குறிப்பில் பதியாமல் நேரடியாகவே அசல் குறிப்பில் தாக்கல் செய்துவிடலாம். அப்படித்தாக்கல் செய்கின்ற கணக்குகளை ஒவ்வொரு மாத முடிவிலாவது அல்லது அடுத்தமாத முதல் தேதியிலாவது தாக்கல் செய்து கொள்ளவேண்டும், அப்படித் தாக்கல் செய்வதில் நம்முடைய சொந்தக் கடைகளாக இருந்தால், முதலில் பேரேட்டை எடுத்து கணக்கு முடித்திருக்கும் தேதிவரை பதிவாகிவிட்டதா என்று பார்த்து, அந்தப்

பேரேட்டிற்கும், முடித்து வந்திருக்கின்ற கணக்கிற்கும் ஒத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் இங்கிருந்து நம்மால் எழுதிக் கொடுக்கப்பட்ட உண்டியல்களுக்கு முற்றிலும் பணம் கொடுக்கப் பட்டுவிட்டதா என்றும், இங்கிருந்து நம்மால் வாங்கி அனுப்பப் பட்ட உண்டியல்களுக்கெல்லாம் பணம் வாங்கியாகிவிட்டதா என்றும் சரிபார்த்துக்கொள்ளவேண்டும். மேலும், அத்துடன் வந்திருக்கும் வட்டிச்சிட்டைகளும், சரியாகிவிட்டதா என்றும் சரிபார்த்துக்கொள்ளவேண்டும்.

சில சமயங்களில் நம்மால் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும் உண்டியல்களில் சில, அவர்களிடம் போய்ச்சேராமல் இருத்திருக் கலாம். சில சமயங்களில் வட்டி உண்டியல்களாய் இருந்தாலும், உண்டியல் வைத்து இருப்பவர்களுக்கு பணம் தேவையில்லாத காலமாக இருந்தாலும், அவைகள் தாமத்தின் பேரில் அனுப்பிப் பணம் வாங்கிக்கொள்வார்கள். அப்படி நேரக்கூடிய உண்டியல் களை பின் கணக்காய்த் தாக்கல் செய்யவேண்டும். அதாவது முன் கணக்கில் பற்றெழுதி, பின்கணக்கில் வரவுவைத்துக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தாக்கல் செய்கின்ற கணக்கு ஒன்றினை, உதாரணத்திற்காகக் கீழே தரப்பட்டிருக்கிறது.

நம்முடைய சிரம்பான் கடையில் இருந்து 1910ம் வருடம் மார்ச் மாதம் 31ம் தேதிவரை கணக்கு முடித்து வந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். மேற்படி கணக்கில் இவடம் இருந்து எழுதிக்கொடுத்த உண்டியல்கள் 10க்கு ரூ. 2000/-க்கு உண்டியல் 9க்கு மாத்திரம் அசல் ரூ. 1800/-ம், வட்டி ரூ. 60/-ம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு உண்டியல் மட்டும் ரூ. 200/-க்கு கொடுக்கப் படவில்லை என்பதும் தெரிகிறது. அதேபோல, இங்கிருந்து வாங்கிய அனுப்பிய உண்டியல்கள் 8க்கு ரூ. 1400/-க்கு உண்டியல் 6க்கு மாத்திரம் அசல் ரூ. 1000 ம் வட்டி ரூ 50/-ம் வாங்கி இருக்கிறார்கள். பாக்கி உண்டியல் 2 க்கு ரூ. 400/-ம் வாங்க வில்லை என்று தெரிகிறது. அத்துடன் வட்டிச் சிட்டைப்படி வட்டியில் ரூ. 180/-ம் நம் பேரால் பற்று எழுதியிருக்கிறார்கள். எந்தப் பேரேட்டின் கணக்கை சரிபார்க்கிறோமோ அதுதான் முன் கணக்கு எனக் கொள்ளவேண்டும். கணக்கு முடித்து வந்த தேதிக்குப் பிறகு உள்ள கணக்குள் எந்தப்பேரேட்டில் பதிவு ஆகிறதோ, அதை பின் கணக்கு என்றும் கொள்ளவேண்டும். இந்த விபரங்களை அடியிற்கண்டவாறு தாக்கல் செய்யவேண்டும்.

1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 30 ம்தேதி சிரம்பான் கடை முன் கணக்குப் பற்று அவடமிருந்து நாளது வருடம் மார்ச் மாதம் 31ம் தேதி முடிய முடித்து அனுப்பிய கணக்குப்படி பணம் கொடுபடாமல், பின் கணக்காகத் தாக்கல் செய்து கொண்ட வகையில், 12ம் நம்பர் தெரிசனை உண்டியல் 1 க்கு பற்று ரூ.200/-.

கல்கத்தா கடை பின் கணக்கு வரவு மேற்படி வசம் 1910ம் வருடம் பிப்ரவரி மாதம் 10 ம் தேதியாக அ. அரு. பழ. பெயரால் 12 நிர் பேரர் தெரிசனை உண்டியல் 1க்கு வரவு ரூ. 20/-

1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி சிரம்பான் கடை முன் கணக்கு வரவு, அவடமிருந்து நாளது மார்ச் மாதம் 31ம் தேதியாக முடித்து அனுப்பிய கணக்குப்படி அவடத்தில் பணம் வாங்கப்படாமல், பின் கணக்காய்த் தாக்கல் செய்துகொண்ட வகையில் உண்டியல் 2க்கு வரவு ரூ. 400/-

கல்கத்தா கடை பின் கணக்குப்பற்று மேற்படி வசம் 1910 ம் வருடம் ஜனவரி மாதம் 3ம் தேதியாக சென்னை சு. நா. பெயரால் ஆர்டர் தெரிசனை 20 நிர் உண்டியல் 1க்கு ரூ 100/-ம்,காரைக்குடி ராம. மு. பெயரால் 1910ம் வருடம் ஜனவரி மாதம் 10ம் தேதியாக வட்டி உண்டியல் 1க்கு ரூ. 300/-ம், ஆக உண்டியல் 2க்கு முன் கணக்கு வசம் பற்று ரூ. 400/-.

அதாவது, இவ்விடமிருந்து நம்மால் சில உண்டியல்கள் வாங்கி அனுப்பியிருப்பதை அவ்விடத்தில் பணம் வாங்கி நம்முடைய பெயரால் வரவு வைக்க வேண்டும். அந்த உண்டியல்களை நாம் இவ்விடத்தில் வாங்கும்போதே அவைகள் கையிருப்புரொக்கத்தில் சேர்ந்தவைகளாகக் கருதப்படுவதால், அவைகளைக் கணக்கில் பற்று எழுதித்தான் அனுப்புவது வழக்கம். ஆனால், அவர்கள் இப்படி உண்டியல்களுக்குப் பணம் வாங்கித்தான் வரவு வைப்பார்கள். காரணம், தெரிசனை உண்டியல்களாய் இருந்து அவைகள் வந்தவுடன் வரவு வைத்துவிட்டால், நமக்கு அதன் பேரில் வட்டி ஏற்பட்டுவிடும். ஆனால், அவர்களுக்குப் பணம் வாங்கும் வரை வட்டி கிடையாது.

வட்டி உண்டியல்களாய் இருந்தால், அசலை முதலில் வரவு வைத்து பணம் வாங்கும்பொழுது வட்டியை வரவு வைக்க வேண்டும். ஒரு சமயம் உண்டியலுக்கே பணம் கிடைக்காமல் நமக்கே திரும்ப அனுப்ப வேண்டியதும் வரும். அப்பொழுது அவற்றைப் பற்று எழுதவேண்டும். இவைகளை உத்தேசித்து,

முன்பே வரவு வைக்காமல், பணம் வாங்கித்தான் வரவு வைப்பார்கள். இவ்விதமாக இவ்விடமிருந்து எழுதிக் கொடுக்கப் படும் உண்டியல்களுக்கும் பணம் கொடுத்துத்தான் பற்று எழுத வேண்டும்.

சிரம்பான் கடையிலிருந்து கணக்கு முடித்து வந்த கணக்கில் பணம் வாங்கப் படாமல் இருக்கிற ரூ. 400/-க்கு உள்ள 2 உண்டியல்களையும், முன்னர் குறிப்பிட்டிருப்பது போல முன் கணக்காய் வரவு வைத்து பின் கணக்கில் பற்று எழுத வேண்டும்.

இனி மேற்படியார்கள் கொடுத்த வட்டி ரூ. 60/-ஐக் கீழ்க் கண்டவாறு தாக்கல் செய்து கொள்ளவேண்டும்.

1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி, சிரம்பான் கடை முன் கணக்கு வரவு நாளது மார்ச் மாதம் 31ம் தேதியாக முடித்து அனுப்பிய கணக்குப்படி இவ்விடமிருந்து எழுதிக் கொடுத்த உண்டியல்கள் 10ல் உண்டியல்கள் 9க்கு அவ்விடத்தில் பணம் கொடுத்ததில், வட்டி கொடுத்த வகையில் வரவு ரூ. 60/- வட்டிக் கணக்குப் பற்று மேற்படி வகையில் ரூ. 60/-.

இவ்விடமிருந்து வாங்கியனுப்பிய உண்டியல்களுக்கு அங்கு வட்டி வாங்கியது ரூ. 50/-ஐ கீழ்க்கண்டவாறு தாக்கல் செய்து கொள்ளவேண்டும்.

1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி சிரம்பான் கடை பற்று நாளது மார்ச் மாதம் 31ம் தேதிக்காக அவ்விடமிருந்து முடித்து அனுப்பிய கணக்குப்படி, இவ்விடமிருந்து வாங்கியனுப்பிய உண்டியல்களில், உண்டியல் 6 க்கு அவ்விடம் பணம் வாங்கியது வட்டிக்காக வாங்கியிருக்கிறது பற்று ரூ. 50/- வட்டிக்கணக்கு வரவு மேற்படி வகையில் ரூ. 50/-.

வட்டிச் சிட்டைப்படி வட்டியில் பற்று ரூ. 180/-ஐ கீழ்க் கண்டவாறு தாக்கல் செய்து கொள்ளவேண்டும். 1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி சிரம்பான் கடை வரவு நாளது மார்ச் மாதம் 31ம் தேதிக்காக முடித்து அனுப்பிய கணக்குடன் வந்த வட்டிச் சிட்டைப்படி வட்டியில் அதிக வரவு ரூ. 180/-, வட்டிக் கணக்குப்பற்றுஷை வகையில் அதிகப் பற்று வட்டி ரூ 180/-.

மேலேகண்ட கணக்குகளை விபரங்களுடன் குறிப்பிட்டிருந் தாலும், அவைகள் எவ்வாறு ஒரு அசல் குறிப்பில் தாக்கல்செய்யப் பட்டுள்ளன என்ற விபரம் கீழே தரப்பட்டிருக்கிறது.

| | வரவு | பற்று |
|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1910 வருடம் ஏப்ரல் மாதம் 30உ சிரம்பான் கடை முன் கணக்குப் பற்று அவ்விடமிருந்து மார்ச் மாதம் 31 தேதிக்கு முடித்து வந்த கணக்குப்படி இவ்விடமிருந்து எழுதிக்கொடுத்த உண்டியல்களில் பணம் கொடுபடாமல் இருக்கிற 12ம் நம்பர் தரிசனை உண்டியல் 1க்கு பின் கணக்கு வசம் பற்று. ரூ | | 200. 0. 0 |
| சிரம்பான் கடை பின்கணக்கு வசம் வரவு மேற்படி விபரப்படி ரூ | 200. 0. 0 | |
| உடன் பற்று அவ்விடமிருந்து ஷெ தேதிக்காக முடித்து அனுப்பிய கணக்குப்படி முன் கணக்கு வசம் நாளது வருஷம் ஜனவரி மாதம் 3 தேதியாக சென்னை சு.நா பெயரால் ஆர்டர் தரிசனை 20 நம்பர் உண்டியல் 1க்கு ரூ.100ம், காரைக்குடி மு.ராம. பெயரால் பேரர் நாளது வருஷம் ஜனவரி மாதம் 10 தேதியாக வட்டி உண்டியல் 1க்கு ரூபா 300ம் ஆகப்பற்று முன்கணக்கு வசம் உண்டியல் 2க்கு ரூ | | 400. 0. 0 |
| சிரம்பான்கடை முன் கணக்கு வசம் வரவு ஷெ வகையில் ஷெ விபரப்படி வரவு ரூ | 400. 0. 0 | |
| இதுவும் வரவு ஷெ தேதியாக அவ்விடமிருந்து முடித்தனுப்பிய கணக்குப்படி இவ்விடமிருந்து எழுதிக் கொடுத்த உண்டியல்களில் உண்டியல் 9க்கு ரூ. 1800/- | | |

| | | |
|---|---|---|
| கொடுத்த வகையில் வட்டி கொடுத்தது ரூ. | 60. 0. 0 | |
| வட்டிப்பற்று ஷெ வகையில் வட்டி கொடுத்தது ரூ. | | 60. 0. 0 |
| சிரம்பான் கடை, முன்கணக்குப் பற்று இவ் விடமிருந்து வாங்கியனுப்பியஉண்டியல் களில் அவ்விடம்உண்டியல் 6க்குப் பணம் வாங்கியதில் வட்டி வாங்கிய வகையில் பற்று ரூ. | | 50. 0. 0 |
| வட்டி வரவு மேற்படி வகையில் ரூ. | 50. 0. 0 | |
| உடன் பற்று கல்கத்தா கடை யில் இருந்து நாளது மார்ச் மாதம் 31 தேதிக்காகமுடித்த கணக்குடன் வந்த வட்டிச் சிட்டைப்படி வட்டியில் அதிகப் பற்று ரூ. | | 180. 0. 0 |
| சிரம்பான் கடை முன் கணக்கு வரவு மேற்படிவிபரப்படி மேற்படி வகையில் ரூ. | 180. 0. 0 | |
| ஆக ரூ. | 890. 0. 0 | 890. 0. 0 |

அசல் குறிப்பு எழுதிய பிறகு, ஒவ்வொரு மாத முடிவிலும் குறிப்பில் இருந்து பேரேடு பதிவது, செலவு கணக்கு, வரவு கணக்கு முதலியவைகளை எப்படிப் பதிவது, குறிப்பில்லாமல் கணக்கை எப்படிப் பேரேட்டில் தாக்கல் செய்வது முதலியவை களை இங்கே விரிவாகக் காண்போம்.

பேரேடுகளில் தலைவரிசையில் இன்னார் அல்லது இன்னபற்று வரவுக் கணக்கு என்று எழுதவேண்டும். ஒரு கணக்குப் பதிய ஆரம்பித்தவுடன் அசல் குறிப்பில் கண்டபடி, இன்ன வருடம். இன்ன மாதம், இத்தனாம் தேதி பற்று என்று எழுதினால் போதுமானது. வகை விபரங்களை அசல் குறிப்பில் கண்டபடி எழுதவேண்டும். சில இடங்களில் மேற்படி விபரப்படி என்று எழுதியிருக்கும். அவைகளைப் பேரேட்டில் பதியும்பொழுது

அதேபோல் எழுதிவிடாமல் மேற்படி விபரம் என்பது என்ன என்று அசல் குறிப்பில் மேல் வரியில் பார்த்து, அதுபோல் விபரம் என்று எழுதவேண்டும்.

செலவு கணக்கைப் பதியும்பொழுது அது எந்தச் செலவு கணக்கு என்ன என்பதை நன்றாகக் கவனித்து அந்தச் செலவு ஏட்டில் பதியவேண்டும். உதாரணமாக சாப்பாட்டுச் செலவு, சில்லரைச் செலவு, வட்டிச் செலவு, வட்டக் கமிஷன் செலவு வாடகைச் செலவு என்று இப்படியெல்லாம் பலவிதங்களாக ஏற்படக்கூடிய அவைகளைக் கவனித்து அந்தந்தச் செலவு ஏட்டில் பதியவேண்டும். அதுபோலவே, அந்தந்த இனங்கள் பெயரால் வரவாகி இருக்கும் தொகைகளை, அந்தந்தப் பேரேட்டில் வரவு கலத்தில் பதிய வேண்டும். அதாவது, வட்டி வரவு, வாடகைவரவு வட்டக் கமிஷன் வரவு இவைகளை அந்தந்த ஏடுகளில் வரவு வைக்கவேண்டும். மாத முடிவில் அந்தந்தப் பேரேட்டில் கணக்குகள் பதிந்தவுடன் பற்று வரவு அயிட்டங்களை தனித்தனி யாகக் கூட்டித் தொகை கட்டவேண்டும். அப்படிக்கட்டின ஒவ்வொரு பேரேட்டிலும், வட்டி தாக்கலாகி விட்டதா என்று பார்க்கவேண்டும். வட்டி தாக்கல் ஆகாத கணக்குகளுக்கு வட்டி தாக்கல் செய்ய வேண்டும்.

சில பேரேடுகளை தொகை கட்டி ஒரு ஏட்டிலிருந்து மற்றொரு ஏட்டிற்குத் தொகை கொண்டு போக வேண்டியதாய் இருக்கும். அவைகளை குறிப்பு மூலம் எழுத வேண்டும் என்ப தில்லை. குறிப்பு இல்லாமலே திட்டக்கசகல் வராமல் நேராகவே பேரேட்டில் தாக்கல் செய்துவிடலாம். அப்படி தாக்கல் செய்யும் வழியை கீழ்கண்டவாறு விளக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக அரு. பழநியப்ப செட்டியார் என்பவருக்கு அவருடைய தகப்பனார் ரூ. 15,000/- மூலதனமாகக் கொடுத்து தொழில் நடத்தச் சொன்னதில் மேற்படி பழநியப்பச் செட்டியார் தொழில் செய்து வந்ததும் ரொக்க கொடுக்கல் வாங்கல் செய்ததும், நிலங்கள் வாங்கிச் சாகுபடி செய்ததும் ஆகிய தொழில்களைச் செய்துவந்தார். மேற்படி தொழில்களில் 1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் 1911ம் வருடம் மார்ச் மாதம் 31ம் தேதி வரை நடத்திக் கையிருப்புச் சரக்குகளை விற்றும் அடியிற்கண்ட பேரேடுகள் மிகுதியிருக்கின்றன.

1. சுவாமிகள் வரவு கணக்கு
2. நிலம் கொள்முதல் கணக்கு
3. நகை கொள்முதல் கணக்கு
4. வீடு கொள்முதல் கணக்கு
5. பங்கு முதல் கணக்கு
6. இனத்துப்பற்று கணக்கு
7. இனத்து வரவு கணக்கு
8. வட்டி பற்று வரவு கணக்கு
9. வட்டக்கமிஷன் பற்று வரவு க/கு
10. வாடகை பற்று வரவு க/கு
11. ஸ்டாம்புச் செலவு க/கு
12. சாப்பாட்டுச் செலவு க/கு
13. சில்லரை சிலவு கணக்கு
14. இலாப நட்ட கணக்கு
15. நிலவரும்படி கணக்கு
16. ஆதாய வரவு கணக்கு
17. இந்தோ-கமர்ஷியல் பாங்கு க/கு

மேற்படி பேரேடுகளை அடியில் விபரமாய்க் காட்டி குறிப்பு இல்லாமல் பதியும் விதத்தையும் விளக்கப்பட்டிருக்கிறது,

| எண் | பேரேடு பக்கம் | பேரேடு விபரம் | வரவு ரூ. அ. பை. | பற்று ரூ. அ. பை |
|---|---|---|---|---|
| 1. | 1 | சுவாமிகள் வரவு ரூ. | 75. 0. 0 | |
| 2. | 3 | நிலம்கொள்முதல் பற்று ரூ. | | 10,000. 0. 0 |
| 3. | 4 | நகை கொள்முதல் பற்று ரூ. | | 1,500. 0. 0 |
| 4. | 5 | வீடு கொள்முதல் பற்று ரூ. | | 89,000. 0. 0 |
| 5. | 8 | பங்குமுதல் கணக்கு வரவு | 1,15,000. 0. 0 | |
| 6. | 10-74 | இனவழி7க்கு பற்றுரூ | | 23,500. 0. 0 |
| 7. | 75-79 | இனவழி 5க்கு வரவு | 9,868. 0. 0 | |
| 8. | 80 | வட்டிக்கணக்கு ரூ. பற்று வரவு | 1,815. 6. 0 | 445. 8. 0 |
| 9. | 85 | வட்டக் கமிஷன் கணக்கு பற்று வரவு ரூ. | 480. 0. 0 | 130. 0. 0 |
| 10. | 90 | வாடகை பற்று வரவு கணக்கு ரூ. | 1,200. 8. 0 | 330. 0. 0 |
| 11. | 95 | ஸ்டாம்புச் செலவு ரூ | | 10. 8. 0 |
| 12. | 115 | சாப்பாட்டுச் செலவு ரூ. | | 360. 0. 0 |
| 13. | 120 | சில்லரைச் செலவு ரூ. | | 145. 0. 0 |
| 14. | 124 | இலாப நட்ட கணக்கு வரவு ரூ. | 145. 0. 0 | |

| | | | |
|---|---|---|---|
| 15. | 130 நில வரும்படி வரவு ரூ. | 840. 0. 0 | |
| 16. | 140 ஆதாய வரவு ரூ. | 7. 0. 0 | |
| 17. | 150 இந்தோ கமர்ஷியல் பாங்க் பற்று ரூ. | | 4000. 0. 0 |
| | ரூ. | 129430. 14. 0 | 129421. 0. 0 |
| | ஆக பற்று நீக்கி இருப்பு ரூ. | 9. 14. 0 | |

இனி இந்தக் கணக்குகளை எவ்விதம் என்ன செய்யவேண்டும் என்கிற விபரங்களை விபரமாகக் கீழே தரப்பட்டிருக்கிறது.

சுவாமிகள் வரவு, நிலம் கொள்முதல் பற்று, வீடு கொள்முதல் பற்று, பங்கு முதல் வரவு, இனவழி 7க்கு பற்று, இனவழி 5க்கு வரவு இவைகள் எல்லாம் அந்தந்த ஏட்டிலேயே இருக்கவேண்டியது தான். வட்டிப்பற்று வரவு ரூ. 445.8.0 ரூ. 1815.6.0 இந்த இரண்டு தொகைகளையும் குறிப்பு இல்லாமல் முறையே சில்லரைச் செலவு ஏட்டிற்கும், இலாபநட்ட ஏட்டிற்கும் கொண்டு போக வேண்டுமானால், கீழ்க்கண்டவாறு வட்டி வரவு பற்று ஏட்டில் தாக்கல் செய்யவேண்டும்.

| வட்டி பற்று வரவு ஏடு | வரவு ரூ.அ.பை. | பற்று ரூ.அ.பை. |
|---|---|---|
| 910ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் 1911ம் வருடம்மார்ச் மாதம் 31ம் தேதி வரை பற்று வரவு ரூ. | 1815. 6. 0 | 445. 8. 0 |
| வரவு குறிப்பு இல்லாமல் வட்டிச் செலவை 120ம் பக்கம் சில்லரைச் செலவு ஏட்டில் தாக்கல் செய்த வகையில் பற்று | 445. 0. 0 | |
| பற்று குறிப்பு இல்லாமல் வட்டி வரவை 124ம் பக்கம் இலாப நட்டக்கணக்கு ஏட்டில் தாக்கல் செய்த வகையில் பற்று ரூ. | | 1815. 6. 0 |
| ஆக பற்று வரவு நேர் ரூ. | 2260. 14. 0 | 2260. 14 0 |

இது போல, வட்டக்கமிஷன் பற்று வரவையும், வாடகைப் பற்று வரவுக் கணக்கையும் சில்லரைச்செலவு ஏட்டிலும், இலாப நட்டக்கணக்கு ஏட்டிலும் தாக்கல் செய்துகொண்டு, அந்த ஏடு களை நேர்செய்து விடலாம். ஸ்டாம்புச் செலவு சாப்பாட்டுச் செலவு முதலியவைகளை சில்லரைச் செலவு ஏட்டில் தாக்கல் செய்து அந்த ஏடுகளையும் நேர்செய்துவிடலாம். வட்டிக்கணக்கு வரவு, வட்டக்கமிஷன் வரவு, வாடகை ஏட்டுக்கணக்கு வரவு முதலியவைகளை இலாப நட்டக்கணக்கு வரவில் தாக்கல் செய்து, அந்தந்த ஏடுகளையும் நேர்செய்துவிடலாம். நிலவரும்படிக் கணக்கையும், ஆதாய வரவு ஏட்டில் தாக்கல் செய்து நில வரும் படிக்கணக்கை நேர்செய்து விடலாம். இந்தோ கமர்ஷியல் பாங்க் கணக்கு பற்று வரவில் உள்ள தொகை அந்த ஏட்டிலேயே இருக்க வேண்டியதுதான். இப்படி பேரேட்டில், அசல் குறிப்பிலிருந்து பேரேடு பதிந்தது நீங்கலாக அசல் குறிப்பில் இல்லாதவைகளை பதிந்தது நீங்கலாக நேரடியாகப்பேரேட்டில் பதிந்துகொள்ளலாம்.

அசல் குறிப்பு எழுதுகின்ற விதமும், பேரோடு பதிகின்ற விதமும் இது வரை விளக்கப்பட்டிருக்கிறது. இனிவரும் பகுதியில் ஐந்தொகை விபரமும், இலாப நட்டக்கணக்கு விபரமும் விபரமாக விளக்கமாகக் காண்போம்.

# ஆறு

ஒவ்வொரு பேரேட்டிலும் உள்ள பற்று வரவுத் தொகைகளைக் கூட்டி அதில் அயனாக என்ன பற்று அயனாக என்ன வரவு என்பதைக் கண்டுபிடிப்பதுதான் அயன்தொகை என்பது. நகரத்தார்களின் பேச்சு வழக்கில் ஐந்துகை என்று மருவி வந்திருக்கிறது.

ஒருவரால் எழுதி வரப்படும் கணக்கு சரிதான் என்று ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமானால் இந்த ஐந்துகை மூலமாகத்தான் கண்டுபிடிக்க முடியும். எல்லாப் பேரேடுகளையும் தொகை கூட்டிக் கட்டி, வரவுத் தொகைகளை எல்லாம் ஒரு பக்கத்திலும் பற்றுத் தொகைகளை எல்லாம் ஒரு பக்கத்திலும் எழுதி—அவைகளைக் கூட்டிக் குறிப்பு இருப்பை பற்றுக் கலத்தில் போட்டு அதையும் சேர்த்துக் கூட்டிக் கட்டினால் பற்று வரவுக் கலங்களின் கூட்டுத் தொகை இரண்டும் ஒரே தொகையாய் வரவேண்டும். அப்படி வந்தால்தான் அந்தக் கணக்குச்சரி என்று ஏற்றுக்கொள்ள முடியும்.

முன் பகுதியில் சிட்டைக்குறிப்புக் கணக்குகளை அசல் குறிப்பிலும், பின் சிட்டைக் குறிப்பிலும் எழுதி அசல் குறிப்பில் இருப்புக் கட்டி மேற்படி குறிப்பு இருப்பை புதுச் சிட்டைக் குறிப்பின் தலைப்பில் போட்டு, பின் சிட்டைக்குறிப்பு முன் மாதச் சிட்டைக் குறிப்பின் கணக்குப் பாக்கிகளை எழுதித் தொகை கூட்டினால், அந்த இருப்புத் தொகையும், முன் மாதக் குறிப்புச் சிட்டை இருப்புத்தொகையும் ஒன்றாய் வந்ததுபோல, அசல் குறிப்புக் கணக்குகளை பேரேட்டில் பதிந்தது சரிதானா என்று தெரிந்துகொள்ள ஐந்துகையே முக்கிய ஆதாரமாய் இருக்கிறது.

இத்த ஐந்துகையினால் ஏற்படக்கூடிய பலன்கள்

1. ஒவ்வொரு மாதமும் 30ம்தேதி ஐந்துகையை எடுத்து எழுதிவந்தால், மேற்படி ஐந்துகையைப் பார்த்தவுடன் இன்னார் பெயரால் இவ்வளவு பாக்கி என்பது உடனே விளங்கும்.

2. முதலாளிகள் வெளியூர்களில் இருந்தால், மாதாமாதம் அனுப்பப்படும் குறிப்பு நகலுடன், ஐந்துகையும் அனுப்பப்பட்டால் அந்தந்த மாதங்களில் நடந்த நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள அவர்களுக்கு எளிதாக இருக்கும்.

3. மாதா மாதம் ஐந்துகை எடுக்கப்பட்டிருந்தால், கணக்கு களில் ஏதாவது பிசகுகள் நேரிடும் காலத்தில் அந்தப் புத்தகங் களிலிருந்து கண்டுபிடிப்பது சுலபமாக இருக்கும்.

4. ஒவ்வொரு மாதமும் ஐந்துகை எடுக்கவேண்டுமானால் அந்தந்த மாதங்களில் குறிப்பும், பேரேடும் துப்புறவாகப் பதிந்திருக்க வேண்டும்.

5. குறிப்புச் சிட்டையில் இல்லாமல், அசல் குறிப்பில் பதிந்து கொள்வது போலவும், அசல் குறிப்பில் இல்லாமல் நேரடி யாக பேரேட்டில் பதிந்துகொள்வது போலவும், பேரேடு பதியாமல், ஐந்துகை எடுப்பது என்பது முடியாத காரியம்.

முன்பகுதியில் பாக்கி இருக்கும் அரு. பழநியப்ப செட்டி யாருடைய பேரேட்டில் 1911ம் வருடம் மார்ச் மாதம் 31ம் தேதிக் காக எடுக்கப்பட்ட ஐந்துகையை கீழே காட்டப்பட்டிருக்கிறது.

**1911ம் வருடம் மார்ச் மாதம் 31ம் தேதி வரை அரு. பழ. கடை ஐந்துகை**

| பேரேடுப் பக்கம் | விவரம் | வரவு ரூ. அ. பை. | பற்று ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1 | சுவாமிகள் வரவு ரூ | 75. 0. 0 | |
| 3 | நிலம் கொள்முதல் பற்று ரூ | | 10,000. 0. 0 |
| 4 | நகை கொள்முதல் பற்று ரூ | | 1,500. 0. 0 |
| 5 | வீடு கொள்முதல் பற்று ரூ | | 69,000. 0. 0 |
| 9 | பங்கு முதல் அரு. வரவு ரூ | 115,000. 0. 0 | |
| 10 | இனவழி 7க்கு பற்று ரூ | | 23,500. 0. 0 |
| - | இனவழி 5க்கு வரவு ரூ | 8,925. 0. 0 | |
| 105 | சாப்பாட்டுச் செலவு ரூ | | 1,111. 0. 0 |
| 120 | சில்லரைச் செலவு ரூ | | 310. 0. 0 |
| 124 | இலாப நட்டக்கணக்கு வரவு | 4,583. 14. 0 | |
| 140 | ஆதாய வரவு ரூ | 847. 0. 0 | |
| 150 | இந்தோ கமர்ஷியல் பாங்க் பற்று ரூ | | 4,000. 0. 0 |
| | குறிப்பு இருப்பு ரூ | | 9.1 4. 0 |
| | ஆகப் பற்று வரவு ரூ | 129, 430. 14, 0 | 129.430. 14. 0 |

இனி இந்த ஐந்துகையை வைத்துக் கொண்டு இலாப நட்டக் கணக்குப் பார்ப்பதற்கு முன்னர். இலாபம் என்பது என்ன, நட்டம் என்பது என்ன என்பதை விளக்கமாகக் காண்போம். இலாபம் என்பது, வியாபார இலாபம், வட்டி இலாபம், வட்டக்கமிஷன் இலாபம், வாடகை இலாபம் என்று பலவிதங்களாக இருக்கின்றன. உதாரணமாக ஒருவரிடம் குறைந்த வட்டிக்கு ஒரு தொகையைக் கடன் வாங்கி அந்தத் தொகையை அதிக வட்டிக்கு மற்றொரு வரிடம் கொடுத்தால், அப்படி அதிகம் வரும் வட்டித்தொகைக்கு வட்டி இலாபம் என்று பெயர். இதேபோல, வியாபார நட்டம் வாடகை நட்டம், வட்டி நட்டம், வட்டக்கமிஷன் நட்டம், நில வரும்படி நட்டம் என்று பலவிதங்களாக இருக்கின்றன. ஒரு க்கடையின் இலாப நட்டங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், சுருக்கமாகச் சொல்லுமிடத்து ஐந்துகையை வைத்துக் கொண்டே கண்டுபிடிக்க வேண்டும். அப்படிக் கண்டுபிடிக்கப்படும் இலாபங்கள் இரண்டு விதங்களாக இருக்கின்றன.

1. எல்லாவிதமான வரவிலிருந்தும், எல்லாவிதமான செலவு களையும் கண்டுபிடித்து அவைகளைக் கழித்து மிச்சப்படும் தொகை ஒருவிதமான இலாபம்.

2. நில வரும்படியை வரவிலும், கடை சம்பந்தமாக செலவுகளை செலவிலும் சேர்க்காமல், முடிக்கப்படுவது மற்றொரு விதமான இலாபம்.

அரு.பழ கடையில் 1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் 1911ம் வருடம் மார்ச் மாதம் 31ம் தேதி வரை சகல செலவு களும் நீக்கி கிடைத்திருக்கும் இலாபக் கணக்கு

| பேரேடு பக்கம் | விபரம் | வரவு ரூ. | அ. | பை. | பற்று ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 105 | சாப்பாட்டுச் செலவு | | | | 1,111, | 0. | 0 |
| 120 | சில்லறைச் செலவு | | | | 310. | 0. | 0 |
| 124 | இலாபக் கணக்கு வரவு | 4,583. | 14. | 0 | | | |
| 140 | ஆதாய வரவு | 847. | 0. | 0 | | | |
| | ஆக வரவு பற்று | 5,430. | 14. | 0 | 1,421. | 0. | 0 |

ஆக மொத்த வரவு தொகை ரூ.5.430.14.0ல் செலவு தொகை ரூ 1,421/ஐக் கழித்தால் மீதம் வருகின்ற ரூ. 4.009.14.0ம் அரு.பழ. கடைக்கு அந்த ஒரு வருடத்திற்குக் கிடைத்துள்ள இலாபம் ஆகும்.

பெரும்பாலும் எல்லா நகரத்தார் கடைகளிலும், தபால் அனுப்பு வரவு புத்தகம் என்ற ஒன்று வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கடையிலிருந்து எழுதியனுப்பப்படுகின்ற எல்லாத் தபால்களுக்கும், கூடுமானவரை நகல் எடுத்தோ அல்லது சுருக்கமாக எழுதி தேதிவாரியாக வைத்திருப்பார்கள். அதேபோல, இவர்களுக்கு வருகின்ற தபால் களையும், அந்த புத்தகத்தில் பதிவு செய்து விட்டு தேதி வாரியாக ஒட்டி வைத்திருப்பார்கள். எந்தக்காலத்திலும் எந்தத் தகராறு ஏற்பட்டாலும், இந்தப் புத்தகம் மிக உபயோகமாக இருக்கும். அதிகப்படியான கடைகளையும், தொழில்களையும் உடையவர்கள் இந்த மாதிரியான புத்தகங்கள் வைத்துக்கொள்வது மிகவும் நன்மை பயக்கும். தபால் புத்தகத்தில் 6 கலங்கள் இருக்கும். முதல் கலத்தில் தபால் நம்பரும், இரண்டாவது கலத்தில் எழுதிய தேதியும் மூன்றாவது கலத்தில் தபால் அனுப்பிய தேதியும், நாலாவது கலத்தில் இன்ன ஊருக்கு என்ற விபரமும், 5வது கலத்தில் யாரிக்கு எழுதியது என்ற விபரமும், ஆறாவது கலத்தில் மேற்படி கடிதத்தை காப்பிப் புத்தகத்தில் நகல் எடுத்த பக்கத்தின் நம்பரையும், விபரமாக எழுதவேண்டும். மேற்படி தபால் அனுப்பு புத்தகத்தின் மாதிரி ஒன்றும் கீழே தரப்பட்டிருக்கிறது.

1910ம் வருடம் ஏப்ரல் மாதம் 12 முதல் தபால் அனுப்பு விபரம்

| தபால் நெம்பர் | எழுதிய தேதி | போஸ்ட் செய்த தேதி | ஊர் | பெயர் | காப்பி எடுத்த பக்க நம்பர். |
|---|---|---|---|---|---|
| 1 | 3-4-1910 | 3-4-1910 | மோல்மேன் | அ.க.ராம | 32 |
| 2 | 8-4-1910 | 8-4-1910 | சென்னை | முரு.பழ | 33 |
| 3 | 11-4-1910 | 12-4-1910 | ரெங்கூன் | ராம.சித | 34 |
| 4 | 12-4-1910 | 12-4-1910 | ரெங்கூன் | ராம.சித | 35 |

இதில் 1ம் நம்பர் லெட்டர் 1-4-1910ல் மோல்மேன் அ.கா. ராமவுக்கு எழுதி 32வது பக்கத்தில் காப்பி எடுக்கப்பட்டு, 3-4-1910ல் போஸ்ட் செய்யப் பட்டிருக்கிறது என்ற விபரம் எப்பொழுது பார்த்தாலும் தெரியக்கூடியதாக இருக்கும். இது போல அந்தக் கடையிலிருந்து எழுதுகின்ற எல்லாத் தபால் களுக்கும், மேற்கண்ட விபரப்படி எழுதிவைத்துக்கொள்ள வேண்டும். இதுபோல அந்தக் கடைக்கு வருகின்ற எல்லாத்

தபால்களையும், தபால் வரவுப் புத்தகத்தில் பதிந்துகொள்ள வேண்டும். தபால் வரவுப் புத்தகமும், ஆறு கலங்கள் கொண்டதாக இருக்கும். முதல் கலம் கடிதத்தின் நம்பரும், இரண்டாவது கலத்தில் கடிதத்தின் தேதியும், மூன்றாவது கலம் கடிதம் கிடைத்த தேதியும், நான்காவது கலம் இன்ன ஊரிலிருந்து வந்தது என்ற விபரமும், ஐந்தாவது கலம் இன்னாரிடமிருந்து வந்த கடிதம் என்ற விபரமும் ஆறாவது கலத்தில் பதில் எழுதிய லெட்டர் காப்பி எடுத்த பக்கத்தின் நம்பரும், விபரமாகக் குறிப்பிட வேண்டும். இந்த தபால் வரவுப் புத்தகத்தின் மாதிரி ஒன்றும் கீழே தரப்பட்டிருக்கிறது.

| தபால் நம்பர் | தபால் தேதி | கிடைத்த தேதி | ஊர் | பெயர் | பதில்எழுதிய காப்பி புத்தக பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 67 | 31-3-1910 | 1-4-1910 | சென்னை | முரு.பழ | 33 |
| 68 | 30-3-1910 | 5-4-1910 | ரெங்கூன் | ராம.சித | 34 |
| 69 | 2-4-1910 | 8-4-1910 | ரெங்கூன் | ராம.சித | 35 |

இதில் 67ம் நம்பர் கடிதம் 31-3-1910ல் சென்னை முரு. பழ.வால் எழுதப்பட்டு 1-4-1910ல் இவ்விடம் கிடைத்து, அதற்குப் பதில் எழுதி, மேற்படி பதில் லெட்டர் காப்பிப் புத்தகம் 33ம் பக்கத்தில் காப்பி எடுக்கப்பட்டிருக்கிறது என்ற விபரம் எந்த சந்தர்ப்பத்தில் வேண்டுமானாலும் தெரிந்து கொள்ள முடியும். வரவுக் கடிதங்களின் விபரமோ அல்லது நாம் பதில் எழுதிய விபரங் களையோ பிறிதொரு சந்தர்ப்பத்தில் தெரிந்துகொள்ள வேண்டு மானால், மேற்படி வரவு அல்லது அனுப்புத் தபால் புத்தகங்களை எடுத்துப் பார்த்தால், எல்லா விபரங்களும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

# ஏழு

நகரத்தார்கள் வட்டிக்குக் கடன் கொடுத்தல், நிலத்தின் மீது ஈட்டிற்குப் பணம் கொடுத்தல், நகை ஈடுபிடித்தல் முதலிய தொழில்களை மட்டும் செய்யாமல், இன்று வங்கிகள் செய்துவரும் நடப்பு வைப்பு (Current Deposit), அழைப்பு வைப்பு (Deposit at call) குறுகிய வைப்பு (Short Term Deposit), கடன் வசதி (Credit Facility) அதிகப் பற்று (Overdraft), சாதாரணக் கடன் (Demand Loan), மறு கடன் (Re-Finance), உண்டியல்களைக் கழிவு செய்தல் (Discounting Hundi) முதலிய பலதரப்பட்ட வங்கிகள் நடத்துகின்ற தொழில்களைக்கூட நகரத்தார்கள் அந்த நாட்களிலேயே செய்து வந்திருக்கின்றனர் என்றால், அவர்களை இன்றைய வங்கிகளின் முன்னோடிகள் என்றோ அல்லது இன்றைய வங்கி நடைமுறைகள் இவர்களிடமிருந்துதான் கற்றுக் கொள்ளப் பட்டு நடைமுறைக்கு வந்ததோ என்று சொல்வது கொஞ்சங்கூட மிகையாக இருக்காது

இந்த நவீன வங்கிமுறை சமீபத்தில் கொண்டுவரப்பட்டதே எனினும், 12ம் நூற்றாண்டிலேயே இந்த நடைமுறைகள் காணப்பட்டதாக சரித்திரச் சான்றுகளிலிருந்து புலனாகிறது. 'பாங்க்'' (Bank) என்ற சொல், பாக் என்ற ஜெர்மானியச் சொல்லிலிருந்து திரிந்தது என்று சிலர் கூறுவர். 'பாக்' என்ற ஜெர்மானியச் சொல்லுக்கு நிதி இருப்பு என்று பொருள். ஆனால், இத்தாலிய மொழியில் வங்கிகளை பாங்கோ (Bango) என்றே அழைத்து வருகின்றனர். பாங்க்ஸ் (Banks) என்ற இத்தாலியச் சொல்லுக்கு பெஞ்சுகள் என்று பொருள். இத்தாலியர்கள் ஒரு

பெஞ்சின் இருமருங்கிலும் உட்கார்ந்து கொண்டு தொழிலை நடத்தியதாலேயே வங்கிகளுக்கு இந்தப்பெயர் வந்தது என்றும் தெரிகிறது.

சரித்திரங்களை ஊன்றிப்பார்க்கும் போது, பாங்க் ஆப் வெனிஸ் (Bank of Venis) தான் கி.பி. 1157ல் முதன் முதலாக நிறுவப்பட்ட வங்கி என்று தெரிகிறது. அதன் பின்னர் 770ல் இந்துஸ்தான் வங்கியும் (Hindusthan Bank) 1808ல் பாங்க் ஆப் பெங்கால் (Bank of Bengal) 1840ல் பாங்க் ஆப் பாம்பேயும் (Bank of Bombay) 1843ல் பாங்க் ஆப் மெட்ராஸ் (Bank of Madras) தோன்றின. அதன் பிறகு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், 1906ல் இந்தியன் வங்கியும் (Indian Bank) 1937ல் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியும் உருவாகின. பாங்க் ஆப் பெங்கால், பேங்க் ஆப் பாம்பே, பாங்க் ஆப் மெட்ராஸ் இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து கி.பி, 1921ல் இம்பீரியல் வங்கியென மாற்றப் பட்டது. இந்த இம்பீரியல் வங்கியே 1955ல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்தக் காலக் கட்டத்திற்கு முன்னரே பாங்க் ஆப் காரைக்குடி (Bank of Karaikudi) செட்டிநாடு கமர்ஷியல் பாங்க் (Chettinad Commercial Bank) நாட்டுக் கோட்டை பாங்க் (Nattukottai Bank) செட்டிநாடு பயோனியர் பாங்க் (Chettinad Pioneer Bank) நகரத்தார் பாங்க் (Nagarathar Bank) பாங்க் ஆப் மதுரை (Bank of Madurai) முதலிய பல வங்கிகள் தென்னாட்டின் வணிக முன்னோடிகளாகத் திகழ்ந்த நகரத்தார்களின் எண்ணத்தில் உருவான வங்கிகளாகும்.

தமிழறிஞர் 'சோமலெ' அவர்கள் ''தென்கிழக்கு ஆசியாவில் வளம் கொழிக்கும் பெரும் நகரமாகவும், கடற்படைத்தளமாகவும் விளங்குவது சிங்கப்பூர். இங்கும் இதை அடுத்துள்ள மலேசிய நாட்டுக்கும் நகரத்தார்கள் 1800ம் ஆண்டிற்கு பின்னரே வந்த தாகப் பலரும் எழுதியிருக்கின்றனர். இது தவறான கருத்து. டச்சு மொழியில் எழுதப்பட்டுள்ள சில ஆதாரங்கள் அண்மையில் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து 10ம், 11ம் நூற்றாண்டிலேயே இவர்கள் மலேசியாவிற்கு வந்தனர் என்பது உறுதிப்படுகிறது. ராஜராஜ சோழன் ஆட்சியில் நகரத்தார்கள் கடல்கடந்தது என்று இதிலிருந்து ஊகிக்கலாம்'' என்று எழுதுவதிலிருந்து 11ம் நூற்றாண்டிலேயே நகரத்தார்கள் மலேசியாவில் குடியேறினார்கள்

என்பது புலனாகிறது. இந்த நகரத்தார்களின் முக்கியமான தொழில் பணம் கொடுக்கல் வாங்கல்தான். இவர்கள் இன்று நடைபெறுகின்ற வங்கி முறைப்படியே, வங்கிகள் எல்லாம் உருவாவதற்கு முன்பே இவர்களது கடையில் நடத்தி வந்திருக்கிறார்கள்.

இன்று வங்கிகளில் நடைபெறுகின்ற உண்டியல் பரிமாற்றங்கள் (Hundi Business) நகரத்தார்கள், எங்ஙனம் நடத்தி வந்தனர் என்ற விபரங்களை விரிவாகக் காண்போம்.

உண்டியல் என்பது ஒருவர் மற்றொருவரை பணம்கொடுக்கும் படி எழுதிக் கொடுக்கும் ஆர்டர் அல்லது கட்டளை. இது வட்டி உண்டியல், தவணை உண்டியல், தரிசனை உண்டியல் என்று மூன்று வகைப்படும்.

வட்டி உண்டியல் என்பது ஒரு தொகையை மற்றொருவருக்காவது அல்லது அவர்கள் உத்தரவு பெற்றவர்களுக்காவது அல்லது கொண்டுவந்தவர்வசமாவது இன்ன வட்டி வீதம் கொடுக்கிறது என்று எழுதிக்கொடுக்கும் ஆர்டர். (பின்னிணைப்பு நான்கில் காண்க)

தவணை உண்டியல் என்பது ஒரு குறிப்பிட்ட தொகையை மற்றொருவருக்காவது அல்லது அவர்கள் உத்தரவு பெற்றவர்களுக்காவது இத்தனை நாள் அல்லது இத்தனை மாத தவணையிலாவது கொடுக்கிறது என்று எழுதிக்கொடுக்கும் ஆர்டர். (பின்னிணைப்பு ஐந்தில் காணவும்)

சிதம்பரம் செட்டியார் சுப்பிரமணியம் செட்டியாரிடம் ரூ. 1000/- பெறுமான சரக்கை கொள்முதல் செய்கிறார். அப்பொழுது சிதம்பரம் செட்டியாரிடத்தில் பணம் இல்லை. அதற்காக ரூ. 1000/-க்கு சுப்பிரமணியம் செட்டியாருக்கு அறுபது நாள் தவணையில் கொடுப்பதாக ஒரு உண்டியல் எழுதிக்கொடுக்கிறார். மேற்படி தொகை ரூ. 1000/-ஐயும் சுப்பிரமணியம் செட்டியாரே கொடுப்பதாய் எழுதினாலும் எழுதலாம் அல்லது சுப்பிரமணியம் செட்டியாருக்கு பற்று வரவுக்காரராகிய ராமசாமிச் செட்டியாரை பணம் கொடுக்கும்படி எழுதிக்கொடுத்தாலும் கொடுக்கலாம். ஆனால் சிதம்பரம் செட்டியாருடைய உண்டியலை ராமசாமி செட்டியார் கண்டவுடன் தவணைப்படி பணம் கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவேண்டும்,

சரக்கு இல்லாமல் ரொக்கமாகக் கடன் வாங்குகிறவர்களும், தவணைப்படி உள்ள மாதங்களுக்கு வட்டியைச் சேர்த்து அல்லது வட்டியைச் செலுத்தி அசல் தொகைக்கு தவணை உண்டிலாகவும் எழுதிக்கொடுப்பதுண்டு.

இப்படிப்பட்ட உண்டியல்களில் பெற்றுக்கொள்கிறவர்களுக்கு ஒரு பலன் உண்டு. உண்டியல் பெற்றுக்கொண்டவர்களுக்கு பணம் தவணைக்கு முன்பே தேவையானால், பாங்கர்களிடத்தில் கொடுத்து மேற்படி உண்டியலை டிஸ்கவுண்ட் (Discount) செய்து பணம் பெற்றுக்கொள்ளலாம். டிஸ்கவுண்ட் செய்வது என்பது மேற்படி உண்டியலை ஒரு பாங்கரிடத்தில் கொடுத்தால் தவணை பாக்கி உள்ள மாதங்களுக்கு வட்டியைப் பிடித்துக்கொண்டு மீதித் தொகையைக் கொடுத்துவிடுவார்கள். இதைத்தான் உண்டியல் கழிவு செய்தல் (Discounting of Hundi) என்று சொல்லப் படுகிறது.

தரிசனை உண்டியல் என்பது ஒருவர் மற்றொருவருக் காவது அல்லது அவர்கள் ஆர்டர் பெற்றவர்களுக்காவது அல்லது கொண்டுவந்தவர் வசமாவது ஒரு தொகையை அந்த உண்டி யலைக் கண்ட மாத்திரத்திலேயே கொடுக்கும்படி எழுதிக் கொடுக் கின்ற ஆர்டர், இதனுடைய மாதிரி உண்டியல் பின்னிப்பு நான்கில் கொடுக்கப் பெற்றுள்ளது.

பின்னிணைப்பு நான்கில் காட்டியுள்ள உண்டியல் மாந்தளை சா. அ. பழநியப்ப செட்டியாரால் எழுதிக் கொடுக்கப்பட்டது, எழுதிய தேதி 1890ம் வருடம் ஜூன் மாதம் 21ம் தேதி எழுதிக் கொடுத்தது. இரங்கூன் யூசுப் அகமது மதாரிக்காவது அல்லது கொண்டுவந்தவர் வசமானது பணம் கொடுக்கும்படி எழுதிக் கொடுக்கப்பட்டது. தொகை ரூ. 2000/-. பணம் கொடுக்க வேண்டியவர் இரங்கூன் சா. அ. முத்தையா செட்டியார் அவர்கள். ஆக ஒவ்வொரு உண்டியலிலும், உண்டியல் தேதி உண்டியலை எழுதியவர், இன்னார் பெயருக்கு தரிசனையா அல்லது தவணையா, பணம் கொடுக்க வேண்டியவர் முதலிய விபரங்கள் இருக்கவேண்டும். இந்த உண்டியலை எப்பொழுது கொண்டு போனாலும் இரங்கூன் சா. அ. முத்தையா செட்டியார் அவர்கள் வட்டியுடன் பணம் கொடுப்பார்.

பின்னிணைப்பு ஐந்தில் காட்டப்பட்டிருப்பது தவணை உண்டியல். மேற்படி உண்டியல் ஏற்பட்டது. விகாரி வருடம் தை

மாதம் 2ம் தேதி எழுதியவர் கம்போசா சு. லெ. அ. நாராயணன் செட்டியார்: பணம் கொடுக்க வேண்டியது படேல் அப்துல்லா மாற்றிவில்லா, பம்பாய். பணம் கொடுப்பவர் கம்போசா மு தெ. அ. தேனப்ப செட்டியார். தொகை ரூ. 200/- உண்டியல் 5 நாள் தவணை. மேற்படி தவணை உண்டியல் குறிப்பிட்ட தவணையில் குறிப்பிட்ட மாற்றிவில்லாவோ அல்லது அவர் ஆர்டர் பெற்றவரோ, கம்போசா மு. தெ. அ. தேனப்ப செட்டியாரிடம் கொண்டுபோய்க்கொடுத்தால் அவர்கள் பணம் கொடுத்து விடுவார்கள்.

ஒரு கடையிலிருந்து மற்றொரு கடைக்கு பணம் கொடுக்கும் படி உண்டியல் எழுதி அதை உரியவரிடம் கொடுத்து அனுப்பிய பிறகு அதே மாதிரி உண்டியல் ஒன்றை தபால் மூலமாகவும் அனுப்பிவைப்பார்கள். இதில் எந்த உண்டியல் முதலில் வந்தாலும் அந்த உண்டியலுக்குப் பணம் கொடுத்த பிறகு, மற்றொரு உண்டியலை தள்ளுபடி செய்து விடுவார்கள். இப்படிப்பட்ட ஒரு உண்டியலான பினாங்கு, லெ. அரு. ராம. சுப்பிரமணியஞ் செட்டியார் மேற்படியூர் சா. நா. அ. கடைக்கு மெ. ச. வேலாயுதம் செட்டியார் வசமாவது அல்லது கொண்டுவந்தார் வசமாவது வங்காளத்தில் அவர்கள் கடையில் நாராயணன் செட்டியாரைப் பணம் கொடுக்கும்படி 1892ம் வருடம் அக்டோபர் மாதம் 11ம் தேதி எழுதிக்கொடுத்த 84 நம்பர் உள்ள ரூ. 2600/- உண்டியலின் மாதிரி பின்னிணைப்பு ஆறில் தரப்பட்டிருக்கிறது. 1862ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் தேதி மெ. பெரி. வள்ளியப்ப செட்டியார் எழுதிக் கொடுத்த உண்டியலின் மற்றொரு மாதிரியும் பின்னிணைப்பு ஆறில் தரப்பெற்றிருக்கிறது.

பின்னிணைப்பு நாலில் காட்டப்பட்டிருப்பது தரிசனை உண்டியலின் மாதிரி—தரிசனை உண்டியலாவது, பணம் கொடுக்க வேண்டியவரிடம் காட்டியவுடனேயே பணம் கொடுக்கக்கூடியது என்று அர்த்தங்கொள்ளும்.

1. உண்டியல் தேதி விளம்பி ஸ்ரீ தை மீ 5உ
2. உண்டியல் எழுதியவர் செய்கோன் மு. மு. நா.
3. வரவு செய்கோன் சீன அந்தாயி
4. தரிசனையில் பணம் கொடுக்க வேண்டியது.

5. பணம் கொடுக்க வேண்டியவர் செய்கோன் மு. தெ. அ. தேனப்ப செட்டியார்

6. தொகை—ரிங்கி 1000/-

இவ்வளவு விபரங்களையும் கண்டு உண்டியல் எழுதவேண்டும். இப்படிப்பட்ட தரிசனை உண்டியல்களுக்கு சிலசமயம் பணம் கொடுப்பவரிடத்தில் பணம் இல்லாவிட்டாலும் அல்லது பணம் வாங்க வேண்டியவருக்குத் தேவை இல்லாவிட்டாலும் இந்தத் தேதியைப் போட்டு வாங்கிவிட்டால் அல்லது கணக்கில் வரவு செலவு செய்துவிட்டால் அந்தத் தேதி முதல் பணம் கொடு படுகின்ற தேதி வரை வட்டி உண்டு.

இப்பொழுது வங்கிகளில் நாம் பணத்தைப் போட்டு வைத்து நமக்குத் தேவையான பொழுது செக்குகள் கொடுத்து பணம் பெற்றுக்கொள்வதுபோல அல்லது மற்றவர்களுக்கு செக் கொடுத்து, அந்த வங்கியில் போய் பணம் பெற்றுக்கொள்ளும்படி செய்து வருகின்ற நடப்புக் கணக்கு (Current Account) போல அந்த நாட்களில் நகரத்தார் கடைகளில் பல ஆசாமிகாரர்களும் நடப்புக் கணக்கு வைத்துக்கொண்டு செக் மூலமாக வரவு செலவு செய்து வந்திருக்கிறார்கள். மார்கதாஸ் என்ற ஆசாமிக்காரர் 20-12-1910ம் நாள் தன்னுடைய 11ம் நம்பர் செக் மூலம் அலி என்பவருக்கு மோல்மேன் A.R.M.A.L செட்டியார் கடையிலிருந்து ரூபாய் பெற்றுக்கொள்ளும்படி கொடுத்த ரூ 282-90 உள்ள செக்கின் மாதிரி ஒன்று பின்னிணைப்பு ஏழில் தரப்பட்டிருக்கிறது.

ஒருவர் ஒரு சாமானையோ பொருளையோ பெற்றுக்கொண்டு அதற்குரிய தொகையை அவருடைய டேரியா கடை ஏஜண்டை, கொண்டு வந்தவர் வசமாவது அல்லது அவருடைய ஆர்டர் பெற்றவருக்காவது கொடுத்து மேற்படி தொகையை அவருடைய உடுமலைப்பேட்டை கடைக் கணக்கில் பற்றெழுதிக் கொள்ளும்படி எழுதிக் கொடுத்த உண்டியலின் மாதிரி, பின்னிணைப்பு எட்டில் தரப்பட்டிருக்கிறது இந்த உண்டியலைப் பெற்றுக் கொண்டவர் ரங்கூன்இமபீரியல் பாங்க் மூலம் பணப் பெற்றுக்கொண்ட விபரமும் அதில் காணலாம்.

ஒவ்வொரு கடைகளிலும் வரும் அல்லது ஏற்படும் உண்டியல் களுக்கு கீழ்க்கண்டவாறு கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டும்,

1. நம்மால் எழுதிக் கொடுக்கப்பட்ட உண்டியல்கள்
2. நம்மால் வாங்கி அனுப்பப்பட்ட உண்டியல்கள்
3. மற்ற கடைகளிலிருந்து நம்மைப் பணம் கொடுக்கும் படி எழுதிவந்த உண்டியல்கள்
4. மற்றவர்களால் வாங்கி நமக்கு அனுப்பப்பட்ட உண்டியல்கள்

இவைகளுக்கெல்லாம் தனித்தனி விபரங்கள் அடியிற்கண்ட நான்குவிதமான அட்டவணைகளிபடி பதித்துவைத்துக்கொள்வது ஒவ்வொரு நகரத்தார் கடைகளிலும் இருந்து வருகிற வழக்கம்.

மோல்மேன் சு.நா. 1910 வருஷம் ஏப்ரல் மாதம் 12 முதல் இவ்விடமிருந்து எழுதிக்கொடுத்த உண்டியல்கள் விபரம்

## மோல்மேன் சு. நா.

## 1910 வருஷம் ஏப்ரல் மீ 12உ முதல் இவ்விடமிருந்து எழுதிக் கொடுத்த உண்டியல்கள் விபரம்

| உண்டியல் நம்பர் | தேதி | ஊர் | பணம் கொடுக்க வேண்டியவர் பெயர் | இன்னார் பெயருக்கு | ஆர்டர் அல்லது பேரர் | தெரிசனையா அல்லது வட்டியா | தொகை | பணம் கொடுக்கும் படி எழுதிய லெட்டரின் காப்பி பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | 5-4-1910 | பம்பாய் | அ. க. | பெ. க. | ஆர்டர் | வட்டி | 4000 | 27 |
| 2. | 7-4-1910 | சென்னை | சு. க. | அரு. அ. | பேரர் | தெரிசனை | 3500 | 28 |
| 3. | 15-4-1910 | ஷை | ஷை | ஷை | பேரர் | வட்டி | 3000 | 29 |
| 4. | 20-4-1910 | கல்கத்தா | அ. நா. | க. தெ. | பேரர் | வட்டி | 5000 | 30 |

## மோல்மேன் சு. நா.

## 1910ம் வருஷம் ஏப்ரல் மீ 1உ முதல் இவ்விடமிருந்து வெளியூருக்கு வாங்கியனுப்பிய உண்டியல்களின் விபரம்

| கொண்டு வந்தவர் பெயர் | உண்டியல் நெம்பர் | வருடம் மாதம் தேதி | கையெழுத்து போட்டவர் | இன்னாரிடம் பணம் வாங்க வேண்டியது | இன்னார் பெயருக்கு | ஆர்டர் அல்லது பேரர் | தெரிசனையா வட்டியா | தொகை ரூபாய் | அனுப்பிய ஊரும் பெயரும் | இன்ன பக்கத்தில் காப்பி எடுக்கப் பட்டது. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| அ. வ. | 7 | 7-1-10 | அ. மு. ராம | சென்னை க. தெ | அ. கரு. | பேரர் | வட்டி | 2600 | சென்னை கி. நா | 19 |

மோல்மேன் சு. நா.

1910 வருஷம் ஏப்ரல் மீ 12உ முதல் வெளியூரில் இருந்து எழுதியனுப்பி வந்த உண்டியல்களின் விபரம்

| உண்டியல் நம்பர் | வருடம் மாதம் தேதி | எழுதிக் கொடுத்தவர் | இன்னார் பெயருக்கு | தெரிசனையா வட்டியா | ஆர்டர் பேரர் | தொகை | பணம் கொடுத்த தேதி | கொடுத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 10 | 18-3-1910 | கல்கத்தா கரு. நா. | மதுரை சுப. அ. | வட்டி | பேரர் | 4.000 | 18-3-1910 | 4.120 |

## மோல்மேன் சு. நா.

## 1910 வருஷம் ஏப்ரல் மீ 1௳ முதல் மற்ற கடைகளில் இருந்து வாங்கியனுப்பி வந்த உண்டியல்கள் விபரம்

| அனுப்பியவர் ஊரும் பெயரும் | நம்பர் | வருஷம் மாதம் தேதி | இன்னவூர் இன்னார் கையெழுத்து | பணம்கொடுப்பவர் ஊரும் பெயரும் | இன்னார்பெயருக்கு | ஆர்டர் பேரர் | தரிசனையா வட்டியா | தொகை | வரவு தேதி | வரவு தொகை | வேறு ஊருக்கு அனுப் பட்டால் ஊரின் பெயர் | லெட்டர் காப்பி பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| சென்னை க. தெ. | 21 | 2-3-10 | புதுக் கோட் டை சுப. தெ. | கல்கத்தா சி.மு.நா. | பெ.க. | பேரர் | வட்டி | 5,000 | — | — | திருச்சி | 32 |

மேற்கண்டபடி எல்லாவிதமான உண்டியல்களையும் அந்தந்தப் புத்தகங்களில் எழுதி வைத்திருந்தால், ஒவ்வொரு மாதமுடிவிலும் இந்தப் புத்தகத்தைச் சரிபார்த்து, எந்தெந்த உண்டியல்களுக்கு நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற விபரமும் எளிதில் புரிந்துகொள்ள முடியும். இந்தப் புத்தகங்களை பெரும்பாலும் கடையின் அடுத்தாள்தான் பதிந்துகொண்டு வருவார். கடையின் ஏஜெண்டும் தினசரி இவைகளைச் சரிபார்த்து, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கையை கவனித்துக்கொள்ளவும் உதவியாக இருக்கும்' முதலாளிகள் எந்தச் சமயத்தில் வந்தாலும் அந்தத் தேதி வரை பதிவாகி இருக்கிற உண்டியல்களின் விபரங்களை தெரிந்துகொள்ள முடியும். இந்த உண்டியல் புத்தகங்களை மட்டு மல்லாமல், சிட்டைக்குறிப்பு, அசல் குறிப்பு, பேரேடு, பாக்கி புத்தகம், தபால் அனுப்பு வரவு புத்தகங்கள் இவைகளை அன்றாடம் பதிந்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். எந்தவொரு நகரத்தார் கடையிலும் அன்றன்றைக்கு பதியாமல் நாள்கள் சுணங்கிப் பதிகின்ற வழக்கமோ கணக்கு எழுதுகின்ற வழக்கமோ இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

கணக்குப் புத்தகங்களில் கச்சாத்து வவுச்சர் பைலும் முக்கிய மான ஒன்று. சரக்குகள் வாங்கப்பட்டாலும், பிற கடைகளில் இருந்து நமக்குக் கணக்கு முடித்துக் கொடுத்தாலும், அந்தக் கணக்குகளுக்குத்தான் வவுச்சர்கள் என்றும், கைச்சாற்றுக்கள் என்றும் சொல்லப்படுகின்றன. சில ஏடுகளில் சில கணக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டுமானால் இன்ன தேதி, இன்ன கைச்சாற்றுப்படி என்று எழுதவேண்டியது வரும். அதனால்தான், இந்த வவுச்சர்களையும், கைச்சாற்றுகளையும் பைலில் விட்டு வைப்பதையே வழக்கமாகக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்ட நேரத்தில் வரக்கூடிய பில்லுகளையும், வவுச்சர்களையும் சிட்டைக் குறிப்பிலும், அசல் குறிப்பிலும எல்லா விபரங்களையும் கண்டு எழுதி விடுவதால் வவுச்சர் பைல் கணிசமான அளவு வராது. எனினும, பிற கடைகளிலிருந்து கணக்கு முடித்து வருகின்ற கச்சாததுக்களின் முழு விபரங்களையும சிட்டைக்குறிப்பிலோ அல்லது அசல் குறிப்பிலோ எழுதுவதானால், பக்கங்கள் அதிகமாகும் என்ற காரணத்தால் கணக்குத் தாக்கல் செய்யும்பொழுதும், இன்ன நம்பர் கச்சாத்துப் படி எனறு மட்டும் எழுதிக் கணக்குகளை எழுதிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், இந்த கச்சாத்துக்கள் எப்பொழுதும் பத்திரமாக வைத்து வைக்கப்படவேண்டியவை. ஒரு கடையின் ஏஜெண்டோ அடுத்த ஆளோ, தான் வேலைக்குச் சேருகின்ற காலத்தில் எழுதிக்கொடுத்திருக்கின்ற சம்பளச் சீட்டின்படி இந்தக் கச்சாத்துக்களை எல்லாம் முதலாளியிடம் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் அவைகளைப் பத்திரமாகப் பாதுகாத்து வருவார்கள்.

# எட்டு

நகரத்தார்களுடைய நல்ல பழக்கவழக்கங்களில் கடிதம் எழுதுகின்ற முறை (Letter writing) ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியவைகளாகும். தன்னுடைய வயதிற்கு மூத்தவர்களுக்கு எழுதுகின்ற விதமும், தனக்கு இளமையில் இருக்கின்றவர்களுக்கு எழுதக்கூடிய விதமும், ஒரு முதலாளி தன்னுடைய ஏஜெண்டிற்கு எழுதுகின்ற கடிதத்தின் விதமும், ஒரு ஏஜண்ட் தன்னுடைய முதலாளிக்கு எழுதுகின்ற கடிதத்தின் விதமும் கீழே தரப்பட்டிருக்கின்றது.

ஒரு கடிதத்தைப் படிக்கின்றபோதே, அந்தக் கடிதம் எப்படிப் பட்டவரிடமிருந்து, எப்படிப்பட்டவருக்கு எந்தச் சூழ்நிலையில் எத்தகைய தன்மையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். இலக்கியங்களைப் படித்துப் படித்து இன்புறுவதுபோல, இந்தக் கடிதங்களையும், படித்துப் படித்து இன்புற முடியும். பண்டித ஜவகர்லால் நேரு தன் மகள் இந்திரா காந்திக்குத் தான் சிறையில் இருந்தபோது எழுதிய கடிதங்களை வைத்து, அந்தக் கால கட்டத்தில் இந்தியாவினுடைய சரித்திரத்தையே நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதுபோல, ஒரு முதலாளிக்கும் அவருடைய இரங்கூன் கடையின் ஏஜண்டுடன் பரிமாறிக் கொண்டு வந்த மூன்று ஆண்டுகளின் கடிதங்களையும் வரிசையாக எடுத்து வைத்துப் படித்துப் பார்த்தால், அந்தக் கால கட்டத்தில், இரங்கூனில் நடைபெற்ற அத்துணை நிகழ்ச்சிகளும், விலைவாசி ஏற்றத்தாழ்வுகளும், அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், மக்களின் பழக்க வழக்கங்களில் ஏற்படுகின்ற மாற்றங்

கள், முதலிய எல்லாச் செய்தியும், தங்கள் தொழில் சம்பந்தமாய் உள்ள விபரங்களும், தெரிந்துகொள்ள முடியும். இரங்கூனில் உள்ள பெரிய கடையின் 10, 20 ஆண்டு கால கடித பரிமாற்றங்களை ஒரு ஆராய்ச்சியாளன் எடுத்து வைத்துப் படிப்பானேயானால் அந்த நாட்டுக்குச் செல்லாமலேயே, அந்த நாட்டினுடைய சரித்திரத்தை அவனால் எழுதமுடியுமானால் நகரத்தார்களுடைய கடிதம் எழுதுகின்ற கலையே காரணமாக இருக்கும். எந்த ஒரு கடிதத்தை முடிக்கும் பொழுதும், அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உடையவர் கள் ஆனாலும் சரி, தங்கள் கையெழுத்தைப் போடுவதை வழக்க மாகக் கொள்ளாமல், தாங்கள் சார்ந்திருக்கின்ற தெய்வத்தின் துணையாலேயே அந்தக் கடிதங்களை முடித்து வைப்பார்கள். எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும், அல்லது கோர்ட்டுகளில் ஏற்படுகின்ற வழக்குகளிலும், எந்தவொரு கடிதமும் சாட்சியாக எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை வந்தாலும், அது கையெழுத்து இல்லாத கடிதம் என்று எந்தக் கோர்ட்டிலும் தள்ளுபடியானது இல்லை. காரணம், தங்கள் கையெழுத்தைக் காட்டிலும், தாங்கள் சார்ந்திருக்கின்ற தெய்வத்தின்துணையையே நம்பியிருந்ததுதான்.

உ சிவமயம்

ப.அரு.பழ,
பள்ளத்தூர்.

பழ.அரு
மோல்மேன்.

ஸ்ரீமுக வருஷம் மாசி மாதம் 29உ

அருணாசலம் எழுதிக்கொண்டது. இப்பவும் இவ்விடம் எல்லோரும் சௌக்கியம். அவடம் தங்கள் சௌக்கியத்திற்கும் எழுதியனுப்பி வைக்கும்படி செய்யச் செய்யவேண்டியது.

ஆச்சியும் அய்த்தானும் சென்ற வாரம் இங்கு வந்திருந்தார் கள். அவர்கள் மகன் முருகப்பனுக்கும் காப்புக்கட்டுப் புதுமை செய்யவேண்டும் என்று ஆச்சியினுடைய மாமனார் அவர்களும், ரொம்பவும் கண்டிப்பாகச் சொன்னதாகவும், ஆகையால் வருகிற பவ வருஷம் சித்திரை மாதம் 7உ காப்புக்கட்டுப் புதுமைக்கு நாள் பார்த்திருப்பதாகவும், தங்களுக்கு விபரம் எழுதியனுப்பி வைக்கும்படியும் அய்த்தானும் தங்களுக்கு விபரம் எழுதியனுப்பி வைப்பதாகச் சொல்லிச் சென்றார்கள்.

இவ்விடம் வசூலாகவேண்டிய வாடகைகளையும், வட்டிப் பாக்கிகளையும் ஒழுங்காக வசூல்செய்து, பாங்கில் சமால் செய்து

கொண்டு வருகிறேன். நம்மள் வீட்டு பால் தேவைக்கும் பசுமாடு ஒன்று இருந்தால் நல்லது என்று, ஆத்தாளும் சொல்லியதால் நம்மள் ஊர் சுப்பையா கோனார் மூலமாக ரூ. 175/-க்கு செவலை மாடு ஒன்றும் வாங்கியிருக்கிறது. தினமும் காலையிலும், மாலை யிலும் 2 பக்காக்களுக்கு குறையாமல் கறக்கிறது. நம்மள் தேவை போக பாக்கியை விற்று வருகிறோம்.

தம்பியும் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்று நல்ல விதமாகப் படித்து வருகிறான். நம்மள் பங்காளி செ.அ. வீட்டிலும் வருகிற பங்குனி மாசம், அவர்கள் பொண்ணுக்கு கல்யாணம் வைத்து இருக்கிறார்கள். மாப்பிள்ளையும் கண்டனூர் நா.சித. குமரப்ப செட்டியாருடைய மகன். இரண்டு விராகன் சீதனமும், முறைக்கு சிட்டையும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இவடம் ஆகவேண்டிய வேலைகளுக்கு தாங்கள் எழுதி யனுப்பிவைக்கச் செய்கிற வகையில் செய்து, தகவல் எழுதியனுப்பி வைக்கிறேன்.

மைற்ற தாக்கல் பின்பு
வேணும்
அண்ணாமலையார் துணை.

உ சிவமயம்

பழ.அரு. — ப.அரு.பழ
மோல்மேன் — பள்ளத்தூர்.

ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் 7உ

பழநியப்பன் எழுதியது. இப்பவும் அவடம் மாசி மாதம் 29உ தபாலும் வந்து சேர்ந்தது. இவடம் நானும் சௌகரியமாக இருக்கிறேன். அவடம் தானும், தன் தாயாரும், தம்பியும், மைற்றவர்களும் உள்ள சௌகரியத்திற்கு எழுதியனுப்பவும்.

தன்னுடைய கடிதத்தில் மாசி மாதம் 17உ நான் எழுதிய கடிதம் வந்து சேர்ந்ததாக எழுதவில்லையே. மேற்படி கடிதத்தில் சமையல்கார சேதுவுக்கு அண்டிமேன் எழுதி வாங்கிக்கொண்டு, ரூ. 2:0/- கொடுக்கும்படி எழுதியிருந்தேன். அது விபரமும் எழுத வில்லை. தன் தமக்கை வள்ளியம்மை மகன் முருகப்பனுடைய காப்புக்கட்டுப் புதுமை சம்பந்தமாக மாப்பிள்ளையும் அவர்கள் தகப்பனார் அவர்களும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நானும், இவடம் வரவேண்டிய இனங்களில் வசூல் செய்து கொண்டு,

ஆசாமிகள் பேரால் போட்ட இரண்டொரு கேசுகளும், பைசல் ஆகவேண்டி இருப்பதால், அவைகளையும் முடித்துக்கொண்டு, பங்குனி மாதக் கடைசியில் ஊருக்கு வந்துசேர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். அதற்கிடையில் நாமள் அவர்களுக்குச் செய்யவேண்டிய தீஞ்சாமான் வகையறாக்களுக்கும், பலகார வகை யறாக்களுக்கும், அவடம் நம்மள் பங்காளி வீட்டுப் பெண்டுகளைக் கேட்டுக்கொண்டு, அதுபோலச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ளவும்.

பசுமாடு வாங்கியிருக்கிற விபரமும் பார்த்துக்கொண்டேன். நம்மள் தோட்டத்தில் குடியிருக்கிற சின்னையாவையும் வந்து மாடு கன்றுகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லவும். சம்பளமும் மாதம் 5 ரூபாய்க்குமேல் போகாமல் பார்த்துப் பேசிக் கொள்ள வேண்டியது.

அவடம் இனங்களில் கொடுத்து இருக்கின்ற துகைகளுக்கும் தொடர்ந்து வட்டி வாசிகளை வாங்கிக்கொண்டு வரவும். நமக்கும் சிலவு நடைகள் கூடிக்கொண்டே போவதால், அசலையும் இனங்கியவரை வசூல் செய்யவும். புதிதாக எதுவும் கொடுக்கவேண்டாம்.

தம்பியினுடைய அரை வருஷப் பரிசைஷ மார்க்குகள் பார்த்துக்கொண்டேன், மைற்ற பாடங்களைவிட இங்கிலீஷில் மார்க்குறைவாக வாங்கியிருக்கிறானே, கவனமாகப் பார்த்துப் படிக்கும்படி சொல்லவும். வாத்தியார் ராமு அய்யரிடம் சொல்லி, சாயங்காலம் ஒருமணி நேரம் வந்து வீட்டுப்பாடம் சொல்லும்படி சொல்லவேண்டியது. சம்பளம் வகையறாக்களை நான் வந்தபிறகு பேசிக் கொள்ளலாம். நம்மள் பங்காளி செ. அ. வீட்டுக் கல்யாணத்துக்கும் பங்காளி வழக்கப்படி போய்வர வேண்டியது.

மைற்றதாக்கல் பின்பு,
வேணும்
அண்ணாமலையார் துணை

மேலே காட்டியுள்ள இரண்டு கடிதங்களும் தன்னைவிட வயதில் மூத்தவர்களுக்கும், மூத்தவர்கள் இளையவர்களுக்கும் எழுதிக்கொள்கிற கடிதங்களின் மாதிரிகள் ஆகும். இந்த இரண்டு கடிதங்களின் பின்னணியை வைத்துச் சிந்தித்துப் பார்த்தால், இந்தக் குடும்பத்தினுடைய சூழ்நிலையும், பெரியவர்களுக்குக் கொடுக்கின்ற மரியாதையும், அவர்கள் வீட்டில் நடக்கின்ற

ஒவ்வொரு நிகழ்ச்சிகள் பேரிலும் உள்ள கடமையும், அதைச் செயலாற்றுகின்ற விதமும் நன்கு புலனாகும்.

இனி கீழ் வருகின்ற இரண்டு கடிதங்களும் ஒன்று ஒரு முதலாளி தன்னுடைய ஏஜெண்டுக்கு எழுதுகின்ற கடிதமும், ஒரு ஏஜண்டு தன்னுடைய முதலாளிக்கு எழுதுகின்ற கடிதமும் மாதிரியாகக் கீழே தரப்பட்டிருக்கின்றன.

உ

சிவமயம்

ஆ. முத்துப்பட்டணம் | தோஞ்சை
சு. நா | சு. நா

வெகுதானிய ஸு ஐப்பசி மீ 16உ

நாச்சியப்பன் கதிரேசனுக்கு எழுதியது. இப்பவும் இவடம்இது கடதாசியும், நாளது மாதம் 3உ கடதாசியும், 5உயில் வெங்கடாசலத்திடம் கணக்குகள் எழுதிக்கொடுக்கும்படி எழுதியிருக்கிற கடதாசியும் வரத் தெரியவருமே. அவடம் சேதிக்கு முன் மாதம் 27உ கடதாசியும், நாளது மாதம் 3உ கடதாசியும் அத்துடன் 56 நிர் குறிப்பு நகலும் வந்து சேர்ந்தது.

தவணைக் கணக்குகளுக்கெல்லாம் வட்டி போட்டு தாக்கல் செய்யவும்.

தனக்கு பதிலாளும் நற்சாந்துபட்டியில் வருஷம் 3க்கு பேசி இருக்கிறது. எப்ப வேணுமென்றாலும் பிறப்பட்டு வருவான். செல்லையாவும் நாளது மீ20உ பிறப்பட்டு வருகிறான்.

இனங்களில் துருசு செய்து பணம் வாங்க வேண்டியவைகளை வாங்கி, நேர்செய்ய வேண்டிய இனங்களை நேர்செய்தும், வட்டி போட வேண்டியவைகளை வட்டிபோட்டு தாக்கல் செய்தும், ஆள் வந்ததும், பிறப்பட்டுவர வேண்டியது. பெருந்தொகையாய் உள்ளதுகளை வசூல் செய்தால்தான் பணம் மிதப்பு ஏற்படும். அவைகளையும் கவனித்து வசூலிக்கவும்.

வீட்டுச் சேவாவை வாங்கி அவடத்தில் சிலவுக்கு வைத்துக் கொள்ளப்படாது. குடியிருக்கிற 35 நிர் வீட்டுக்கு சாயம் பூசவும், சில்லரைச் செலவும் செய்ததைச் சிலவு எழுதாமல், சேவாகணக்கில் பற்று எழுதும்படி யார் சொன்ன யோசனை,

169 நிர் அண்டிமேனுக்கும் பணம் வாங்காமல் கிஸ்தியும் வாங்காமல் சீட்டு எழுதி மாதம் 17 ஆகியும் மூன்று கிஸ்திதான் வாங்கியிருக்கிறாய். ஆகச்சே பணத்தை வாங்குகிறது இல்லா திருந்தால், சமன் செய்யவும்.

தீபாவளிக்கு வருஷா வருஷம் சிலவு எழுதியும் அப்பால் ஊடே சிலவு எழுதியும், இப்ப தனக்கு தீபாவளி வேட்டிக்காக ரூ. 45/- எழுதியிருக்கிறாய் அதுவும் முறையல்ல.

1வது நிர் நிலத்துக்கு 245 கூடை நெல் வந்திருக்கிறது அதுவும் நல்ல வரும்படி, அப்படி இருக்க விலை ரெம்ப குறைச்சலாய் விற்றுவிட்டாய். நட்ட லாபங்களைப் பார்த்து எல்லாம் யோசித்து செய்யவேணும்.

இருப்பு ரெம்ப இறங்குதே. முன்பொரு முறை அதைப்பற்றி விபரமாக எழுதும்படி எழுத இதுவரை பதில் இல்லையே.

குறிப்பு நகல் எழுதி வருவதும், சில எழுத்துக்கள் திறனா யில்லாமலும் வீச்செழுத்தினால் சரியாய் விளங்கவும் இல்லை. அடுத்தாளிடமும் எழுத்துக்களை நிறுத்தி வீச்சில்லாமல் எழுத்துக் களைப் பெரிசாகவும் எழுதியனுப்பும்படி சொல்லவும். தானும் சுணங்காமல் கணக்குகளை எல்லாம் முடித்துக் கொண்டு, பழைய கணக்குப் புஸ்தகங்கள், ரொக்கச்சிட்டை, வீட்டுச்சேவா பத்தகங்கள், கச்சாத்து முதலியவைகளையும் பக்கவாய்ப் கட்டிக் கொண்டு சங்கராந்திக்கு ஊருக்கு வரும்படி பார்த்துக்கொள்ளவும்.

மையற்றதாக்கல் பின்பு
வேணும்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

உ
சிவமயம்

தோஞ்சை
சு. நா.

ஆ. முத்துப்பட்டணம்,
சு. நா

வெகுதானிய இ அர்ப்பிசி மீ 23௨

கதிரேசன் எழுதிக்கொண்டது. இப்பவும் அவடம் அர்ப்பிசி மீ 16 கடிதாசியும் வந்துசேர்ந்தது. இவடம் நாளது மீ 19௨ கடதாசியும் அத்துடன் ரூ. 200/-க்கு லெட்சுமி ஆச்சி உண்டியல் கணக்கு வட்டிச் சிட்டை நகலும் ரூ. 600/-க்கு ஷை தேதி உண்டியல்

ஒன்றும், வீட்டுச்சேவா லிஸ்டு ஒன்றும் வந்து சேர்ந்த விபரம் எழுதியனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது.

அடுத்தாள் செல்லையாவும் இவடம் வந்து சேர்ந்ததும் விபரம் எழுதியனுப்பிய வைக்கிறேன்.

கருப்பையா கணக்கையும் தாக்கல்செய்து பற்று வழி நீக்கி பாக்கி இருக்கிற ரூபாய்க்கும் இன்னும் ஒரு வாரம் முன்பின்னாக உண்டியலும் எழுதிவாங்கி, அவடத்துக்கு அனுப்பிவைத்து. ஷி கணக்குகளுக்கு நகலும் எழுதியனுப்பி வைக்கிறோம்.

கரு. நா. நடப்புக்கணக்கில் பாக்கி இருப்பதற்கும், நமக்கு தொகை சேரச்சேர கொடுத்துவரச் செய்கிறோம்.

141 நிர் ஆசாமியிடம் ரூ. 150/- நட்டம் வந்தாலும் இவடம் நோக்கம்போல் பணம் வாங்கவும் அல்லது மேல் நடத்தி வசூல் செய்யக்கூடிய விபரத்துக்கு விபரம் எழுதியனுப்பி வைக்கும்படி செய்யவேண்டியது.

முன் எழுதியபடி அ. ராம. பணத்துக்கு உண்டியல் வாங்கி அனுப்பி வைத்துக் கணக்கு எழுதி ஷி கணக்குக்கு குறிப்பு நகலும் அனுப்பிவைக்கிறோம்.

52, 58, 67, 94 நிர் அண்டிமேன்கள் பாக்கிக்கும் அந்தந்தத் தேதிவரை வட்டிக்கணக்குப் பார்த்து வசூல் செய்திருக்கிறது.

95 நிர் ஆசாமியும் ஷிமகன் இருவரிடமும் தொகை ரெம்பவும் ஜாஸ்தியாகத் தெரிவதால், எல்லாத்தையும் சேர்த்து வேறொரு அண்டிமேனில் பேர்த்தெழுதி வட்டியைக்கையில் வாங்கிக்கொண்டு ஷி ஆசாமியின் குடும்பத்தில் எல்லோரிடமும் கையெழுத்து வாங்கிக்கொள்ளுகிற விபரமும் எழுதியனுப்பிவைக்கும்படி செய்ய வேண்டியது.

114 நிர் ஆசாமிகளுக்கு நோட்டீசு அனுப்பினால் வந்து வட்டி தருவார்கள். அதுசமயம் அண்டிமேனையும் பேர்த்தெழுதி வாங்கிக்கொள்ளுகிறோம்.

117 நிர் ஆசாமியிடம் வட்டி வசூல் செய்திருக்கிறது. பட்டா நிர் பி. எஸ். 7950 ஷியானிடம் இருந்தால் கொண்டுவந்து தரும் படியும், இல்லையென்றால் ஷி பட்டாவிற்கு கவர்மெண்ட் காப்பி ஒன்று எடுத்துத் தரும்படியும் சொல்லியிருக்கிறது. அதையும் பார்த்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

39, 41, 45, 90, 69, 77, 81, 91, 103, 107, 121, 144, 163, 199 217 நிர் இனங்களில்போய் வட்டியையும், கிஸ்திகளையும் டிகிரிப் பாக்கிகளையும், வாங்கி கணக்கில் வரவு செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

நம்மள் குடியிருக்கிற 35 நிர் வீட்டுக்குப் பின்புறமும் பக்கத்து சைடிலும் ரெம்பப் பள்ளமாக இருக்கிறபடியால் அதற்கு மட்டும் சாம்பல் கொண்டுவந்து போட்டு நிரவிவிட்டு இருக்கிறது. பின்னீடு எந்தத் தொந்தரவும் ஏற்படக்கூடியதாக ஒரு வேலைகளும் ஷெ வீட்டில் பார்க்கவில்லை. முக்கியமாகப்பார்க்க வேண்டிய வேலைகளை மட்டுந்தான் பார்த்து வருகிறோம்.

அவுப்போ பெரி.நா. நாவும் கேசை அப்பீல் செய்து இருக்கிறார்கள். நாளது மீ 29உக்கு மேல் ஷெ கேசும் நடைபெறும். ஏற்கனவே லாயர் மங்களதாசு ஆபீசு மூலமாக நமக்கு கேசு பேசியதால் அப்பீல் கேசுக்கும் ஷெ லாயர் ஆபீசில் இப்போது இருந்துவருகிற வெள்ளக்கார மோரீசு என்பவரிடம் பீசு ரூ.150/- பேசி கேசுச்கட்டு களையும் கொடுத்திருக்கிறது. கேசு அனுகூலமானால் கேசுச் செலவு தொகை பூறாவும் நமக்குத்தர ஷெ லாயர் ஒத்துக் கொள்ளாததனால் ரூ. 150/- மட்டும் திரும்பத் தருவதாகப்பேசி இருக்கிறது. கேசு முடிவு தெரிந்ததும் விபரம் தெரியச் செய்கிறோம்.

அவடம் இருந்து எனக்கு பதிலாள் வருவதற்குள் கூடுமான வரை வசூல் ஆகவேண்டியவைகளை வசூல் செய்துகொண்டு மேற்கொண்டு இனங்களில் எதுவும் கொடுக்காமல் பார்த்துக் கொண்டும் மேற்படி பதிலாள் வந்ததும் கணக்கு விபரங்கள், ஆசாமி விபரங்கள் மைற்ற எல்லாவிபரங்களும் வழக்கம்போலச் சொல்லி, தாங்கள் எழுதியிருக்கின்றபடி, பழைய கணக்கு புஸ்தகங்கள், ரொக்கச்சிட்டை, வீட்டுச்சேவா புஸ்தகங்கள், கச்சாத்து முதலியவைகளையும் பக்காவாய்க் கட்டிக்கொண்டு சங்கராந்திக்கு ஊருக்கு வந்துவரும்படி பார்த்துக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| உண்டியல் விலை | ரூ. 115 |
| நெல் விலை | ரூ. 147-8-0 |
| பவுன் விலை | ரூ. 14.8.0 |

மைற்றதாக்கல் பின்பு
வேணும்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

மேற்படி கடிதங்களிலிருந்து ஒரு முதலாளி தன்னுடைய சொந்த ஊரிலிருந்து கொண்டே அயல்நாடுகளில் உள்ள தன்னுடைய கடைகளிலுள்ள ஏஜண்டுகளுக்கு கடிதங்கள் மூலமாகவே விபரங்கள் எழுதி, கடைகளை நடத்தி வருகின்ற பாங்கும், ஒருகடையின் ஏஜண்டு தன்னுடைய முதலாளியிடம் எவ்வளவு மரியாதையுடனும், அவர் எழுதுகின்ற ஆர்டர்படி கடையை நிர்வாகம் செய்து வருகின்ற விபரங்களும் மிகத் தெளிவாகப்புரியும். ஏஜண்டு எழுதுகின்ற ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுகின்ற நாளிலுள்ள நெல் விலையையும், பவுன் விலையையும் வைத்தே ஒரு முதலாளி அந்தப்பருவ காலங்களில் ஏற்படுகின்ற பண வீக்கத்தையும் பணத் தேள்வையையும் தீர்மானம் செய்து இனங்களில் கொடுக்க வேண்டியவைகளுக்கும், அல்லது இனங்களி லிருந்து வசூல் செய்தவற்கும் ஆர்டர்கள் அனுப்புவதற்கு தோதாக இருக்கும்.

எத்தனை நாட்டவர்களும், இலக்கியவாதிகளும் எவ்வளவோ விதமான கடிதங்கள் எழுதியிருந்தாலும், நகரத்தார்கள் ஒரு வருக்குள் ஒருவர் எழுதிக்கொள்கின்ற கடிதங்களில் காணப்படு கின்ற சூட்சமமும், திறமையும் வேறு எந்தக் கடிதங்களிலும் காணமுடியாது. கடிதம் எமுதுவதை ஒரு கலையாகவே நகரத்தார் கள் கைக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் அது மிகையே இல்லை.

ஒரு கடையில் ஒரு மேலாள் நல்லவிதமாக மூன்று கணக்குகள் கொண்டு விற்று கணிசமான லாபம் சம்பாதித்துக் கொடுத்தால் அந்த மேலாளையே முதலாளி தன் கடையில் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு, தான் மட்டும் முதலாளியாக இல்லாமல் அடுத்தவரையும் முதலாளி ஆக்குகின்ற பரந்த மனப்பான்மை நகரத்தார்களிடையே இருந்து வந்திருக்கிறது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

# ஒன்பது

நகரத்தார்கள் வாணிகத்தில் தேர்ந்தவர்கள் ஆவார்கள். எண்ணையும் எழுத்தையும் நன்கு பயின்றிருந்தார்கள். அவர்களுடைய கணக்குகளில் ஒன்றையும், ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட சிற்றெண்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்தது அவர்கள் கணிதப் புலமைக்குச் சான்றாகும். இந்தப் புத்தகத்தில் காணுகின்ற இலக்கங்கள் அத்தனையும் ஆங்கிலேய வரி வடிவத்திலேயே கொடுத்திருந்த போதிலும், நகரத்தார்கள் அயல்நாடுகளில் கொண்டுவிற்ற காலங்களிலும், அல்லது உள்ளூரில் லேவாதேவி செய்து கொண்டிருந்த காலங்களிலும், அவர்கள் சொந்த வீட்டு வரவு செலவில் கூட, அவர்கள் தமிழ் இலக்கங்களையே பயன்படுத்தி வந்தனர். ஏறத்தாழ, 1940-42ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஆங்கில இலக்கங்களை அவர்கள் கணக்குகளில் பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது.

ஒரு கடைக்கு மேலாளாகச் சென்று அந்தக் கடையை நிர்வகிக்க வேண்டும் என்றால், அவர் தன்னுடைய திண்ணைப் பள்ளிக்கூடப் பருவ காலத்திலேயே, கீழ்வாய் இலக்கம், மேல்வாய் இலக்கம், பெருங்குழிமாத்து, சிறுங்குழி மாத்து, சதுரம் எண்பது, எண்சுவடி. வருஷப் பிறப்பு முதலிய எல்லாப் பாடங்களையும் மனனம் செய்து அதில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். அந்தக்காலத்து அத்துணை நகரத்தார்களும் இந்த வாய்ப்பாடுகள் அனைத்தையும் மனனம் செய்தவர்களாக இருந்ததால்தான், கணிதத்தில் வல்லவர்களாய் இருக்க முடிந்தது. எவ்வளவு பெரிய சிக்கலான வட்டிக் கணக்காக இருந்தால்கூட, இந்தக்காலத்தில் உபயோகத்தில் இருக்கக்கூடிய கால்குலேட்டர்கள் இல்லாமலேயே,

காகிதம் பென்சில்கூட இல்லாமல், மனக்கணக்காகவே போடக் கூடிய வல்லமைபெற்றவர்கள். இந்தக்கால இளைஞர்களுக்கு அந்தத் தமிழ் இலக்கங்களின் வரிவடிவம் ஒலிவடிவம் என்ன என்பது கூடத் தெரியாத காரணத்தால் அவைகள் இங்கே விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது.

தமிழறிஞர், கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் வெளியிட்ட ''கையேடு'' என்ற நூலில் நம்முடைய தமிழ் எண்களும் இலக்கங்களும் கி. பி. 2ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிற விபரங்களை பட்டிய லிட்டுக் காட்டியிருப்பது நமக்குப் பெரிதும் பயனுடையது. அந்தப் பட்டியலையும், தமிழ் இல்க்கங்களின் வரிவடிவம், அதனுடைய ஒலிவடிவம் (உச்சரிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும்) அதனுடைய மதிப்பு முதலியவைகளை விபரமாகக் காட்டியுள்ள பட்டியலையும் பின்னிணைப்பில் முறையே ஒன்பது பத்து இரண்டிலும் தரப்பட்டிருக்கின்றன. இவைகளை முறையாகத் தெரிந்து கொண்டுவிட்டால் பின்னிணைப்பு பதினொன்றில் தரப்பட்டிருக்கும் முந்திரி இலக்கம், எண்சுவ்டி, கீழ்வாய் இலக்கம் முதலிய வாய்பாடுகளைப் படித்துப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும்.

தமிழ்க்கணக்கு தனித்தன்மை கொண்டது. தமிழ் எழுத்துகளே எண்களாகக் கையாளப்பட்டன. க என்பது ஒன்றாகவும், ரு என்பது ஐந்தாகவும், உ என்பது இரண்டாகவும் ய என்பது பத்தாகவும், ள என்பது நூறாகவும், வ என்பது காலாகவும் இ என்பது அரையாகவும் இப்படி தமிழ் எழுத்துகளே எண்களாகக் கொண்டு கையாளப்பட்டுவந்திருக்கிறது. இவ்வழக்கு இப்போது இல்லையென்றாலும், இதில் ஆய்வு செய்தால் நம்மவர்களுடைய கணக்குப் புலமையை இன்னும் நன்கு கண்டறியலாம்.

## வருஷப் பிறப்பு

### காப்பு விருத்தம்

யுகவருஷ முடன் மாதம் வாரம் — திதி யோகம்
கருணையுடன் நட்சத்திர ராசி முதல் என் கருத்துரைக்க
ஆதிவிக்கி னேஸ்வரனே அடியேன் மனத்திருந்து
நீடு கார்ப்பதுன் கிருபையே.

### யுகம் 4

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரேதாயுகம் | — கிரேதாயுகத்திற்கு வருடங்கள் | 17, 28, 000 |
| 2. | துவாபரயுகம் | — துவாபரயுகத்திற்கு வருடங்கள் | 8, 64, 000 |
| 3. | திரேதாயுகம் | — திரேதாயுகத்திற்கு வருடங்கள் | 12, 66, 000 |
| 4. | கலியுகம் | — கலியுகத்திற்கு வருடங்கள் | 4, 32, 000 |

### தமிழ் வருஷங்கள் 60

பிரபவ
விபவ
சுக்கில
பிரமோதூத
பிரஜோற்பத்தி
ஆங்கிரச
ஸ்ரீமுக
பவ
யுவ
தாது
ஈஸ்வர
வெகுதானிய
பிரமாதி
விக்கிரம
விஷு
சித்திரபானு
சுபானு
தாரண
பார்த்திப
விய
சர்வசித்து
சர்வதாரி
விரோதி
விக்குருதி
கர
நந்தன
விஜய
ஜய
மன்மத
துன்முகி
ஹேவிளம்பி
விளம்பி
விகாரி
சார்வரி
பிலவ
சுபகிருது
சோபகிருது
குரோதி
விசுவாவசு
பராபவ
பிலவங்க
கீலக
சௌமிய
சாதாரண
விரோதிகிருது
பரிதாபி
பிரமாதீக்ஷ
ஆனந்த
இராக்ஷச
நள
பிங்கள
காளயுத்தி
சித்தாத்திரி
ரௌத்திரி
துன்மதி
துந்துபி
ருத்திரோத்காரி
இரத்தாக்ஷி
குரோதன
அக்ஷய

### அயனங்கள் 2

உத்தராயணம்
தக்ஷணாயனம்
தை மாதம் முதல்
ஆறுமாதம்
உத்தராயணம்
ஆடிமாதம் முதல்
ஆறு மாதம்
தக்ஷணாயனம்

### இங்கிலீஷ் மாதங்கள் 12

ஜனவரி
பிப்ருவரி
மார்ச்சு
ஏப்பிரல்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்டு
செப்டம்பர்
அக்டோபர்
நவம்பர்
டிசம்பர்

### சங்கற்ப மாதங்கள் 12

சைத்திரம்
வைகாசம்
சேஷ்டம்
ஆஷாடம்
சிராவணம்
பாத்திரபதம்
ஆச்விஜயம்
கார்த்திகம்
மார்க்கசிரம்
புஷியம்
மாகம்
பால்குணம்.

### ருதுக்கள் 6

சித்திரை, வைகாசி— வசந்தருது
ஆனி, ஆடி— கிருஷ்மருது
ஆவணி, புரட்டாசி— வருஷருது
ஐப்பசி, கார்த்திகை— சரருது
மார்கழி, தை— இமந்தருது
மாசி, பங்குனி— சசிருது

**பெரும் பொழுது 6**

கார்
கூதிர்
முன்பனி
பின்பனி
இளவேனில்
முதுவேனில்

**சிறு பொழுது 6**

மாலை
யாமம்
வைகறை
விடியல்
நண்பகல்
எற்பாடு

**தமிழ் மாதங்கள் 12**

சித்திரை
வைகாசி
ஆனி
ஆடி
ஆவணி
புரட்டாசி
ஐப்பசி
கார்த்திகை
மார்கழி
தை
மாசி
பங்குனி

**துலுக்கு மாதங்கள் 12**

மோகரம்
சபர்
ரப்பீலவர்
ரப்புசானி
ஜமாதிலவல்
ஜமாதிசானி
ரஜிபு
ஷாபான்
ரம்ஜான்
ஷவ்வால்
சிலகாத்
ஜிலவோம்

**திதிகள் 15**

பிரதமை
துதியை
திரிதிகை
சதுரத்தி
பஞ்சமி
சஷ்டி
சப்தமி
அஷ்டமி
நவமி
தசமி
ஏகாதசி
துவாதசி
திரயோதசி
சதுர்த்தசி
பௌர்ணமி
அல்லது
அமாவாசை

**நாட்கள் 7**

ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி
சனி

**சங்கற்ப வாரங்கள்**

பானு வாரம்
இந்து வாரம்

பௌம வாரம்
சௌமிய வாரம்
பிரகஸ்பதி வாரம்
சுக்கிர வாரம்
சனி வாரம்

**இராகு காலம்**

ஞாயிறு 4.30-6.00
திங்கள் 7.30-9.00
செவ்வாய் 3.00-4.30
புதன் 12.00-1.30
வியாழன் 1.30-3.00
வெள்ளி 10.30-12.00
சனி 9.00-10.30

**குளிகைக்காலம்**

ஞாயிறு 3.00-4.30
திங்கள் 1.30-3.00
செவ்வாய் 12.00-1.30
புதன் 10.30-12.00
வியாழன் 9.00-10.30
வெள்ளி 7.30-9.00
சனி 6.00-7.30

**நட்சத்திரங்கள் 27**

அசுவினி
பரணி
கார்த்திகை
ரோகிணி
மிருகசீரிடம்
திருவாதிரை
புனர்பூசம்
பூசம்
ஆயில்யம்
மகம்
பூரம்
உத்திரம்
அஸ்தம்
சித்திரை
சுவாதி
விசாகம்
அனுஷம்
கேட்டை
மூலம்
பூராடம்
உத்திராடம்
திருவோணம்
அவிட்டம்
சதயம்
பூரட்டாதி
உத்திரட்டாதி
ரேவதி

**வாரசூலை**

| | |
|---|---|
| திங்கள், சனி | கிழக்கு |
| வெள்ளி, ஞாயிறு | மேற்கு |
| செவ்வாய், புதன் | வடக்கு |
| வியாழன் | தெற்கு |

**யோகங்கள் 27**

ஷஷ்கம்பம்
பிரீதி
ஆயுஷ்மான்
சௌபாக்கியம்
சோபனம்
அதிகண்டம்
சுகர்மம்
திருதி
சூலம்
கண்டம்
விருத்தி
துருவம்
ஷயாகாதம்
அரிஷனம்
வச்சிரம்
சித்தி
விதிபாதம்
வரியான்
பரீகம்
சிவம்
சித்தம்
சாத்தியம்
சுபம்
சுப்பிரமம்
பிரமம்
ஐந்திரம்
வைதிருதி

**கரணங்கள் 11**

பவம்
பாலவம்
கௌலவம்
தைதுலை
கரசம்
வனசம்
பத்திரை
சகுனி
சதுஷ்பாதம்
நாகவம்
கிமஸ்துக்கிளம்

**இராசிகள் 12**

மேஷம்
ரிஷபம்
மிதுனம்
கடகம்
சிங்கம்
கன்னி
துலாம்
விருச்சிகம்
தனுசு
மகரம்
கும்பம்
மீனம்

**இராசி மாதங்கள் 12**

மேஷம் - சித்திரை
ரிஷபம் - வைகாசி
மிதுனம் - ஆனி
கடகம் - ஆடி
சிங்கம் - ஆவணி
கன்னி - புரட்டாசி
துலாம் - ஐப்பசி
விருச்சிகம் - கார்த்திகை
தனுசு - மார்கழி
மகரம் - தை
கும்பம் - மாசி
மீனம் - பங்குனி

**கிரகங்கள் 9**

சூரியன்
சந்திரன்
செவ்வாய்
புதன்
பிரகஸ்பதி
சுக்கிரன்
சனி
இராகு
கேது

**கிரங்களுக்குரிய இராசி**

மேஷம், விருச்சிகம்
—செவ்வாய்
ரிஷபம், துலாம்
—சுக்கிரன். (வெள்ளி)
மிதுனம், கன்னி
—புதன்
கடகம்— சந்திரன்
(திங்கள்)
சிங்கம்— சூரியன்
(ஞாயிறு)
தனுசு, மீனம்
—வியாழன்
மகரம், கும்பம்
—சனி

**திக்குகள் 8**

கிழக்கு
தென்கிழக்கு
தெற்கு
தென்மேற்கு
மேற்கு
வடமேற்கு
வடக்கு
வடகிழக்கு

**அவர்களின் ஆயுதங்கள் 8**

வச்சிரம்
சத்தி
தண்டம்
முசலம்
பாசம்
தஜம்
சூலம்

**அவர்களின் பட்டணங்கள் 8**

அமராவதி
தேஜோபதி
சமனாபதி
இரக்ஷோபதி
சுத்தாபதி
கெந்தாபதி
அளகாபதி
கைலாசகிரி

**அவர்களின் வாகனங்கள் 8**

வெள்ளானை
ஆட்டுக்கிடா

எருமைக்கிடா
தண்டிகை
முதலை
கலைமான்
குதிரை
ரிஷபம்

**நாகங்கள் 8**

அனந்தன்
வாசுகி
தக்ஷகன்
சங்கன்
குளிகன்
மதுமன்
மகாபதுமன்
கார்க்கோடகன்

**அவர்களின் பாலகர்கள் 8**

இந்திரன்
அக்கினி
எமன்
நிருதி
வருணன்
வாயு
குபேரன்
ஈசானியன்

**அவர்கள் மனைவியர் 8**

ஸ்வாகை
சாமளை
துர்க்கை
காளிகை
அஞ்சனை
சித்திரரேகை
பார்வதி

**திக்கயங்கள் 8**

ஐராவதம்
புண்டரீகம்
வாமனம்
குமுதம்
அஞ்சனம்
புட்பதந்தம்
சாருவபூமம்
சுக்கிரதீபம்

**அவைகளின் மனைவிகள் 8**

அப்பிரமை
கபிலை
பிங்களை
அநுபமை
தாமிரபருணி
சுதந்தி
அங்களை
அஞ்சனாவதி

**மேல்உலகங்கள் 7**

பூலோகம்
புவலோகம்
சனலோகம்
தபோலோகம்
மகாலோகம்
சத்தியலோகம்

**கீழ் உலகங்கள் 7**

அதலம்
விதலம்
சுதலம்
தராதலம்
ரசாதலம்
மகாதலம்
பாதாளம்

**கடல்கள் 7**

லவணம்
சுரா
சர்ப்பி
ததி
க்ஷீரம்
சுத்தோதகம்
இட்சு

**அவை யாவன**

லவணம்-உப்பு
இட்சு - கருப்பஞ்சாறு
சுரா - கள்ளு
சர்ப்பி - நெய்
ததி - தயிர்
க்ஷீரம் - பால்
சுத்தோதகம்
நல்லநீர்

**தீவுகள் 7**

சம்புத் தீவு
பிலட்சத் தீவு
குசத்தீவு
கிரௌஞ்சத் தீவு
சாகத் தீவு
சான்மலித் தீவு
புஷ்கரத்தீவு

**தேவ வருஷங்கள் 7**

பாரத வருஷம்
கிம்புருட வருஷம்
அரி வருஷம்
இளாவிர்த வருஷம்
இரமிய வருஷம்
ஐரன்வத வருஷம்
குரு வருஷம்

**முத்தித் தலங்கள் 7**

அயோத்தி
மதுரை
மாயை
காசி
காஞ்சி
அவந்தி
துவாரகை

**சப்தரிஷிகள் 7**

மரீசி
அத்திரி
ஆங்கீரசு
புலஸ்தியன்
புலகன்
பிருகு
வசிஷ்டர்

**சப்தமாதர்கள் 7**

கவுரி
அபிராமி
மகேஸ்வரி
நாராயணி
வராகி
இந்திராணி
காளி

**கன்னிகைகள்-5**

அகலிகை
திரௌபதை
சீதை
தாரை
மண்டோதரி

**காலங்கள் 3**

கடந்தகாலம்
நிகழ்காலம்
எதிர்காலம்

**சிரஞ்சீவிகள் 7**

அசுவத்தாமா
மாபலி
வியாசன்
அனுமான்
விவீஷணன்
கிருபாச்சாரியன்
பரசுராமன்

**சக்கரவர்த்திகள் 6**

அரிச்சந்திரன்
நளன்
முகுந்தன்
புரூரவன்
புருகுற்சன்
கர்த்தவீரியன்

**மஹாராஜாக்கள் 16**

கயன்
அம்பரீஷன்
சசிபிந்து
அனங்கன்
பிருது
மருத்துவந்தன்
பரதன்
சுகோத்திரன்
ஸ்ரீராமன்
திலிபன்
சகரன்
பரசுராமன்
யயாதி
மாந்தாதா
பகீரதன்
சிபி

**ஆரியர்கள் 12**

தாத்துரு
சக்கரன்
அரியமன்
மித்திரன்
வருணன்
அஞ்சுமான்
இரணியன்
பகவான்
திருச்சுவான்
பூடன்
சவித்திரு
துவட்டன்

**சிவமுகூர்த்தங்கள் 25**

சந்திரசேகரர்
உமாமகேசுரர்
ரிஷபாரூடர்
சபாபதி
கல்யாணசுந்தரர்
பிக்ஷாடணர்
காமாரி
அந்தகாரி
திரிபுராதி
சலந்தராதி
வித்வம்சர்
வீரபத்திரர்
நரசிங்கனிபாதர்
அர்த்தனாரீசுரர்
விக்கிராதரர்
கங்காளர்
கண்டேசனுக்கிரகர்
நீலகண்டர்
சக்கராயப்பிரதர்
கசமுகானுக்கிரகர்
ஏகபாதர்
சோமாஸ்கந்தர்
அனங்கபிருது
தட்சணாமூர்த்தி
லிங்கோற்பவர்

**உருத்திரர்கள் 11**

மஹாதேவர்
சிவன்
உக்கிரர்
சங்கரர்
நீலலோகிதர்
கஜானர்
விஜயர்
வீமர்
தேவதேவர்
பவோற்பவர்
கபாலீசர்

**வித்தியேஸ்வர்கள் 8**

அனந்தர்
சூட்சமர்
சிவோத்தமர்
ஏகநேத்ரர்
ஏகருத்திரர்
திரிமூர்த்தி
ஸ்ரீ கண்டர்
சிகண்டி

**மால் அவதாரங்கள் 10**

மச்சம்
கூர்மம்
வராகம்
நரசிம்மம்
வாமனம்
பரசுராமர்
ஸ்ரீராமர்
பலராமர்
கிருஷ்ணர்
கற்கி

**மாலாயுதங்கள் 5**

சங்கு
சக்கரம்

சாரங்கம்
தண்டு
வாள்

**பூதலிங்கஸ்தலங்கள் 5**

பிரிதிவி - காஞ்சிபுரம்
அப்பு - திருவானைக்காவல்
தேயு - திருவண்ணாமலை
வாயு - திருக்காளத்தி
ஆகாயம் - சிதம்பரம்

**விநாயக முகூர்த்தங்கள் 16**

சுமுகர்
ஏகதந்தர்
கபிலர்
கஜகர்ணிகர்
லம்போதரர்
விகடர்
விக்கினராசர்
கணாதிபர்
தூம கேது
கணாதியக்ஷர்
பாலசந்திரர்
கஜானனர்
வக்கிரதுண்டர்
சூர்ப்பகரனர்
ஏரம்பர்
ஸ்கந்தபூர்வஜர்

**சுப்பிரமணிய முகூர்த்தங்கள் 16**

ஞானசத்திதரர்
ஸ்கந்தர்
குமாரர்
மயூரவாகனர்
கஜாருடர்
பிரமாசாஸ்தர்
பாலசுப்பிரமண்யர்
சுப்பிரமண்யர்
வள்ளிசமேதரர்
கார்த்திகேயர்
ஷண்முகர்
சேனாதிபதி
தேவ சேனாதிபதி
தாருகாரி
கிரௌஞ்சாரி
சரவணோற்பர்

**முருகன் பிரதான ஸ்தலங்கள் 6**

திருப்பரங்குன்றம்
திருச்செந்தூர்
திருவாவினன்குடி
திருவேரகம்
குன்றுதோறாடல்
பழமுதிர்சோலை

**கணங்கள் 18**

அமரர்
சித்தர்
அசுரர்
தைத்தியர்
கருடர்
கின்னரர்
நிருதர்
கிம்புருடர்
காந்தருவர்
இயக்கர்
விஞ்சையர்
பூதர்
பைசாசர்
அந்தரர்
முனிவர்
உரகர்
ஆகாசவாசிகள்
போகபூமியர்

**தத்துவங்கள் 16**

பூதம்
தன்மாத்திரை
ஞானேந்திரயம்
கர்மேந்திரயம்
கரணம்
நாடி
அவஸ்தை
மலம்
குணம்
மண்டலம்
பிணி
விகாரம்
ஆதாரம்
தாது
வாயு
கோசம்
வாயில்

**பூதங்கள் 5**

பிருதிவி
அப்பு
தேயு
வாயு
ஆகாயம்

**தன்மாத்திரைகள் 5**

சப்தம்
ஸ்பரிசம்
ரூபம்
ரசம்
கந்தம்

**ஞானேந்திரியங்கள் 5**

சுரோத்திரம்
தொக்கு
சக்ஷு
சிங்குவை
கிராணம்

**கர்மேந்திரியங்கள் 5**

வாக்கு
பாதம்
பாணி
பாயுரு
உபஸ்தம்

**கரணங்கள் 4**

மனம்
புத்தி
சித்தம்
அகங்காரம்

**நாடிகள் 10**

இடை
பிங்கலை
சுழிமுனை
காந்தாரி
அத்தி
சிகுவை
அலம்படை
புருடன்
குகு
சங்கினி

**அவஸ்தைகள் 5**

சாக்கிரம்
சொர்ப்பணம்
சுழுத்தி
துரியம்
துரியாதீதம்

**மலம் 3**

ஆணவம்
காமியம்
மாயை

**குணம் 3**

சாத்வ குணம்
ரசோ குணம்
தமோ குணம்

**மண்டலம் 3**

அக்கினி மண்டலம்
ஆதித்த மண்டலம்
சந்திர மண்டலம்

**பிணிகள் 3**

வாதம்
பித்தம்
சிலேட்டுமம்

**வேதங்கள் 4**

இருக்கு
யஜுர்
சாமம்
அதர்வணம்

**ஆதாரங்கள் 6**

மூலாதாரம்
சுவாதிஷ்டானம்
மணிபூரகம்
அனாகதம்
விசுத்தி
ஆக்கினை

**விகாரங்கள் 6**

காமம்
குரோதம்
லோபம்
மோகம்
மதம்
மாற்சரியம்

**தாதுக்கள் 7**

இரத்தம்
உதிரம்
எலும்பு
தோல்
சதை
மூளை
சுக்கிலம்

**வாயுக்கள் 10**

பிராணன்
அபானன்
சமானன்
உதானன்
வியானன்
நாகன்
கூர்மன்
கிருதரன்
தேவதத்தன்
தனஞ்சயன்

**கோசங்கள் 5**

அன்னமயம்
பிராணமயம்
மனோமயம்
விஞ்ஞானமயம்
ஆனந்தமயம்

**வாயில்கள் 6**

கண்
காது
மூக்கு
வாய்
குதம்
குய்யம்

**சைவாகமங்கள் 16**

காமிகம்
யோகசயம்
சிந்தியம்
காரணம்
அசிதம்
தீப்தம்
சூக்குமம்
சகத்திரம்
அஞ்சுமான்
சுப்ரபேதகம்
விசயம்
நிசுவாசம்
சுவயாம்புவம்
அனலம்
வீரம்
ரௌரவம்

**வைஷ்ணவாகமங்கள் 2**

பாஞ்சராத்திரம்
வைகாசனம்

**புராணங்கள் 18**

மச்சியம்
கூர்மம்
வராகம்
வாமனம்
பிரமம்
வைணவம்
பாகவதம்
சைவம்

இலைங்கம்
பௌடிகம்
நாரதீயம்
காருடம்
பரமசைவர்த்தம்
ஸ்காந்தம்
மார்க்கண்டேயம்
ஆச்சினேயம்
பிரமாண்டம்
பதுமம்

**ஸ்மிருதிகள் 18**

மனு
அத்திரி
ஔரதம்
விஷ்ணு
யாக்ஞாவற்கியம்
உசனம்
ஆங்கீரசம்
மெயம்
ஆபஸ்தம்பம்
சமவர்த்யகம்
கார்த்திதானம்
பிரகஸ்பதி
பராசரம்
வியாசம்
சங்கலிதம்
தக்ஷம்
கௌதமம்
சாதான்மம்
வசிஷ்டம்

**சாஸ்திரங்கள் 6**

வேதாந்தம்
வைசேடிம்
பாட்டம
பிரபாகரம்
பூர்வமீமாஞ்சை
உத்தர மீமாஞ்சை

**இதிகாசங்கள் 3**

இராமாயணம்
ாரதம்
சிவரகசியம்

**தருமங்கள் 32**

ஆதுலர்க்கு சாலை
ஓதுவார்க்குணவு
அறுசமயத்தார்க்
குண்டி
பசுவுக்கு வாயுறை
சிறைச் சோறு
ஐயம்
தின்பண்டம் நல்கல்
அறவைச்சோறு
மகப்பெறுவித்தல்
மகவு வளர்த்தல்
மகப்பால் வார்த்தல்
அறவைப்
பிணஞ்சுடுதல்
அறவைத் தூரியம்
சுண்ணம்
நோய் மருந்து
வண்ணான்
நாவிதன்
கண்ணாடி
காதோலை
கண்மருந்து
தலைக்கெண்ணை
பெண்போகம்
பிறர்துயர்காத்தல்
தண்ணீர்பந்தல்
மடம்
தடம்
சோலை
ஆவுரிஞ்சுதறி
விலங்கிற்குணவு
ஏறுவிடுத்தல்
விலைகொடுத்துயிர்
காத்தல்
கன்னிகாதானம

**கணங்கள் 10**

கோதானம்
பூதானம்
இரணியதானம்
கிருகதானம்
குளதானம்
ரசிததானம்
லவணதானம்
வஸ்திர தானம்
தானிய தானம்
தில தானம்

**உபசாரங்கள் 16**

ஆவாகனம்
ஆசனம்
பாத்தியம்
அருக்கியம்
ஆசமணீயம்
ஸ்நானம்
வஸ்திரம்
எக்ஞோபவிதம்
கந்தம
புஷ்பம்
தூபம்
நைவேத்தியம்
தாம்பூலம்
நமஸ்காரம்
உத்வாகனம்
தீபம்

**கர்மங்கள் 16**

கருப்பதானம்
புமஸ்வனம்
சீமந்தம்
ஜாதக்ரமம்
நாமகர்ணம்
அன்னப்பிராசனம்
சௌளம்
ஆக்கினேயம்
உபநயனம்
பிரஜாபத்தியம்
சௌப்புயம்
வைசவதேவம்
கோதானம்
சம்வர்த்தனம்
விவாகம்
அந்திய கர்மம்

**திசாபுத்தி பலன்கள்**

சூரிய மகாதிசை
— 6 ஆண்டுகள்
சந்திர மகாதிசை
— 10 ஆண்டுகள்
அங்காரகதிசை

— 7 ஆண்டுகள்
இராகுதிசை
— 18 ஆண்டுகள்
குருமகாதிசை
— 16 ஆண்டுகள்
சனிமகாதிசை

— 19 ஆண்டுகள்
புதன் மகாதிசை
— 17 ஆண்டுகள்
கேது மகாதிசை
— 7 ஆண்டுகள்
சுக்கிர மகாதிசை

—20 ஆண்டுகல்
————
ஆகமகாதிசை
9க்கும் மொத்த
ஆண்டுகள் 120
————

நகரத்தார்கள் முன்னோர்களுடைய ஏற்பாட்டை அனுசரித்தும், ஆங்கிலேயர்களுடைய வழக்கங்களை ஒட்டியும் கணக்குகள் வைத்து சிட்டைக் குறிப்பு, அசல் குறிப்பு, பேரேடு, ஐந்துகை, லாப நட்டக் கணக்கு, பாக்கிப் புத்தகம் உண்டியல் அனுப்புவரவு புத்தகம், கைச்சாத்து, வவுச்சர் பைல் புத்தகம், தபால் அனுப்பு வரவு புத்தகம் முதலிய புத்தகங்களை சரியான முறையில் எழுதிவந்ததால், அந்தந்த ஆண்டில் மட்டுமல்ல, அதற்குப் பிறகு எந்த ஆண்டில் பார்த்தாலும் சகல நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ள ஏதுவாக வைத்திருந்தார்கள்.

கணக்குப் பரிசோதனையில் (Auditing) பிழையையும் புரட்டுகளையும் தடுத்துவிடலாம். கைத்தவறுதலாகவோ அல்லது ஞாபகப் பிசகாலோ எழுதும் எண்களிலும், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலியவைகளில் அதிகமாக அல்லது குறைய ஏற்படுவதுதான் பிழை (Error). இம்மாதிரியான பிழைகளை சாதாரணமாகக் கணக்கு வேலை பார்ப்பவரே எளிதில் கண்டுபிடித்தால்தான் அன்றைய திட்டம் சரியாக இருக்கும். ஒரு முதலாளியை மோசம் செய்யும் பொருட்டு குறிப்பில் புரட்டாக எழுதி பாக்கிப் புஸ்கத்தில் மேற்படி கணக்கைப் பதிந்து, பேரோட்டில் பதியாமல் விட்டுவிட்டால்தான் அது புரட்டு எனப்படும். இந்த மாதிரிப் புரட்டுக்கள் அந்த நாட்களில் நகரத்தார் கடைகளில் ஏற்படாவாறு இருப்பதற்காகவே நம்பிக்கையும் நாணயமும் உள்ளவர்களை ஏஜண்டுகளாகவும், அடுத்த ஆள்களாகவும் நியமித்தார்கள். ஆகையால் அந்தக் காலத்தில் முதலாளிக்கும் ஏஜண்டுக்குமே நேரடியாகத் தொடர்பு இருந்ததே தவிர, கணக்குப் பரிசோதகர் (Auditor) என்ற ஒருவருக்கு வேலை இல்லாமல் இருந்தது.

1922ம் ஆண்டில் இன்கம்டாக்ஸ் அஸெஸ்மெண்ட் (Income-tax Assessment) அமுலுக்கு வந்ததற்குப் பிறகுதான் நகரத்தார் கடைக்கணக்குகள் கணக்குப் பரிசோதகர்களால் (Auditors) சரிபார்க்கப்பட்டு, அவர்கள் ஒப்புதலுடன் வருமானவரி அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்திருந்தது.

இந்த நூல் முழுமையும் படித்தபிறகு ஒவ்வொரு இடங்களிலும் குறிப்பு என்றும், பேரேடு என்றும் விளக்கிச் சொல்லப்பட்டு வந்திருப்பதை மனதில் கொண்டு இனி வருகின்ற கடைசிப் பகுதியில் ஒரு கடையின் ஒரு மாதக்குறிப்பையும் அதற்குள்ள பேரேடையும், ஐந்துகையையும் விளக்கமாக எழுதிக்காட்டப் பட்டிருக்கிறது.

நகரத்தார்களுடைய கணக்கு வழக்குகள் அனைத்தும் தமிழ் இலக்கங்களாலேயே கையாளப்பட்டுவந்தது என்றாலும், இன்றைய இளைஞர்களுக்கு அந்த இலக்கங்களைப்பற்றி எதுவும் தெரியாது என்பதாலும் இங்கு எடுத்துக்காட்டப்போகும் குறிப்பு, பேரேடு, ஐந்துகை முதலியவைகளில், கணக்கு எழுதுகின்ற முறைகளைத் தவிர, இலக்கங்கள் எல்லாம் இன்றைய புழக்கத்தி லுள்ள நாணய முறைப்படியே கையாளப்பட்டிருக்கிறது.

## அசல் குறிப்பு

### 1920 வருஷம் ஜனவரி மாதம் 14உ முதல் குறிப்பு

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| 14-1-20 | அண்ணுமலையார் வரவு | 136 | 0 | 25 | | |
| | கயிலாச விஞயகர் வரவு | 136 | 0 | 25 | | |
| | தெண்டாயுதபாணி வரவு | 136 | 0 | 25 | | |
| | வைத்தீஸ்வரன் கோயில் வரவு | 136 | 0 | 25 | | |
| | ஐயஞர் வரவு | 136 | 0 | 25 | | |
| | ஆதாய வரவு | 137 | 1 | 00 | | |
| | ஊர் கடை கணக்கு வரவு பழைய கணக்கு வசம் | 138 | 16, 256 | 00 | | |
| | நிலம் கொள்முதல் பற்று தெம்மியோதை குடசுசான்குவின் 1925 - 26 ஆண்டு ஊப்பயிங் 11 நிம்பர் நிலம் ஏக்கர் 5-ம் தாத்துமா 59ம் 14 நிம்பர் நிலம் ஏக்கர் 3ம், தாத்துமா 37ம் 12 நிம்பர் நிலம் ஏக்கர் 3-ம் தாத்துமான 48 ஆக நிலம் ஏக்கர் 12ம் தாத்துமா 44ம் புதுவயல் | | | | | |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| 4-1-20 | செ. ராமசாமி வசம் அக்ஷய வருஷம் மார்கழி மீ 15உ நம்மள் பேரால்கிரையம் வாங்கி இருக்கிற பத்திரம் 1க்கு | 140 | | | 600 | 00 |
| | இதுவும் பற்று மக்கிப்பயின்தை அவுசிக் கோம்குயின் 1930-31 ம் வருஷம் ஊப்பயிங் 55 நிம்பர் நிலம் ஏக்கர் 11ம் தாத்துமா 18ம் மவுசாஞ்சா மவுட்டீங் வசம் பிரசோர்பத்தி வருஷம் வைகாசி மீ 17 உயில் நம்மல் பெயருக்கு கிரையம் வாங்கி இருக்கிற பத்திரம் 1க்கு | 140 | | | 1,673 | 45 |
| | ஆதாய வரவு பிரமாதி வருஷத்துச் சேவா பழைய கணக்கு 23 நிர் நிலம் கொள்முதலுக்கு போப்யுவா டோக்கே வகையரு வசம் வேஞுக சேவா நெல் கூடை 17க்கு 118விலையாக ரொக்கம் வாங்கியது | 137 | 18 | 50 | | |
| | வண்டி வாடகை சிலவு மேற்படிக்கிற வண்டி 1 க்கு வாடகை | 146 | | | 1 | 50 |
| | சில்லரை சிலவு கருப்பையா தாராவாடி போய் வர ரயில் சார்ஜ் சாப்பாட்டு செலவு | 150 | | | 1 | 65 |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| 15-1-1920 | சில்லரைச் செலவு 1 உயில் சுவாமிகள் வரவு வைத்த வகையிலும், ஆதாயவரவு வைத்த வகையிலும் | 150 | | | 2 | 25 |
| | இனத்துக் கணக்கு பற்று 28 நிர் தப்பாம்பிஞ் சையுவா வசம் நகை ரூபாயிடை 0. 9. 0ம் சாமின் பேருல் 2 வட்டிக்கி | 143 | | | 15 | 00 |
| | சீட்டுகாசு வரவு | 145 | 0 | 25 | | |
| | இனத்துக் கணக்கு பற்று 29 நிர் தெம்பி யோதை மாதப்போசாங் வசம் 1 வட்டி அன்டிமேன் 1‘ | 143 | | | 100 | 00 |
| | சில்லரைச் செலவு ராமசாமிச்கு பின் 6 மீக்கு நடப்பு வேட்டிக்க்கு கொடுத்தது | 150 | | | 12 | 50 |
| 16-1-1920 | இனத்துக் கணக்கு வரவு 82 நிர் டுச்சவுங்யுவா தீ மாக்காங் வரவு முதலுக்காக | 143 | 18 | 00 | | |
| | வட்டி வரவு மேற்படியர் வசம் | 144 | 1 | 75 | | |
| | ஊர்கடை பற்று பழ. பெயருக்கு நாளது மீ தந்தி மணியாடரில் அனுப்பியது | 138 | | | 500 | 00 |
| | சில்லரைச் செலவு மேற்படிக்கி சிலவு | 150 | | | 10 | 50 |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| 14-1-80 | நிலச்சேவா வரவு 13 நிர் கொள்முதலுக்கு தவுங்கேளாம் யுவா வசம் வாங்கிய சேவா சிகப்பு நெல் கூடை 85க்கு, 113 விலையாக | 142 | 96 | 00 | | |
| | நெல் கொள்முதல் பற்று மேற்படி வசம் மேற்படி விபரப்படி மேற்படி விலையாக | 139 | | | 96 | 00 |
| | வண்டி வாடகை பற்று தவுங்கோம்யுவா வண்டி 4, ரூ. 4ம் மவுங்நுவேட்டுன் வண்டி 9, ரூ. 9ம் ஆக | 146 | | | 13 | 00 |
| | சில்லரைச் செலவு தருவானுக்கு வாங்கிக் கொடுத்த எவரெடி விளக்கு பல்ப்பு பியாட்டரிக்கி | 150 | | | 3 | 60 |
| 17-1-20 | இனத்துக் கணக்கு வரவு சியாக்குவைன்யுவா வசம் முதலுக்காக | 143 | 20 | 00 | | |
| | வட்டி வரவு மேற்படியார் வசம் | 144 | 4 | 00 | | |
| | நிலச்சேவா வரவு 13 நிர் கொள் முதலுக்கு தவுங்கோயுவா வசம் வாங்கிய சேவா சிகப்பு நெல் கூடைய 61க்கு 103 விலையாக | 142 | 62 | 80 | | |
| | நெல் கொள்முதல் பற்று மேற்படி வசம் மேற்படி விவரப்படி | 139 | | | 62 | 80 |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| 17-1-20 | நிலச்சேவா வரவு 21 நிர் கொள் முதலுக்கு சாசிப்போம்யுவா டோக்கே வசம் வாங்கிய சிகப்பு நெல் கூடை 116-1/2, 103 விலையாக | 142 | 117 | 85 | | |
| | நெல் கொள்முதல் பற்று மேற்படி வசம் மேற்படி விபரப்படி | 139 | | | 117 | 85 |
| | வண்டி வாடகை பற்று தவுக்கோம் யுவா வண்டி 2க்கு ரூ.2ம் சப்பிக்குயின் யுவா வண்டி 6க்கு ரூ.6ம் ஆக | 146 | | | 8 | 00 |
| | இனத்துக் கணக்கு வரவு 45 நிம்பர் தப்பாம்பிஞ்சை கவுங்குயுவா வசம் வட்டி தள்ளி வாங்கியது முதலுக்காக | 143 | 30 | 00 | | |
| 18-1-20 | இனத்துக் கணக்கு வரவு 66 நிர் ஆங்கிட்டர் ம்யுவா வசம் முதலுக்காக | 143 | 25 | 00 | | |
| | இதுவும் வரவு 95 நிர் மேற்படியார்கள் வசம் முதலுக்காக | 143 | 20 | 00 | | |
| | இதுவும் வரவு 78 நிர் கொப்போமால் வசம் முதலுக்காக | 143 | 25 | 00 | | |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| | வட்டி வரவு 66 நிர், ரூ. 2.45ம் 95 நிர் 2ம் 78 நிர் 2. 40 ஆக | 144 | 6 | 85 | | |
| 18-1-20 | நிலவரி கணக்கு பற்று தப்பியோக்கோம்குயின் ஊப்பயிங் 45 நிர் 55நிர் 109 நிர் பீசா 3, தோம் யுவா தக்கி கொம்பேச்சுவே வசம் வரி கட்டியது | 141 | | | 29 | 75 |
| | சில்லரை சிலவு ஸ்டாம்புக்கு | 150 | | | 3 | 00 |
| | ஊர் கடை பற்று பழ. பெயருக்கு அனுப்பியது | 138 | | | 500 | 00 |
| | சில்லரை சிலவு ரெஜிஸ்தர் தபால் செலவு | 150 | | | 1 | 35 |
| 9-1-20 | கைமாற்றுக் கணக்கு வரவு டோங்கு வேத்தேவசம் நெல்லுக்கு அச்சாரம் வாங்கியது | 147 | 50 | 00 | | |
| | சில்லரை சிலவு, நம்மள் 3 நிர் மூன்று கான்கு தாம்பு ரிப்பேர் செய்ய தய்யப்பிஞ்சையுவா கோப்பேகோ வசம் வாங்கிய மூங்கில் 650, ரூ. 45. 50 ம் ஷெடிக்கி வண்டி வாடகை ரூ. 6.50ம், மூங்கில் பார்த்துவர தய்யப்பிஞ்சை போய்வந்த கொத்தேட்டுன் வசம் ரூ. 1ம் மூங்கில் அடைக்க கூலி ரூ. 1ம், பழைய தட்டிகளைப் பிரித்து அப்புறப் படுத்தி சுத்தம் செய்ய கூலி ரூ. 7.15ம், | | | | | |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| | தண்ணீர் மில்லிலிருந்து மூங்கில்களை ஏற்றிப் போக வண்டி வண்டி 12, வாடகை ரூ. 3ம், கொச்சக்கயிறு வீசை 1-1/4க்கு ரூ. 0.75ம் ஆணி வீசை 8, ரூ. 12.45ம் குதாம்புக்கு | | | | | |
| 19-1-20 | பக்கத்திலும் கீழும் தட்டி பின்னியது முளம் 603. முளம் 100, ரூ. 7.50ம் ஆக கூலி ரூ. 45ம், ஆசாரி வசம் முகட்டுத்தகரம் மாற்றவும், தச்சு கூலி ரூ. 12.50 ம் சாணி பூசக்கூலி ரூ. 6 ம் மர வியாபாரியிடம் வாங்கிய 3×1, 4×1, 6×1 3×2, 4×2, சைஸ் மரம் விலையில் ரூ. 42-75 க்கு ரூ. 41ம் ரம்பக்குளியில் இருந்து மரங்களை ஏற்றிவர வண்டி வாடகை ரூ. 1ம் பின்புறம் முட்டு கொடுக்க வாங்கிய 30 பிட்டு தூண் 2, ரூ 7ம் ஷெக்கி வண்டி வாடகை ரூ. 0.50 கூலி ரூ. 0.25 யீனுடின் 14, ரூ. 28ம் காவி வீசை 5½ க்கு ரூ. 2.40ம், யீனு பூசக்கூலி ரூ. 7ம் சிமெண்டு மூட்டை 1/2, ரூ. 1.90ம் கொத்தன் வசம் கூலி ரூ. 1ம் காவல் தர்வான் நாள் 18, சம்பளம் ரூ. 7.20ம் ஆக | 150 | | | 237 | 75 |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| | இதுவும் சிலவு அண்டிமென் 250 ம் சேவா பத்திரம் 250ம் அச்சுபோட தாள் உள்படக்கூலி | 150 | | | 22 | 80 |
| | இதுவும் சிலவு பிஞயில் டின் 1, | 150 | | | 2 | 80 |
| 19-1-20 | ஊர்கடை கணக்கு பற்று பழ. அவர்களுக்கு இன்ஜூரத்தில் அனுப்பியது | 138 | | | 8,000 | 00 |
| | சில்லரைச் செலவு மேற்படி ரூபாய் அனுப்ப தபால் செலவு | 150 | | | 5 | 25 |
| 22-1-20 | இனத்துக் கணக்கு வரவு 12 நிர் காங்கலேயுவா கொதான்னு வசம் முதலுக்காக | 143 | 15 | 00 | | |
| | வட்டி வரவு மேற்படிக்கி வட்டியில் | 144 | 3 | 50 | | |
| | சாப்பாட்டு செலவு கருப்பையா,ராமசாமி சாப்பாட்டுக்கு ரூ. 30ம் வேன் சாப்பாடு ரூ 4.13.0ம் பண்டாரம் சாப்பாட்டுக்கு ரூ. 1ம் ஆக | 149 | | | 35 | 80 |
| | சம்பள சிலவு கருப்பையாவுக்கு நாளது மாதம் சம்பளம் ரூ. 30ம் ராமசாமிக்கு நாளது மாதம் 1க்கு சம்பளம் ரூ. 25ம் கிராணி கோத்தேட்டுங்னுக்கு சம்பளம் ரூ. 16ம் ஆக | 148 | | | 71 | 00 |

| தேதி | விபரம் | பேரேடு பக்கம் | வரவு ரூ. | வரவு பை. | பற்று ரூ. | பற்று பை. |
|---|---|---|---|---|---|---|
| | சில்லரைச் சிலவு கருப்பையா ராமசாமிக்கு வண்ணான் சம்பளம் கொடுத்தது | 150 | | | 1 | 50 |
| | இதுவும் செலவு மேற்படி யார்களுக்கு நாவிதன் சம்பளம் கொடுத்தது | 150 | | | 1 | 00 |
| 22-1-20 | ஊர்க்கடை பற்று பழ. அவர்களுக்கு இன்ஜூரத்தில் அனுப்பியது 100 ரூ. நோட்டு 10 | 138 | | | 1,000 | 00 |
| | சில்லரைச் சிலவு இன்ஜூரக்சவர் செலவு | 150 | | | 2 | 30 |
| | ஆக வரவு பற்று | | 16,772. | 75 | 13,132 | 40 |
| | இருப்பு ரூபாய் | | 3,640 | 35 | | |

உ

சிவமயம்

# 1920 வருஷம் ஜனவரி மாதம் 14௳ முதல் பேரேடு

## சுவாமிகள் கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. | வரவு பை | பற்று ரூ. | பற்று பை |
|---|---|---|---|---|---|---|
| 14-1-1920 | சுவாமிகள் வரவு ரூ. | 130 | 1 | 25 | | |
| | ஆக வரவு ரூ. | | 1 | 25 | | |

## ஆதாய வரவு கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. பை | பற்று ரூ. பை |
|---|---|---|---|---|
| 14-1-1920 | ஆதாய வரவு ரூ. | 130 | 1 00 | |
| | ஆதாய வரவு பிரமாதி வருஷத்துச் சேவா பழைய கணக்கு 23 நீர் நிலம கொள்முதலுக்கு போப்புவா டோக்கே வகையறா வசம் வேனாக சேவா நெல் கூடை 17க்கு 118 விலையாக ரொக்கம் வாங்கியது ரூ. | 130 | 18 50 | |
| | ஆக வரவு ரூ. | | 19 50 | |

## ஊர்க்கடை கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. பை | பற்று ரூ. பை |
|---|---|---|---|---|
| 14-1-1920 | ஊர்க்கடைக் கணக்கு வரவு பழைய கணக்கு வசம் ரூ. | 130 | 16,256 00 | |
| 16-1-1920 | ஊர்க்கடை கணக்கு பற்று பழ அவர்களுக்கு நாளது மாதம் தந்தி மணியார்டரில் அனுப்பியது ரூ. | 131 | | 500 00 |
| 18-1-1920 | ஊர்க்கடைப் பற்று பழ. பெயருக்கு அனுப்பியது ரூ. | 133 | | 500 00 |
| 19-1-1920 | ஊர்க்கடை கணக்கு பற்று பழ. அவர்களுக்கு இன்ஜூரத்தில் அனுப்பியது ரூ. | 134 | | 8,000 00 |
| 22-1-1920 | ஊர்க்கடை பற்று பழ. அவர்களுக்கு இன்ஜூரத்தில் அனுப்பியது 100 ரூ.க்கு நோட்டு 10. ரூ. | 135 | | 1,000 00 |
| | ஆக வரவு பற்று ரூ. | | 16,256 00 | 10,000 00 |
| | பற்று நீக்கி வரவு ரூ. | | 6,256 00 | |

## நிலம் கொள்முதல் கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. பை | பற்று ரூ. பை |
|---|---|---|---|---|
| 14-1-1920 | நிலம் கொள்முதல் பற்று தெம்பியோதை குடகு சான்குஷன் 1925-26 வருஷம் ஊப் பயிங் 11நிம்பர் நிலம் ஏக்கர் 6ம் தாத்துமா 59ம், 14 நிம்பர் நிலம் ஏக்கர் 3ம், தாத்துமா 37ம் 12 நிம்பர் நிலம் ஏக்கர் 12ம் தாத்துமா 44ம் புதுவயல் செ. ராமசாமி வசம் அக்ஷய வருஷம் மார்கழி மாதம் 19உயில் நம்மள்பேரால் கிரயம் வாங்கி இருக்கிற பத்திரம் 1க்கு ரூ. | 130 | | 600 00 |
| | இதுவும் பற்று மக்கிப்பின்தை அவுசிக் கோம்குயின் 1930-31ம் வருஷம் ஊப்பயிங் 55ம் நிம்பர் நிலம் ஏக்கர் 11ம் தாத்துமா 18ம், மவுசாஞ்சா மவிட்டீங் வசம் பிரஜோர்பத்தி வருஷம் வைகாசி மீ 17உ யில் நம்மள் பெயருக்கு கிரையம் வாங்கியிருக்கிற பத்திரம் 1க்கு ரூ. | 130 | | 1,673 45 |
| | ஆக பற்று ரூ. | | | 2,273 45 |

## நெல்கொள்முதல் கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. | வரவு பை | வரவு ரூ. | வரவு பை |
|---|---|---|---|---|---|---|
| 16-1-1920 | நெல்கொள்முதல் பற்று 13 நிர் கொள்முதலுக்கு தவுங்கோம்யுவா வசம் வாங்கிய சேவா சிகப்பு நெல் கூடை 85, 11 ௴ விலையாக ரூ | 131 | | | 96 | 00 |
| 17-1-1920 | நெல் கொள்முதல் பற்று 13 நிர் கொள்முதலுக்கு தவுங்கோம்யுவா வசம் வாங்கிய சேவா சிகப்பு நெல் கூடை 61, 103 விலையாக ரூ. | 132 | | | 62 | 80 |
| | நெல்கொள்முதல் பற்று 21 நிர் கொள் முதலுக்கு சாசிப்போம்யுவா டோக்கே வசம் வாங்கிய சிகப்பு நெல்கூடை 116½, 103 விலையாக ரூ. | 132 | | | 117 | 85 |
| | ஆக பற்று ரூ. | | | | 276 | 65 |

## நிலவரிக் கணக்கு

| தேதி | விபரம் | குறிப்பு பக்கம் | வரவு ரூ. | வரவு பை | பற்று ரூ. | பற்று பை |
|---|---|---|---|---|---|---|
